361

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

தொகுதி-12 எண்-2

30.9.1991

வெளியீடு- 19.6.1992.

D
V211,31'N91
N91.12.2
158380

வெளியீடு 19-5-1992 Issued 19-5-1992

361

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### அலுவலக வெளியீடு

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 24 ஜூலை 92 எழும்பூர், சென்னை-600008

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

### OFFICIAL REPORT

திங்கட்கிழமை, செப்டம்பர் 30, 1991 - தொகுதி 12 - எண் 2
Monday the 30th September, 1991 - Volume 12 - No, 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

30—9—1991.


| | |
|---|---|
| | **பக்கங்கள்** |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 157—198 |
| (ஆ) குறுகிய கால வினா | 198—201 |
| **2. அறிவிப்புகள்.—** | |
| (அ) முதல் துணை மதிப்பீடுகள், 1991-92, மொழிதல் (ஆ.இ.) | 201 |
| (ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.) | 210 |
| (இ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. | 211 |
| (ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1991 (ஆ.இ.) | 212 |
| (உ) 37-வது பாராளுமன்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொண்டபின்னர் சென்னை வந்து பேரவை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுக்குப் பாராட்டு. | 262 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) நான்குநேரி தொகுதியில் உள்ள விஜய நாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து. | 201—204 |
| (ஆ) சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின் விளக்குகள் எரியாதது குறித்து. | 204—206 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 206—208 |

158380
சென்னை-600 00



பக்கங்கள்

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 208—210

(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 210

(இ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991. 211

(ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991. 212

6. தீர்மானம்—

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம். 209—210

7. தனித் தீர்மானம்—

மத்திய அரசு, மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்கள் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்துதல்

| | |
|---|---|
| * மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா | 213—218 |
| | 251—252 |
| | 257—258 |
| | 265, |
| | 320—321 |
| திரு. செ. கு. தமிழரசன் | 218—227 |
| திரு. நா. சா. பழனிசாமி | 228—231 |
| திரு. எஸ். வி. சண்முகம் | 231—233 |
| திரு. எஸ். ஆண்டித் தேவர் | 233—235 |
| திரு. ஜி. பழனிசாமி | 235—238 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 238—244 |
| | 244—247 |
| | 249—255 |
| * திரு. வே. தம்புசாமி | 257—266 |
| * திரு. ச. இராமச்சந்திரன் | 266—270 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 270—[illegible] |
| * திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் | 293—31[illegible] |

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

D (
V211, 3 N91
91.12.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 14, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2022
1991 செப்டம்பர் 30, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் முற்பகல் 9.30 மணி அளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்படவாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்; வினா எண். 108, திருவாளர்கள் ம. சின்னசாமி மற்றும் கி. சாத்தையா, மாண்புமிகு நிதி அமைச்சர்.

108—

சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிடுவதைத் தடுக்க சட்டத் திருத்தம்.

* 218—திரு. ம. சின்னசாமி :

திரு. கி. சாத்தையா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர்களைத் தடுப்பதற்கு சட்டத் திருத்தம் செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கான விடை விவர அறிக்கையின் மூலம் அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது.

**விவர அறிக்கை.**

சுயேட்சை வேட்பாளர் போட்டியிடுவதை அறவே தடுக்க இயலாது. எனினும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களில் சுயேட்சை வேட்பாளர்கள் அதிக அளவில் போட்டியிடுவதைத் தடுக்க தேர்தல் ஆணையம் மத்திய அரசிற்கு பரிந்துரைகளை வழங்கியது. மத்திய அரசு இப்பரிந்துரைகளை நன்கு ஆராய்ந்து, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவினை மாநிலங்கள் அவையில் 30—5—1990 அன்று அறிமுகப்படுத்தியது. இச் சட்டத் திருத்தத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர் ஒருவர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட செலுத்தவேண்டிய வைப்புத் தொகை ரூ. 500-லிருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தப்பட உள்ளது. இத்தேர்தலில் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியைச் சார்ந்த வேட்பாளரும் சுயேட்சை வேட்பாளரும் போட்டியிட செலுத்த வேண்டிய வைப்புத்தொகை ரூ. 500-லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட உள்ளது. இதே போல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர் சட்டமன்ற பேரவைத் தேர்தலில் போட்டியிட செலுத்தவேண்டிய வைப்புத் தொகை ரூ. 250-ல் இருந்து ரூ. 500 ஆக உயர்த்தவும் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரும் சுயேட்சை வேட்பாளரும் இத் தேர்தலில் போட்டியிட செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ. 250-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வேட்பாளர் இத்தொகையில் பாதித் தொகையை வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும். பிற திருத்தங்கள் அடங்கிய இச்சட்ட முன்வடிவு தற்பொழுது மக்களை மற்றும் மாநிலங்களவையின் கூட்டு ஆலோசனைக் குழுவின் ( Joint Select Committee of Parliament ) பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசு, சுயேட்சை வேட்பாளர்கள் அதிக அளவில் போட்டியிடுவதைத் தடுக்க எற்கனவே சட்டதிருத்தம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால், இது குறித்து மத்திய அரசை வற்புறுத்த தேவையில்லை என்று கருதப்படுகிறது.





**திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில், சுயேட்சை வேட்பாளர்களுடைய எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான கேள்வி இது. இது முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியின் மீது மத்திய தேர்தல் ஆணையகம் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து சட்டமுன் வடிவு, ஜாயின்ட் செலக்ட் கமிட்டி ஆப் பார்லிமென்ட்டிலே இருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தப் பரிந்துரையை தேர்தல் ஆணையகம் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்வதற்கு முன்னால், மாநில அரசுகளினுடைய கருத்துக்களைக் கேட்டதா? அப்படிக் கேட்டிருந்தால், நம்முடைய அரசு அதன்மீது என்ன கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலிலே, சட்டமன்றத் தேர்தல் ஆனாலும், நாடாளுமன்றத் தேர்தல் ஆனாலும், இந்த நாட்டினுடைய குடிமகன் ஒருவன் அதிலே கூறப்பட்டிருக்கிற விதிகளின்படி போட்டியிடுவதற்கு தடையே இல்லை. ஆகவே எந்த ஒரு குடிமகனையும் தேர்தலிலே போட்டி போடக்கூடாது என்று தடுத்து நிறுத்துவதற்கு சட்டம் இயற்ற இயலாது. ஏன் என்றால், அடிப்படை உரிமைகள் எல்லோருக்கும் வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் சுயேச்சைகள் அதிகமான எண்ணிக்கையில் போட்டி போடாமல் இருப்பதற்கான விதிமுறைகளையும், மற்றவைகளையும் எந்த அளவிற்குத் திருத்தலாம் என்பதற்காகத் தான் இந்த யோசனைகள் கூறப்பட்டு இருக்கின்றன.

சாதாரணமாக, இந்தத் தேர்தலைப் பற்றிச் சீர்திருத்துவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையினுடைய அடிப்படையிலேதான் மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றி, அதைக் கூட்டுக் குழுவிற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைத்தது. அதன்படி, அவர்கள் எடுத்து இருக்கிற, அத்தகைய நடவடிக்கை, இப்போது இருக்கின்ற வைப்புத் தொகை சட்டமன்ற உறுப்பினருக்கு ரூ. 250-ஆக இருப்பதை ரூ. 500-ஆக்க வேண்டும் என்றும், இப்போது நாடாளுமன்ற உறுப்பினருக்கு இருக்கின்ற ரூ. 500-ஐ ரூ. 1,000-ஆக ஆக்க வேண்டும் என்றும், சுயேட்சைகளாக போட்டி

போகின்றவர்கள், சட்டமன்றத்திலே போட்டி போடுகிறவர்களுக்கு ரூ. 250 ஆக இருக்கின்ற வைப்புத் தொகையை ரூ. 2,500 ஆக சுயேட்சைகளுக்காக ஆக்க வேண்டும் என்றும், நாடாளுமன்றத்திலே ரூ. 500 ஆக இருப்பதை ரூ. 5,000 வைப்புத் தொகையாக ஆக்க வேண்டும் என்றும் சாதாரணமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே இந்த ரூ. 500, 1,000 என்று இருக்க வேண்டுமே தவிர, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் சார்பாக நிறுத்தி வைக்கப்படுகிறவர்களும், சுயேட்சைகளாக நிற்கிறவர்களும், 2,500 ரூபாய் வைப்புத் தொகையாகவும், 5,000 ரூபாய் வைப்புத் தொகையாகவும், அங்கே கட்ட வேண்டும் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் பாராளுமன்றம் இடையிலே கலைக்கப்பட்டுவிட்டதன் காரணமாக அந்தப் பொறுக்குக் குழுவும் பணியாற்ற இயலாமல் போய்விட்டது. மத்திய அரசு இந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யும் என்று நான் கருதுகிறேன். ஆனால் அதைப்பற்றி கருத்துக்களை மாநில அரசைப் பொறுத்தவரையில் கேட்கவில்லை. ஆனால் பொறுக்குக் குழுவினுடைய முடிவுகள் வந்ததற்குப் பிறகு மத்திய அரசு சட்டம் செய்கின்ற நிலையில் எல்லா மாநில அரசுகளினுடைய கருத்துக்களையும் கேட்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தல் காலகட்டத்தில், யாராவது ஒரு வேட்பாளர் இறந்துபோனால், அந்தத் தேர்தலை கவுண்டர் மாண்ட் செய்துவிடுகிறார்கள். அதிலே அரசுக்குப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. வேட்பாளர்களுக்கும் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. என்னுடைய தொகுதிக்கு அருகாமையில் இருக்கிற அரவக்குறிச்சி தொகுதியில், கடந்தமுறை 250 பேர்கள் போட்டி போட்டார்கள். அதிலே, யாராவது ஒரு சுயேட்சை வேட்பாளர் இறந்துவிடுவாரோ என்று ஜாக்கிரதையாக நாங்கள் பாதுகாக்க வேண்டியதாக இருந்தது. ஆகவே, அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர்களைத் தவிர, சுயேச்சை வேட்பாளர்கள் இறந்துபோனால் தேர்தல் கவுண்டர் மாண்ட் செய்யக்கூடாது என்ற கருத்தினை மத்திய அரசுக்கு நம்முடைய அரசு எடுத்துச் சொல்லுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





(முற்பகல் 9-35)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலைப் பற்றி ஆராய்ந்த தேர்தல் சீர்திருத்தக் குழுவினர் எடுத்துச் சொல்லியிருப்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் ரீதியாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற ஒரு வேட்பாளர், தேர்தல் நடக்கின்ற நேரத்தில் இறந்து விடுவாரேயானால், அப்போது வேண்டுமானால் அந்தத் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்றும், ஆனால் அங்கீகரிக்கப்படாத கட்சியைச் சேர்ந்தவர்களோ, அல்லது சுயேச்சைகளோ இறந்துவிட்டால், அதற்காக தேர்தல் முழுவதையும் நிறுத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்கின்ற ஒரு கருத்தையும் அந்தத் தேர்தல் சீர்திருத்தக் குழுவினர் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு சட்டம் உருவாக்குகின்றபோது, இதையும் இணைத்துக் கொள்வார்களேயானால், சுயேச்சைக்குப் பதிலாக வேறு ஒருவரை நிறுத்துகின்ற தன்மை சுயேச்சையைப் பொறுத்தவரையில் இல்லை. ஆனால் ஒரு அரசியல் கட்சி வேட்பாளர் இறந்துவிடுவாரேயானால் அவருக்குப் பதிலாக இன்னொருவரை நிறுத்துவதற்கான தகுதியையும், திறமையையும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் பெற்றிருக்கிறது. ஆக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைத் தவிர, மற்றவர்கள் போட்டி போட்டு, இறந்து விடுவார்களேயானால், அதற்காக தேர்தலையே ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு சட்டம் இயற்றுகின்றபோது இதை மனதிலே வைத்து இயற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**திரு. தி. சாத்தையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தலில் சில கட்சி சம்பந்தமில்லாத சுயேச்சை வேட்பாளர்கள் சுய லாபத்திற்காகவும், சுய விளம்பரத்திற்காகவும் மக்கள் செல்வாக்கு மிகுந்த அரசியல் தலைவர்கள் போட்டியிடுகின்ற தொகுதிகளில் போட்டியிட்டு தேர்தல் இறுதி காலக் கட்டத்தில் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டுவது, அந்தத் தொகுதிகளில் இடைத் தேர்தல் வரக்கூடிய விதத்தில் தேர்தலை தள்ளிப் போடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் வேட்பாளர்களுக்கும் அரசுக்கும் இரட்டிப்பு செலவை ஏற்படுத்துகிறது. இதைத் தடுப்பதற்கு சட்டத் திருத்தம் செய்ய தமிழக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1991 செப்டம்பர் 30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தல் பற்றிய, விதிமுறைகளைப் பற்றிய சட்டங்களை இயற்றக் கூடிய அதிகாரம், மத்திய அரசினிடத்திலேயும், தேர்தல் குழுவினிடத்திலேயும் தான் இருக்கிறது. நான் முதலிலே சொல்லிய படி, இந்த நாட்டிலே பிறந்து 25 வயதான எந்த ஒரு குடிமகனும் தேர்தலில் நிற்பதற்கு அடிப்படை உரிமையிருக்கிறது. ஆக அந்த விதிமுறைகளுக்கு மாறாக எந்த ஒரு சுயேச்சையும் போட்டி போடக்கூடாது என்று தடுப்பதற்கு சட்டத்திலே இடமேயில்லை. கூடுமான வரையில் சுயேச்சைகளை போட்டி போட முடியாத, தவிர்க்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமா என்பது தான் இப்போது தேர்தல் சீர்திருத்தக் குழுவினுடைய யோசனையாகும். ஆகவேதான், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் ரூ. 500 வைப்புத் தொகை வைத்தால், இவர்கள் ரூ. 2,500 வைப்புத் தொகை வைக்க வேண்டுமென்றும் இருக்கிற நிலையிலே, இன்னும் வேண்டுமானால் ஒரு யோசனையை நாம் சொல்லலாம். சுயேச்சையாக நிற்பவர்கள் பதினாயிரம் ரூபாயாவது கட்ட வேண்டுமென்று இதை வேண்டுமானால், இன்னும் கொஞ்சம் தூக்கி விட்டு அதிகமான பேர்கள் வராமல் இருப்பதற்கு வேண்டுமானால், நாம் வழிவகை கூறலாம். இப்போது அவர்கள் கூறியிருக்கின்ற அத்தகைய பரிந்துரை நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் ரூ. 5,000 கட்டவேண்டும். சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் ரூ. 2,500 கட்ட வேண்டுமென்று தான் இப்போது அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதை வேண்டுமானால் மாநில அரசின் சார்பாக யோசனை சொல்கின்றபோது, சுயேச்சையே இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காத அளவிற்கு செய்ய வேண்டுமென்றால் இந்தத் தொகையை வேண்டுமானால் நாம் தூக்கி வைக்கலாம். இந்தச் சட்டத்தை இயற்றுகின்ற அல்லது திருத்துகின்ற உரிமை நமக்கு இல்லை. மத்திய அரசுக்கு வேண்டுமென்றால் நாம் பரிந்துரை செய்யலாம்.

திரு. கி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதியிலும் சுயேச்சை வேட்பாளர்களுக்காக, கிட்டத்தட்ட 200, 300 சின்னங்கள் பொறிக்கப்பட்ட வாக்குச் சீட்டுத் தேவைப்படுவதால் வாக்காளர் பெருமக்கள் ஓட்டு போடுகின்றபோது, சின்னங்களைத் தேடித் கண்டு



1991 செப்டம்பர் 30]

பிடிக்க மிகவும் சிரமப்படுவதோடு, செல்லாத ஓட்டுக்களும் அதிக மாகின்றன. இதனால் மக்கள் செல்வாக்கு பெற்ற அரசியல் கட்சி வேட்பாளர்கள் அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டியவர்கள் குறைவான ஓட்டுகள் வித்தியாசத்திலே வெற்றி பெறுகிறார்கள். இவைகளைத் தடுக்க இந்த பாயின்டையும் கருத்திற்கொண்டு, நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறிய படி சுயேச்சை வேட்பாளர்களை போட்டி போடக் கூடாது என்று தடுத்து நிறுத்துவதற்கு அடிப்படை உரிமைகள் சட்டத்திலே இட மில்லை. ஆனால் சுயேச்சை வேட்பாளர்கள் போட்டி போடுகிறபோது 200 பேர் என்றும் இருநூற்று இல்லை பேர் என்றும், சட்டத்திற்கு உள்ளே இருக்கும் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொண்டு அவர்கள் போட்டி போட்டு சங்கடத்தை விளைவிக்கிறார்கள். 200, 300 பேர் என்று அவர்களாகவே கூட போட்டி போடுவதில்லை. சிலர் தூண்டி விட்டுத்தான் ஆங்காங்கே அந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. அவர்களுடைய நோக்கமே அரசுக்கும் மற்றவர்களுக்கும் சங்கடங் களை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். ஆனால் ஏராளமான சின்னங்கள் இருப்பதன் காரணமாக, அதில் தனக்குரிய சின்னத்தைத் தேர்ந்தெடுத்து முத்திரையிட்டு வாக்களிப் பதற்கான சிரமங்கள் வாக்காளர்களுக்கு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு தேர்தல்களை கிட்டத்தட்ட 9, 10 தேர்தல்களை பொது மக்கள் சந்தித்து விட்டதன் காரணமாக, எது எப்படி நடந்தாலும் கூட மக்கள் மிகத் தெளிவாகத்தான் இருக்கிறார்கள் என்பதை அரவக் குறிச்சி தேர்தலும் காட்டிற்று, பள்ளிப்பட்டு தேர்தலும் காட் டிற்று. இரண்டு தொகுதிகளிலும் நடைபெற்ற தேர்தலில் நூற்றுக் கணக்கானவர்கள் நின்றார்கள். மக்கள் அவ்வளவு சின்னங்களையும் தேடி எடுத்து தான் யாருக்கு முத்திரை இட வேண்டும் என்ற நிலைமையிலே தெளிவாகத்தான் போட்டிருக் கிறார்கள் என்று முடிவுகள் நமக்கு தெரிவிக்கின்ற காரணத்தால், மக்கள் மிகத் தெளிவாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் மற்ற வர்கள் தான் தேர்தலில் போட்டி போடுகின்றவர்கள் தான்,

குழப்பிக் கொண்டு இருக்கிறார்களே தவிர மக்கள் மிகத்தெளிவாகத்தான் இருக்கிறார்கள் என்பதை முடிவுகள் காட்டிக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுயேச்சை வேட்பாளர்கள் தானாக இறந்து போனாலும் அல்லது தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாலும் தேர்தலை தள்ளி வைக்கக் கூடாது என்ற யோசனையை சொல்லி இருக்கிறார்கள். அதேநேரத்தில், சிலர் தேடிப்போய் சுயேச்சை வேட்பாளரை கொலை செய்து விட்டால் தேர்தல் நின்று விடும், தள்ளி வைத்தால் எதிரி தோற்றுவிடுவான் என்று தேடிப் போய் கொலை செய்கிறார்கள். கடந்த தேர்தலில் என் தொகுதியிலே கூட சுயேச்சை வேட்பாளரை, அவர் விரட்ட இவர் ஓட, இவர் தேட, அவர் ஓடி ஒளிந்துக் கொள்ள, பிறகு நாங்கள் அவரை காப்பாற்றி தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதையெல்லாம் மனத்தில் கொண்டு மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, சுயேட்சை வேட்பாளர்கள் இறந்து விட்டால் தேர்தல் ஒத்தி வைக்கப்படும் என்ற நிலை இருப்பதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. சுயேட்சை வேட்பாளர்கள் பொறுத்தும் அங்கீகரிக்கப்படாத கட்சியைச் சார்ந்த வேட்பாளர்கள் குறித்தும், யார் இறந்துவிட்டாலும் அவர்கள் எக்காரணம் கொண்டு இறந்து விட்டாலும், எந்த நிலையிலே அவர்கள் இறந்து பட்டாலும், அவர்களுக்காக தேர்தலை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் எந்தக் கட்சியையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்ற காரணத்திற்காகத்தான் கொண்டு வரப்படுகிறது. இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று, ஒரு தேர்தலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கருதுவார்களேயானால் ஆஸ்பத்திரியிலே போய் பார்த்து அங்கே நோயாளிகளாக படுத்திருப்பவர்களை, அவர்களிலே இன்றோ நாளையோ என்று



படுத்து இருப்பவனைப் போய் பார்த்து தேர்தலிலே நிறுத்தி வைக்க வேண்டும் என்ற தந்திரத்தை கையாளுவார்களேயானால், வேறு இடங்களிலேகூட போய் தேடமாட்டார்கள், ஆஸ்பத்திரியிலே போய் தேடிக் கண்டுபிடித்து சுயேட்சை வேட்பாளராக நிறுத்துவார்கள். ஆகவே இவற்றையெல்லாம் தடுப்பதற்கு சுயேட்சை இறந்துவிட்டால் தேர்தலை தள்ளி வைக்கக் கூடாது என்று எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். தேர்தல் சீர்திருத்தக் குழுவும் வற்புறுத்தியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலிலே போட்டியிடுவது ஒரு குடிமகனுடைய உரிமை என்றாலும், ஒரு முறை சுயேட்சையாக போட்டியிட்டு டெபாசிட்டை இழக்கின்ற வேட்பாளர் மீண்டும் அவருடைய ஆயுட்காலம் முழுவதும் தேர்தலிலே போட்டியிடக் கூடாது என்ற கருத்தினை தேர்தல் பொறுப்புக் கழகம் மூலமாக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடு ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கொண்டது. எல்லோருக்கும் ஒத்த உரிமைதான் வழங்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலை இருப்பதன் காரணமாக அந்த உரிமையை எக்காரணம் கொண்டும் தடுத்து நிறுத்த முடியாது. தடுத்து நிறுத்தினாலும் கூட உச்ச நீதிமன்றம், வழங்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் அந்தச் சட்டத்தை செல்லுபடி ஆகாமல் ஆக்கத்தான் செய்யும். ஆனால் கூடுமானவரையில் சுயேட்சை போட்டியிடுவதை தடுக்கும் சூழ்நிலையை எப்படி ஏற்படுத்தினால் அவர் போட்டி போடுவதைத் தவிர்க்க முடியுமோ அதைத்தான் நாம் செய்ய முடியும். அதைத்தான் தேர்தல் சீர்திருத்தக் குழுவும் மத்திய அரசும் மீண்டும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. எச். எம். ராஜு.

(முற்பகல் 9.45)

**திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தேர்தலிலே, அநேக சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் 2 வேட்பாளர்கள் ஒரு ஓட்டு கூட வாங்கவில்லை. அவர்களுடைய ஓட்டையே அவர்கள், அவர்களுக்கு போடவில்லை. இந்த மாதிரி வேட்பாளர்களைக் கண்டிப்பாக அவர்களுடைய ஆயுட்காலம் முழுவதும் அவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று நமது அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி அடிப்படை உரிமையைப் பொறுத்து யார் ஒருவரையும் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு ஓட்டு வாங்காவிட்டாலும் கூட அவர்கள் இப்போது இருக்கின்ற விதிமுறையின்படி நிற்க உரிமை உள்ளது. ஆக அவர்கள் நிற்கும்போதே தான் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அவர்கள் நிற்கவில்லை என்பதும், சங்கடம் கொடுப்பதற்காகத்தான் அவர்கள் நின்று இருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்திலிருந்தே தெளிவாகத் தெரிய வருகிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. துரை ராமசாமி.

**திரு. துரை ராமசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சுயேட்சை வேட்பாளர் இறந்துவிட்டால் தேர்தலை நிறுத்துகின்றபோது அங்கீகரிக்கப்பட்ட கட்சியினுடைய வேட்பாளர் மிகவும் பாதிக்கப்படுகிறார். அரசாங்கத்திற்கும் அதனால் பாதகம் ஏற்படுகின்றது. இது மிக முக்கியமான விஷயமாக இருக்கின்ற காரணத்தினாலே சுயேட்சை வேட்பாளர்களும், அங்கீகரிக்கப்படாத வேட்பாளர்களும் இறந்தால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்கின்ற கருத்தை இந்தச் சட்டப் பேரவையில் தீர்மானமாக நிறைவேற்றி இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்த முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி மத்திய அரசே இதில் அக்கறை கொண்டு சட்டத்தையும் கொண்டு வந்து அதை பொறுக்குக் குழுவிற்கு விட்டிருக்கிறது என்கின்றபோது, நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த கருத்துக்கு மத்திய அரசே வந்திருக்கிறது. அதை சட்டமாக இயற்றி நடைமுறைக்கு கொண்டு வருகின்ற போது நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் ஈடேறும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வினா எண். 109. டாக்டர் ச. சுந்தரராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

109—

### ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத் திடல்.

** 1676—டாக்டர் ச. சுந்தரராஜ் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாணவ, மாணவியர் விளையாட்டுப் பயிற்சிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை தவிர 12 மாவட்ட தலைநகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஈரோட்டில் முடியும் தருவாயில் உள்ளது. விருதுநகர் மற்றும் தூத்துக்குடியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. மேலும் மற்ற மாவட்ட தலை நகரங்களில் நிதிநிலைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**டாக்டர் ச. சுந்தரராஜ் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில்தான் தமிழகத்தை தாய்நாடு என்று சொல்கின்ற அளவிற்கு தேசபக்தி மிக்கவர்கள் என்னுகின்றார்கள். ஆகவே தமிழ்நாடு, அந்தத் தாய்நாடு சுபிட்சமாக வாழ்வதற்கு

உடற் பயிற்சி அவசியம். ஆகவே உடற் பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இன்னும் மாவட்ட தலைநகரங்களில், கட்டாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த உடற் பயிற்சி விளையாட்டு மைதானங்கள் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் விளையாட்டு அரங்கங்கள் இல்லாத மாவட்ட தலைநகரங்கள் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் எல்லாம் இடங்கள் ஒதுக்கப்பெற்று அதற்கான திட்ட வரைபடங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று மிக விரைவிலே இந்த மாவட்ட தலைநகரங்களில் எல்லாம் விளையாட்டு அரங்கங்கள் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ச. சுந்தரராஜ் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி மாணவர்கள் ஆசிய மற்றும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக அரசு ஏதேனும் திட்டங்களை வைத்துள்ளதா? அதோடு இந்த விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் விளையாட்டுப் பயிற்சிகளைக் கட்டாயப் பாடமாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளி வகுப்புகள் அளவில் சிறுவர்கள் பிரிவில் இரண்டு பிரிவுகளும், அதற்கு, மேல்நிலை, உயர்நிலை கல்வி மட்டங்களிலே இரண்டு பிரிவுகளும் இப்படி எல்லா வகையைச் சார்ந்தவர்களுக்கும் இந்த உடற்பயிற்சிகளில், விளையாட்டுக்களில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நம்முடைய சிறுவர், சிறுமியர், தேசிய அளவிலே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று சிறப்பான வெற்றிகளைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆகவே தொடர்ந்து அந்த வகையில் நாம் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். அதன்பேரில் நான் இந்த விளையாட்டுத் துறைக்கு என்று தனியாக விளையாட்டு



வளர்ச்சிக் கழகம் என்று ஒன்றை உருவாக்கி அதிலே பொது மக்களையும் பங்குபெற வைத்து அதற்கான ஊக்கமும், முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பெற்று, சிறந்த இளைஞர்களை, ஆண்களை, பெண்களை விளையாட்டுத் துறையிலே உருவாக்குகின்ற முயற்சியில் தமிழகம் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகிறது.

முற்பகல் 9.50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் மாணவ, மாணவியர்களை உற்சாகப்படுத்துகின்ற நோக்கில் ஸ்பெசலைஸ்டு செய்து இன்னின்ன விளையாட்டுகளுக்கு இந்த இந்த தகுதியின் அடிப்படையில் இவர்கள் தேர்வு செய்யப்படுகின்ற வகையில் ஏதாவது திட்டம் அரசுக்கு உள்ளதா? அதேபோல் நமது மாவட்டத்திற்கு சிறப்பு வாய்ந்த கபடிப் போட்டியில் கழிந்த முறையில் ஆசிய விளையாட்டுப் போட்டிக்குச் சென்று நம்முடைய ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் அங்கே போட்டியில் வெற்றிப்பெற்று தங்கப் பதக்கம் பெற்று வந்திருக்கிறார்கள். அதேபோல் நமது மாவட்டத்திற்கு என்று ஸ்பெசலைஸ்டு செய்து இருக்கக்கூடிய கபடி விளையாட்டில் இப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அளவில் எந்த எந்தப் பகுதிகளிலே மாணவர்கள், இளைஞர்கள் இந்தப் பயிற்சிகளில் மிகுந்த அக்கறைக் காட்டுகிறார்கள். திறமைப் பெற்றவர்களாக விளங்குகிறார்கள் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கத் தொகை எல்லாம் வழங்கி உற்சாகப்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் இந்தக் கபடிப் போட்டியில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றவர்களை பாராட்டுகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. முன்னாள் சிறந்த

விளையாட்டு வீரர்களாக விளங்கியவர்களுக்கு எல்லாம் அரசு வீடு கொடுத்து, வீட்டுக்கான நிலங்கள் கொடுத்து ஊக்கப்படுத்திக் கொண்டு வருகிறது. ஆகவே, எல்லா வகைகளிலும் இளைஞர்களை விளையாட்டுத் துறையிலே, உடற் பயிற்சித் துறையிலே மிகுந்த சிறப்பு மிக்க வீரர்களாக ஆக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டு வருகிறது. ஆனால் கட்டாயப்பாடமாக இல்லை என்று நான் கருதுகிறது. ஆனால் கட்டாயப்பாடமாக இல்லை என்றுநான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் அ. ஸ்ரீதரன்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளிக்கூடத்திற்கு அத்தியாவசியமான விளையாட்டு மைதானம், டாய்லெட் போன்றவைகள் இல்லாமல் கூட கீழே கடை, மேலே ஒரு வீட்டில் அல்லது ஒரு கட்டிடத்தில் மெட்ரிகுலேஷன் ஸ்கூல் என்பதை வைத்துக்கொண்டு பள்ளிகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அரசாங்க அங்கீகாரம் வேண்டும் என்று அனுப்பியிருக்கிறார்கள். இவர்கள் மீது பொதுமக்கள் புகார் கொடுத்தால் சட்டமன்ற உறுப்பினர் இல்லாமலேயே அதிகாரிகளிடத்தில் நாங்கள் அங்கீகாரம் வாங்கிவிடுவோம் என்று சொல்லுகிறார்கள். இந்த அரசு ஆய்வு செய்து இதுபோன்ற பள்ளிகள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா விளையாட்டுத் திடலைப் பற்றியது. டாக்டர் (திருமதி) வெ. சரோஜா.

**டாக்டர் (திருமதி) வெ. சரோஜா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மாணவ, மாணவியர்கள் இடத்திலே ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டும் குறிப்பிட்ட விளையாட்டுகளில் மட்டும் வீராங்கனைகளாக, வீரர்களாக திகழ்ந்து பரிசுப் பெறுகிறார்கள். ஆனால் எதையும் ஆரம்பத்திலேயே நாம் சட்டமுன் வடிவாகவோ அல்லது கட்டாயப் பாடம் ஆக்கினால் தான் அதில் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும்





இருக்கும். ஆகவே, இந்த விளையாட்டு உடற்பயிற்சியை கட்டாயப் பாடமாக ஆரம்பப் பள்ளிகளிலிருந்தே கொண்டுவர அரசு ஆவண செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளையாட்டுப் பயிற்சியையும், உடற் பயிற்சியையும் கட்டாயப் பாடமாக கல்வியிலே இணைக்கவேண்டுமென்ற திட்டம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அந்த விவரங்கள் என்னிடத்தில் முழுமையாக இல்லை. ஆனால் இவைகள் கல்வியினுடைய ஒரு பகுதியாக இன்றைக்கு வைக்கப்பட்டு வருகிறது என்பதால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போன்று விளையாட்டிற்கென்று இடம் இல்லாத சூழ்நிலையிலும் பள்ளிகளுக்கு அனுமதிகள் மறுக்கப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டுக்கென்று ஒரு இடமே, தேவையில்லை, அதற்கு விதிவிலக்கு கொடுங்கள் என்றும் கேட்கிறார்கள். இல்லை கண்டிப்பாக வேண்டும் என்று சொன்னால் நீதிமன்றத்திலே போய் அனுமதி பெற்றுக்கொண்டு வந்து விடுகிறார்கள். நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இப்படி விளையாட்டுக்கு என்று எல்லாம் இடம் இல்லாமல் மக்கள் நெருக்கடியாக இருக்கின்ற நகரங்களில் விதிவிலக்கு தர முடியுமா என்று எல்லாம் கேட்டார்கள். இப்போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விளையாட்டைக் கட்டாயக் கல்வித் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இது மிகுந்த பரிசீலனைக்கு உரிய ஒன்று. விளையாட்டு என்பதும், உடற் பயிற்சி என்பதும் கல்வியோடு இணைந்த ஒன்று என்பதையும், உலகம் முழுவதும் இந்தத் திட்டம் இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் உடல் வலிவோடும், மன வலிவோடும் இளைஞர்கள் இருந்தால்தான் அவர்கள் சிறந்த எதிர்கால குடிமக்களாக விளங்குவார்கள் என்பது மட்டுமல்ல சிறந்த கல்விமான்களாகவும் ஆக முடியும் என்பதுதான் இன்றைக்கு உடல் கூறு வல்லுநர்கள் கண்டுபிடித்து நமக்கு அறிவித்து இருக்கிற கொள்கைகள். ஆகவே, அதையொட்டி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9.55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 110. திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

110—

## உணவுக் கடத்தல் தடுப்புகாவல் துறையை ஏற்படுத்துதல்.

*1462 திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உணவுப் பொருட்களை பதுக்குவதால் விலையேற்றம் ஏற் படுவதைத் தடுக்க உணவுக் கடத்தல் தடுப்புக் காவல் துறையை F oo Cell ) மீண்டும் நியமிக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் ஏற்கனவே உணவுக் கடத்தலைத் தடுக்க குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை (Civil Supplies C.I.D.) செயல்பட்டு வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டு வந்த இந்தத் துறை எப்போது கலைக்கப்பட்டது என்கிற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை கலைக்கப்பட வில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தடுப்புக் காவல் துறை மாவட்ட அளவில், எந்தெந்த தகுதி நிலையில் எத்தனை பேர் இருக் கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும். ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது குறித்த விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு கடத்தல் தடுப்புப் பிரிவு என்பது தற்போது அமலில் இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் தேவையான அளவில் அந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கை இல்லை. மாவட்டத்திலே ஒரு உணவு தடுப்புக் காவல் துறை கண்காணிப்பாளரும், துணை கண்காணிப்பாளரும், ஒரு ஆய்வாளரும், ஒரு துணை சார்பு ஆய்வாளரும் மட்டுந்தான் இருக்கிறார்கள். அதுவும் ஒரே மூமாக ஒரே இடத்திலே, மாவட்டத் தினுடைய தலைமையிடத்தில் மட்டுந்தான் இருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரிவுக்கு கூடுதலாக அதிகாரிகளை நியமித்து இரண்டு மூன்று பிரிவுகளாக அவர்களுக்கு தலைமையிடங்களை அமைத்து, குறிப்பாக, மாவட்டத்தினுடைய எல்லையோரங்களில் இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் நம்முடைய மாநில எல்லையோரங்களில் அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில எல்லையோரங்களில் இந்தப் படை நன்றாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மாவட்ட எல்லை யோரங்களிலேயிருந்து இந்த பிரிவுகள் இன்றைக்கு மாநில எல்லை யோரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அவைகளிலே உறுப்பினர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது குறித்து குறிப்பு இல்லையே தவிர இதிலே மாவட்டத்திற்கு ஒரு குழு வீதம் இன்றைக்கு செயல் பட்டுக் கொண்டு வருகிறது.

[1991 செப்டம்பர் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.**

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு தடுப்புக் காவல் துறையினர் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், கலைக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கலைக்கப்படவில்லை என்று சொன்னாலும் அவர்களுக்கு முன்பிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டு வெறும் தடுப்புக்காவல் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஒரு பிரிவினை எடுத்து ரெவின்யூ அதிகாரிகளிடம் கொடுத்ததன் காரணமாக அவர்கள் எபெக்டிவ்வாக செயல்படவில்லை. அதாவது அவர்களிடம் சில கருவிகள் இல்லை. கேரளத்திற்கு கடத்துகிறார்கள் என்று சொன்னால் ரெவின்யூ அதிகாரிகளால் அதைத் தடுக்க முடியவில்லை. போலீஸ் அதிகாரிகளிடம் மைக் போன்ற கருவிகள் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக அவர்களைத் தொடர்ந்து சென்று பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, முன்பிருந்த அதிகாரத்தை அந்தத் துறைக்கு வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில் நம்மால் ரேஷன் கடைகள் மூலம் கொடுக்கப்படுகின்ற உணவுப் பொருள்களினுடைய நடமாட்டத்தை இந்தக் குழு மிகச் சிறப்பாக இன்றைக்கு கண்காணித்துக் கொண்டு வருகிறது. சில்லரை விற்பனைக் கடைகளுக்கு எடுத்துச் செல்கின்றபோது நடைபெறுகிற சில திருட்டு, கொட்டுதல், கலப்படம் முதலியவற்றையும் இந்தக் குழு கண்காணித்துக் கொண்டு வருகிறது. அதிக அதிகாரங்கள் ஒரு காலத்திலே இருந்தது உண்மைதான். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள்படி சில வரையறைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு தற்போது அவர்கள், சிறு திருட்டு, கொட்டுதல், கலப்படம் நடமாட்டம் ஆகியவைகளை கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள்.



1991 செப்டம்பர் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.**

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உணவுப் பொருட்கள் பதுக்கலை தடுப்பது சம்பந்தமாக இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவால் இது வரையில் எத்தனை கேஸ்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக எவ்வளவு பொருட்கள் தடுக்கப்பட்டு அரசு மூலமாக கைப்பற்றப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே அப்படி நடைபெற்ற குற்றங்கள் கண்காணிக்கப்பட்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைத் தருகிறேன்.

முற்பகல் 10.00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 111 ; திரு. எஸ். எஸ். ராமசுப்பு; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

111—

**போக்குவரத்துக்கழகப் பணிமனைகள்.**

* 1193 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகப் பணிமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவாகச் செயல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பணிமனை அமைப்பதற்கான நிலத்தைக் கையகப் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தியபின் பணிமனை நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே பணிமனை அமைக்கும் திட்டம் இருக்கிறது என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை நாங்கள் கோரி வருகிறோம் —ஆலங்குளத்திலிருந்து, அம்பாசமுத்திரம், தென்காசி, அதே போல் திருநெல்வேலி, எங்களுடைய பகுதியான வீராணம், வி. கே. புதூர், உக்கிரன் கோட்டை, வாணூர் வரை இந்தப் பணிமனையை அமைத்தால், அங்குள்ள பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஏனென்றால், டவுன் பஸ் வசதி இல்லாததினால், மக்கள் எல்லாம் பெருந்தொல்லைக்கு உள்ளாகிறார்கள். அங்கே பணிமனை அமைக்கப்பட்டால், எல்லோருக்குமே வசதியாக இருக்கும். திருநெல்வேலிக்கும், தென்காசிக்கும் மத்தியில் ஒரு முக்கியமான 'சென்ட்டராக' ஆலங்குளம் இருப்பதினால், இந்தப் பணிமனையை மிகத் துரிதமாக கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே உள்ள சர்வே எண் 219-இல் 5 ஏக்கர் நிலம்—புறம்போக்கு நிலம்—ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வழித்தடங்கள் இல்லையென்ற காரணத்தினால், அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைந்து அந்தப் பணிகள் செயல்படுத்தப்படும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 219 சர்வே எண்ணில், வழித் தடம் இல்லையென்று சொன்னார்கள். அதற்கான வழி [illegible]



களை இப்போது நாங்கள் அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கிறோம். வழிகளை நாங்கள் வாங்கிக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறோம் என்பதையும் சொல்லி, சீக்கிரமாக அதை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற, தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், ஆங்காங்கே பணிமனைகள் அமைத்து, அத்தனை இடங்களுக்கும் நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்ற தம் எண்ணக் கனவுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதை, இந்த போக்குவரத்துத் துறை விரைவாக செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 112, திரு. காஞ்சி பன்னீர்செல்வம் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

112—

* 1756 **திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :**
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உத்திரமேரூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நன்றி. எங்களுடைய உத்திரமேரூர் பகுதியிலிருந்து, திண்டிவனம், திருவண்ணாமலை, வந்தவாசி, காஞ்சி

[திரு. காஞ்சி பன்னீர்செல்வம்] [1991 செப்டம்பர் 30

புரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், சென்னை வரையிலே பல்வேறு பகுதிகளிலே எல்லா வழித்தடங்கள் பஸ்களும் அந்த வழியிலே தான் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, 'ஆம்' என்று சொல்லியிருக்கிற அமைச்சர் அவர்கள், கூடியவிரைவிலே பணி மனை அமைத்துத் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலினுடைய நிலம் காரணத்தினால், அந்த நிலத்தை உடனடியாக ஆர்ஜிதம் செய்து, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, போக்குவரத்து நிர்வாக இயக்குநர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

**திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு பகுதிகளிலே, இதய தெய்வம், முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே, பேருந்துகள் விட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விரைவிலே அந்தப் பணிமனையை அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைப்பாரா என்று வினாவாகக் கேளுங்கள்.

**திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :** அமைப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** நிலம் கையகப் படுத்தப்பட்டவுடன், ஒரே மாத காலத்தில், அந்தப் பணியினைத் துவக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 113; டாக்டர் வெ. புருஷோத்தமன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.



1991 செப்டம்பர் 30]

113—

**பம்புசெட்டுக்கு மின்இணைப்பு கோரி விண்ணப்பங்கள்.**

* 1055 டாக்டர் வெ. புருஷோத்தமன் :

திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாய பம்புசெட்டுக்கு மின் இணைப்பு வேண்டி ஆண்டுவாரியாக எத்தனை விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன ?

(ஆ) உணவு உற்பத்தியைக் கருத்தில் கொண்டு கால தாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று தனியே அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை.**

(அ) 31—12—1990 வரையான, விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்இணைப்பு வேண்டி வாரியத்திடம் நிலுவையிலுள்ள ஆண்டு வாரியாக விண்ணப்பங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1977—78 | 58 |
| 1978—79 | 398 |
| 1979—80 | 6,097 |
| 1980—81 | 8,248 |
| 1981—82 | 10,222 |
| 1982—83 | 10,850 |
| 1983—84 | 9,429 |

[டாக்டர் வெ. சரோஜா] [1991 செப்டம்பர் 30

| | |
|---|---|
| 1984—85 | 82,368 |
| 1985—86 | 28,583 |
| 1986—87 | 44,588 |
| 1987—88 | 1,04,845 |
| 1988—89 | 69,733 |
| 1989—90 | 62,540 |
| 1990—91 | 40,639 |
| மொத்தம் | 4,78,207 |

(ஆ) உணவு உற்பத்தியைக் கருத்தில் கொண்டு காலதாமதத்தைத் தவிர்க்க தனித்திட்டம் ஏதுமில்லை, ஆயினும் அரசால் சிறப்பு உணவு உற்பத்தித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் மாவட்டங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்ற மாவட்டங்களைவிட அதிக விவசாய மின்இணைப்புகள் தரப்பட்டு வருகின்றது.

**டாக்டர் வெ. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், இதற்காக சிறப்பு திட்டம் இல்லையென்று கூறப்பட்டுள்ளது. தற்போது, மின்சார வாரியம் 15 நாட்களுக்கு முன்பு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் 'ஆன் லைன் சர்வீஸ்' முறைப்படி, பம்பு செட்டுகளுக்கு 100 அடிகளுக்கான கிணறுகளுக்கு, கம்பம் இல்லாமல், மின் பாதைகள் இல்லாமல் உள்ள மின் பம்பு செட்டுகளுக்கு, மின் இணைப்பு கொடுக்கலாம் என்று ஒரு விதி தற்போது அமலுக்கு வந்துள்ளது. ஆகவே, இந்த விதிகளைப் பயன்படுத்தி 12 ஆண்டுகள் வரை எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியிலே, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டிய



1991 செப்டம்பர் 30]

விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. அந்தப் பகுதி 80 சதவீதம் மானாவாரி நிலங்களாகவும், 20 சதவீதம் நீர்ப்பாசன வசதிகள் உள்ள பகுதியாகவும் இருப்பதால் டீசல் தட்டுப்பாடு, டீசல் வினியோகம் மற்றும் டீசல் தாம் ஆகிய குறைகளினால் சிறிய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த 'ஆன் லைன் சர்வீஸ்' முறைப்படி மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கேள்வி விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டி எத்தனை விண்ணப்பங்கள் நிலுவையாக உள்ளன என்றுதான் கேட்டிருக்கின்றார்கள். இருந்தாலும், உறுப்பினர் இதற்கு சம்பந்தபட்ட சில கேள்விகளைக் கேட்டிருக்கின்ற காரணத்தாலே நான் இங்கே இந்த அவையிலே சிலவற்றைத் தெரிவிப்பது சரியென்று கருதுகிறேன்.

இங்கே 100 அடி தூரத்திலே இருக்கின்ற கிணறு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்கான ஒரு நடவடிக்கையை மின்சார வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே 1:4 சிஸ்டம் என்று வைத்திருக்கிறார்கள். அந்த 1:4 சிஸ்டத்திலிருந்து மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆகவே, விவசாயி பம்பு செட்டுகளுக்குத் துரிதமாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. எந்தெந்தப் பகுதியிலே அந்த மின் இணைப்பு வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே தெரிவிப்பார்களேயானால், உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு ஏற்கனவே மின்சார வாரியம் அறிவித்திருக்கின்றபடி மின் இணைப்பு உடனடியாகத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 30

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது 1:4 சிஸ்டத்தில் விரைவாகப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகின்றன என்பதைச் சொன்னார்கள். ஆனால் அதை இன்னும் துரிதப்படுத்த வேண்டும். பல கிராமங்களில் இந்த 1:4 சிஸ்டத்தில் கூட இன்னும் பெண்டிங் அதிகமாக இருக்கின்றன. இதை நீங்கள் துரிதப்படுத்தவேண்டும் என்பதையும், அதைப்போல ஜீவன்தாரா கிணற்றை வெட்டிவிட்டு, அதற்கு பம்பு செட்டு வைக்கும் போது 1:4 சிஸ்டம் இல்லாமல் அவர்களுக்குச் சீக்கிரமாக மின்சாரம் வழங்குவதற்கு அரசு ஆவண செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல இந்த அரசு துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதை முன்னுரிமை கொடுத்து வழங்குவது பற்றி உறுப்பினருடைய கோரிக்கை கவனத்திலே ஏற்றுக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமசுவாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி ஒன்றியங்களில் சுமார் 20,220 மின் இணைப்பு விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஒரு வருடத்திற்கு ஆயிரம் மின் இணைப்புகள் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, இவைகளைத் துரிதப் படுத்தி வருடத்திற்கு இரண்டாயிரம் மின் இணைப்புகள் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ நான்கு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்துக்குமேல் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. அவைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதைப் பொறுத்த வரையில் இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்த ஆண்டு நிர்ணயிக்கின்ற இலக்குகளை நாம் கொண்டு



1991 செப்டம்பர் 30]

வருகின்றோம். ஆகவே, ஒரு தனிப்பட்ட பகுதிக்கு என்று கேள்வியிலே இல்லை. பொதுவாக, நிதி ஆதாரத்திற்குத் தகுந்த படி, சில முன்னுரிமைகள் கொடுத்து அங்கே இலக்கு நிர்ணயிக்கப் படுகிறது. நம்முடைய உறுப்பினர் இங்கே சொல்லிய பகுதியிலும், அதை கவனத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மின்சார வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வி. கே. சின்னசாமி.

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பைப் பொறுத்தமட்டில், குறிப்பாகப் பெரியார் மாவட்டத்தில் 1983, 1984 ஆம் ஆண்டு களுக்குக்கூட தரப்படாமல் இருக்கிறது. 1:4 சிஸ்டத்தில் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதில்கூட, சீனியாரிட்டி யைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். இருந்தாலும், மின் இணைப்புக்கான செலவை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள் வார்களானால் அரசாங்கத்தின் மூலம் முன் வந்து சீனியாரிட்டி யைத் தளர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றபோது, வசதி படைத்தவர்களுக்கு மின் இணைப்புக் கொடுத்து விடுகின்றார்கள். வசதி இல்லாதவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க மறுத்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அரசின்மேல் வரும், ஆகவே, தகுந்த கவனத்தோடு இந்த அரசு இது குறித்துப் பரிசீலிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இதுசம்பந்தமான பிரச்சினைகளை இப்போது ஏற்க இயலாது. ஏற்கனவே இருந்த நடைமுறைப்படி நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் துரிதமாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, மின் இணைப்புகள் மின்சார வாரியத்தின் மூல மாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த அந்த பகுதிகளுக்கேற்ப நிலுவைகளின் எண்ணிக்கையில் உறுப்பினர்கள்

தெரிவிப்பார்களேயானால், உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி.

**முற்பகல் 10-10**

**திரு. நா. சா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு பத்திரிகைச் செய்தியிலே ஒரு ஐஸ்கிரீம் பேக்டரியினுடைய உரிமையாளர், தான் 1990 ஆம் ஆண்டு கொடுத்த மின் இணைப்பு விண்ணப்பத்திற்கு, ஒன்றரை ஆண்டு காலதாமதமாக மின் இணைப்புக் கொடுத்ததால், அவர் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, நுகர்வோர் நீதிமன்றம், மின்சார வாரியம் அவருக்கு ரூ. 40,000 நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆனால் விவசாய பம்ப் செட்களுக்கு 1978 ஆம் ஆண்டிலிருந்து மின்னிணைப்பு கேட்டு விண்ணப்பித்தும் கூட 10 ஆண்டுகள், 11 ஆண்டுகள் ஆகியும் கூட மின்னிணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு நுகர்வோர் நீதிமன்றங்கள் நஷ்ட ஈடு கொடுக்கச் சொல்கிற நிலையில் விவசாய பம்ப்செட்டு வைத்து விவசாய உற்பத்தி செய்வது என்பது ஐஸ்கிரீம் உற்பத்தியைவிட முக்கியமானது ; உணவுப் பொருள் உற்பத்தி செய்யக்கூடியது மிக முக்கியமானது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நுகர்வோர் நீதிமன்றங்கள் அவர்களுக்கு நியாயம் வழங்குவதைப்போல், விவசாயிகள் அமைப்பு நீதிமன்றங்களுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே விவசாயிகளுக்கு முன்னுரிமை கருதி, அதாவது உணவு உற்பத்தி என்பது அதைவிட முக்கியமானது என்று கருதி மின்னிணைப்பு விரைவாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துகிற மாவட்டங்களில் நாம் முன்னுரிமை கொடுத்து மின்னிணைப்பு வழங்கிக்கொண்டிருக்கிறோம். அத்தனை பேர்களுக்கும் மின்னிணைப்பு உடனே கொடுக்க



வேண்டுமென்ற ஆவல் இந்த அரசுக்கு இருக்கிறது. சாதாரணமாக மின்னிணைப்பு வழங்குகிற நேரத்தில், ஒரு மின்னிணைப்பு வழங்குவதற்கு ஏறத்தாழ 20,000 ரூபாய் வரை செலவழிக்க வேண்டி இருக்கிறது. நாம் கணக்கெடுத்துப் பார்போமேயானால், அதற்கு 955 கோடி ரூபாயும்—அந்த மின்னிணைப்பு மாத்திரம் கொடுத்துவிட்டால் போதாது அதற்கான மின்சாரத்தையும் நாம்தான் உற்பத்தி செய்யவேண்டும். கனெக்ஷன் கொடுத்துவிட்டு கரன்ட் வரவில்லை என்றால் இதே குற்றச் சாட்டை உறுப்பினர்கள் இங்கே சொல்வார்கள். ஆகவே மின் உற்பத்தியினுடைய ஆதாரத்தையும் நாம் பெருக்க வேண்டும். ஆகவே அப்படிக் கணக்கிடுகிற நேரத்தில் மொத்தமாக 1,600 கோடி ரூபாய் இருந்தால்தான் உடனடியாக அனைத்து மின்னிணைப்புகளையும் கொடுக்க முடியும். ஆகவே இருக்கின்ற நிதியாதாரங்களைப் பொறுத்து விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்துத்தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இங்கே ஃபேக்டரி பற்றிச் சொன்னார்கள். அதற்காகத் தேவைப்படுகிற பிரச்சினைகள் வேறு. உடனடியாகக் கொடுத்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நிதியாதாரங்களைப் பொறுத்து இன்றைக்கு விவசாயத்திற்கு மின்னிணைப்பு முறையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அ. பாப்பா சுந்தரம்.

**திரு. அ. பாப்பா சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்னிணைப்பு கொடுப்பதற்கு 20 ஆயிரம் ரூபாய் வரையிலும் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், டீசல் தட்டுப்பாடாக இருக்கின்ற காரணத்தால் விவசாயத்திற்கு டீசல் போட்டு கட்டுப்படியாகாது என்ற நிலைமையில், அந்த விவசாயிகள் கடன் வாங்கியாவது மின்னிணைப்புக்கான செலவை ஏற்றுக்கொள்ள சில இடங்களில் தயாராக இருக்கிறார்கள். அப்படி அந்தச் செலவை அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற அடிப்படையில் அந்த விவசாயிகளுக்கு அமைச்சர் அவர்கள் மின்சாரம் தருவதற்கு முன் வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1991 செப்டம்பர் 30

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பணத்தை மாத்திரம் கட்டுவதால் மின்னிணைப்பு வழங்கிவிட முடியாது. ஏனென்றால் வசதி இல்லாதவர்கள் ஏற்கெனவே முன்னுரிமையாக மனுக்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே பணத்தின் அடிப்படையில் அதாவது பணம் கட்டுவதை மாத்திரம் வைத்துக்கொண்டு முன்னுரிமை கொடுத்து மின்னிணைப்பு வழங்க முடியாது என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கு. தங்கமுத்து.

**திரு. கு. தங்கமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 3 ஃபேஸ் லைன்கள் இருக்கின்ற சில இடங்களில் ட்ரான்ஸ்ஃபார்மர்கள் மிகவும் குறைவான திறன் இருக்கின்ற காரணத்தால் அந்த இணைப்புகள் தற்சமயம் சரியாக இயங்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அது உடனடியாகச் சரி செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பற்றி கேள்விகள் கேட்டால் தொடர்ந்து 200 கேள்விகள் கூட கேட்டுக்கொண்டு இருக்கலாம். இருந்தாலும் இன்றைக்கு மின் அழுத்தம் குறைவாக இருக்கிற ட்ரான்ஸ்ஃபார்மர்களைப் பற்றிய தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் இந்த அரசுக்குத் தருவார்களேயானால் அவைகள் எல்லாம் உடனடியாகச் சீர் செய்யப்படும். எங்களுடைய கவனத்திற்கு அப்படி வருகிறபோது உடனடியாக நாங்கள் சீர் செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த மின்சார இணைப்புகளில் போது



1991 செப்டம்பர் 30]

மான அளவுக்கு மின்சாரம் இல்லாத காரணத்தால் அதாவது
வோல்டேஜ் இல்லாத காரணத்தால், நாம் மேலும் மின்சாரம்
உற்பத்தி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று
சொன்னார்கள். நாம் லைன் கொடுத்துவிடுகிறோம். லைன்
கொடுத்து மின்சார சர்விஸ்-ம் கொடுக்கிறோம். அப்படிக்
கொடுக்கிறபோது சரியானபடி இந்த வோல்ட்டேஜ் இல்லாத
காரணத்தால் திடீரென்று அந்த மோட்டார் எரிந்துவிடுகிறது.
அப்படி எரிந்துவிடுமேயானால், புது மோட்டார் வாங்குவதற்கு
எந்த அளவுக்குச் செலவழிக்கின்றோமோ அதே அளவுக்கு
இதற்கும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதாவது அந்த
அளவுக்கு காயில் கட்டுவதற்கும் செலவாகிறது. ஆகவே எங்கெங்
கெல்லாம் உப மின் நிலையங்களை அமைப்பதற்கு அதாவது சப்
ஸ்டேஷன்கள் அமைப்பது குறித்து அரசின் கவனத்திற்கு வந்
திருக்கிறதோ அவைகளை இந்த நடப்பாண்டிலேயே—முதல்வர்
அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தால், இந்த நடப்
பாண்டிலேயே—அந்த சப் ஸ்டேஷன்களை அமைத்து மின்சாரம்
உற்பத்தி செய்து விவசாய பெருமக்களுக்கு வினியோகம் செய்யக்
கூடிய நிலைமை உருவாக்கப்படுமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இங்கே வோல்டேஜ் டிராப் என்று
இருக்கின்ற அந்த மின் அழுத்தத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்
டார்கள். இன்றைக்கு எந்தெந்த பகுதியிலே துணை மின்
நிலையங்கள் அமைக்கப்பட இருக்கிறது என்பதை நாளை
வருகின்ற மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின்
மீதான விவாதத்தின்போது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
எந்தெந்த பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றது
என்று புகார்கள் வருகின்ற நேரத்திலே அங்கெல்லாம் சரிசெய்யப்
பட்டு அதற்கான மின் அழுத்தம் சரியாக வருவதற்கான ஏற்பாடு
களை மின்சார வாரியம் செய்துகொண்டு இருக்கிறது. ஆகவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகச் சொல்லாமல்
எந்தெந்த பகுதியிலே குறைவாக இருக்கின்றது என்று தெரிவிப்
பார்களேயானால், அங்கே உடனடியாக சரிசெய்யப்படும். அதற்
கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

[1991 செப்டம்பர் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருமதி ரமணி நல்லதம்பி.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பைப் பொறுத்தவரையில்—இன்றைக்கு இலவச மின்சாரம் வழங்குகிற திட்டத்தை எல்லாம் அறிமுகம் செய்துவிட்டோம். என்னுடைய தொகுதியிலே மின்சார பாக்கிகளுக்காக அந்த லைனையே கட் செய்து கழற்றி எடுத்துச்சென்றுவிட்டார்கள். இப்போது அவர்கள் மின் இணைப்புக் கேட்கின்றபோது கொடுக்க முடியாமல் இருக்கின்றார்கள். பாக்கியைச் செலுத்தாதவர்கள் பிரச்சினை வேறு மாதிரியாக இருந்தாலுங்கூட புதிய விவசாயிகள் பெறமுடியாமல் தவிக்கிறார்கள்.

ஆகவே அந்த பகுதி மக்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நிவாரணம் தருகின்ற வகையிலே மின் துறை மீண்டும் கம்பங்களை எல்லாம், அந்த ஒயர்களை எல்லாம் பொருத்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே யார் யாருக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தருவார்களேயானால், உடனடியாக இந்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 114, திரு. ச. புரட்சிமணி மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள்.

114—

**நெய்வேலி சுரங்கத்தின் நீரை வெலிங்டன் ஏரியில் விடுதல்.**

* 1252 **திரு. ச. புரட்சிமணி :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதி விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் நெய்வேலி நலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரை



1991 செப்டம்பர் 30]

குழாய் மூலம் கொண்டுவந்து வெலிங்டன் ஏரியில் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ச. புரட்சிமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'வெலிங்டன்' ஏரி என்னுடைய தொகுதியில் மிகப்பெரிய ஏரி ஆகும். இதனுடைய கொள்ளளவு 2302 கன அடி ஆகும். இதனால் 63 கிராமங்கள் பயன்பெறும். இந்த வகையில் இதன் மூலம் ஒரு லட்சம் மக்கள் பயன் அடைவார்கள். இதனால் நெய்வேலி சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் கடலில் போய்க் கலக்கிறது. அந்த நீரை 'வெலிங்டன்' ஏரியில் விடுவதன் மூலம் அந்த கிராமத்தில் மக்கள் பயன் அடைவார்கள். இந்த திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலி முதலாவது, இரண்டாவது சுரங்கத்திலிருந்து வருகின்ற உபரி நீரைப்பற்றி கேட்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் அணைக்கட்டு, பாசன அமைப்பு சேத்தியா தோப்பு அணைக்கட்டு மூலம் அந்த தண்ணீரைக் கொண்டு ஏறத்தாழ 25 ஆயிரம் ஏக்கர்களுக்கு நாம் பாசன வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த கேள்வி எழுப்பப்படுகின்ற அந்த பகுதி ஏறத்தாழ 'வெலிங்டன்' நீர்த் தேக்கம் நம்முடைய சுரங்கம் தோண்டுகிற பகுதியிலேயிருந்து 40 கிலோ மீட்டர் தூரத்திலே மேற்பகுதியிலே இருக்கிறது. கால்வாய்கள் மூலமாக இணைப்பதற்கு சாத்தியம் இல்லை. இரண்டாவதாக அங்கேயிருந்து பம்ப் செய்துதான் தண்ணீரை கொண்டு செல்லவேண்டும். ஆகவே சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் அங்கே சுரங்கத்தில் இருக்கின்ற தண்ணீரை அங்கே நெய்வேலியிலே சுரங்கம் வெட்டுபவர்களே தங்களுடைய உபயோகத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற நிலையைச் சொல்கிறார்கள். ஆகவே உபரி நீர் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே இந்த திட்டத்திற்கான சாத்தியக்கூறு இல்லை.

[1991 செப்டம்பர் 30

**திரு. ச. புரட்சிமணி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் வாழ்வு மலர, பல்வேறு துயர் துடைப்பு பணிகளை, முனைப்பாக திட்டங்களை அறிவித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால அரசு 1991—92 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏரிகளை நவீனப் படுத்துவதற்கான விரிவான புதிய திட்டம் ஒன்று, ரூபாய் 200 கோடி செலவில் 2,500 ஏக்கர் ஏரிகள் நவீனப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது. இதில் இந்த வெலிங்டன் ஏரியையும் சேர்த்து நவீனப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதி ஆதாரங்களை பொறுத்து இந்த பணியை மேற்கொள்வது குறித்து இந்த அரசு கவனத்தோடு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : வினா எண் 115. திரு. எஸ். நாகூர் மீரான். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

115—

### கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டம்.

* 1502 **திரு. எஸ். நாகூர் மீரான்** :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்வேறு விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் கருப்பாநதி அணைக்கட்டுத்திட்டத்தை விரிவாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.



1991 செப்டம்பர் 30]

**திரு. எஸ். நாகூர் மீரான்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு அந்த அணைப் பகுதிக்கு வருகிற நீர் வரத்தைக் கொண்டு கருப்பாநதி பாசனத்திற்கு உட்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் பயனடைந்தார்கள். ஆனால் அந்த அணைக்கட்டு கட்டப்பட்ட பின்பு இன்று ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதிப்பைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு கழக காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கடையநல்லூர் தொகுதி மீது கருணை காட்டுவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுகாவிலுள்ள கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 6 துணை அணைக் கட்டுகள் இருக்கின்றன. அதன் மூலம் ஏறத்தாழ 7,963 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கின்றன. வருகின்ற தண்ணீரும் ஓரளவு அதன் கொள்ளளவு அளவுக்குத் தான் வந்துகொண்டிருக்கிறது. தண்ணீர் வரத்து அதிகமாக இல்லை. ஆகவே, இப்போது இருக்கின்ற தண்ணீரை வைத்து, ஏற்கெனவே இருக்கின்ற பாசன திட்டங்களை முறைப்படுத்தி பாசனப்படுத்துவதுதான் சாலச் சிறந்தது என்று இப்பொழுது முடிவு எடுத்து தண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை விரிவுபடுத்துவதற்கான எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. ஏற்கெனவே இருக்கின்ற பாசன பகுதிகளைச் சிறப்போடு செயல் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்தத் திட்டம் தற்போது இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். நாகூர் மீரான்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில், கருப்பாநதி பாசனத்திற்கு உட் பட்ட பல பகுதிகள் அன்றைக்கு விடப்பட்டுள்ளன. பொதுவாக கடையநல்லூர் தாலுகாவினுடைய தாய் கிராமமான சாம்பார் வட கரை பேரூராட்சிக்கு உட்பட்ட வண்ணான்குளம், கருங்குளம் போன்ற பகுதிகள் அந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை. இரட்டைக்குளம், கொடையநேரி போன்ற பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன. புன்னையாபுரம் போன்ற பகுதிகள் பாதிக்கப் பட்டு அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள விவசாயப் பெருங் குடி மக்களை . . . .

[1991 செப்டம்பர் 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் வினா வாக்க் கேட்க வேண்டும்.

**திரு. எஸ். நாகூர் மீரான் :** ஆகவே, விவசாயப் பெரு மக்களைப் பாதுகாக்கின்ற வகையில் அந்த அணைக்கட்டுத் திட்டத்திலே அந்தப் பகுதிகள் சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகளைக் கட்டுகின்ற நேரத்தில், பாசன வசதிகளை செய்கின்ற நேரத்தில், வருகின்ற நீர் ஆதாரங்களைப் பொறுத்துதான் பாசன வசதிகளை நாம் நிர்ணயிக்கிறோம். ஏன் என்றால் பாசன பகுதிகளை விரிவு படுத்தி, தண்ணீர் வரத்து குறைவாக இருந்தால், ஏற்கெனவே இருக்கின்ற பாசன பகுதிகளை முழு விளைச்சலுக்குக் கொண்டு வர முடியாது என்ற காரணத்தினாலே வருகின்ற நீர் அளவை வைத்துதான் பாசன பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, நீர் வரத்து அதிகமாக இருப்பின் வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை இந்த அரசு கவனமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பீட்டர் அல்போன்ஸ் கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டத்தைப் பற்றி.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருப்பாநதி பாசனத்திலே எனக்கே கொஞ்சம் நிலம் இருக்கிறது. ஆகவேதான் இந்தக் கேள்வியைக் கேட்க ஆசைப்பட்டேன். கருப்பாநதி அணைக் கட்டுத் திட்டம் மட்டுமல்ல, தற்போது எடுத்துவரும் எந்த அணைக்கட்டுத் திட்டத்திலும் உபரி நீரை தேக்குவதற்குப் பதிலாக கீழ் பாசனக்காரர்களுக்கு சொந்தமான, ஆதாரமான தண்ணீரையே அந்த நீர்த் தேக்கத்தில் தேக்கி, கீழ் பாசனக்காரர் களுக்கு தண்ணீர் கிடைக்காது இருக்கின்ற ஒரு சூழ்நிலை, கருப்பாநதி பாசனத்தில் மட்டுமல்ல, இப்போது எடுத்து இருக் கின்ற அடவிநயினார் திட்டத்திலேகூட அதே பிரச்சினைதான் இருக்கிறது. அந்தப் பிரச்சினையைப்பற்றி அமைச்சர் அவர்கள்



1991 செப்டம்பர் 30]

அறிவார்களா? அப்படி இருந்தால் உபரி நீரை மட்டும் தேக்கி வைத்துக்கொண்டு, முதலிலே வருகின்ற ஆதாரமான தண்ணீரை கீழ்மட்டிலே இருக்கின்றவர்களுக்குக் கொடுத்த பிறகு அதிகம் வருகின்ற தண்ணீரை மட்டும் நீர்த் தேக்கத்தில் தேக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக் கின்றேன். அணைக்கட்டுகளைக் கட்டுகின்ற நேரத்தில், தொடர்ந்து அந்த நேரத்தில் வருகின்ற தண்ணீர் அளவினுடைய விகிதாசாரங்களைப் பொறுத்துத்தான் அங்கே இலக்கு நிர்ண யிக்கப்பட்டு அதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டு அணையி னுடைய உயரம், அதனுடைய கொள்ளளவு எல்லாம் நிர்ணயிக்கப் படுகிறது. ஆகவே, திடீரென்று ஒருசில காலங்களிலே அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலத்திலே இருக்கின்ற தண் ணீரின் அளவை, அந்தக் காலத்தை மட்டும் கணக்கெடுத்து அந்த அணையினுடைய கொள்ளளவை நாம் கணக்கிட்டு விடமுடியாது. திடீரென்று வெள்ளம் வருகின்ற நேரத்தில் அது ஒரு வருடத் திலோ அல்லது 10 ஆண்டுகள் இடைவெளியிலோ வரலாம். ஆகவே, அதை வைத்துக்கொண்டு நாம் அணைக்கட்டுகளைக் கட்டுவதில்லை. மொத்தமாக இருக்கின்றவைகளின் சராசரி விகிதாசாரங்களை வைத்துதான் அணைக்கட்டுகளினுடைய கொள்ளவை நாம் நிர்ணயிக்கிறோம். ஆகவே, கருப்பாநதித் திட்டமும் அந்த அளவிலேதான் கட்டப்பட்டது.

அடவிநயினார் கோயில் அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். அதற்கு தனியாக கேள்வி கேட்க வேண்டு மென்று உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். கருப்பாநதி அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றி மட்டுமே இன்றைக்கு இருக் கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந் தாலும், மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை நன்கு பரிசீ லித்து, இருக்கின்ற நீர் ஆதாரங்களை மறுபடியும் கவனித்து, மீண்டும் எடுக்கச் சொல்கிறேன். இதை எந்த அளவிற்கு சிறப் பாகச் செயல்படுத்த முடியும் என்பதையும் இந்த அரசு கவனத் தோடு பரிசீலிக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 116. திரு. வே. பெரியசாமி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

116—

மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

* 335 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட சோழகணை பாரஸ்டு, காக்காயனூர் பாரஸ்டு ஆகிய செட்டில்மெண்டுகள், ஓசூர் ஆகிய இடங்களில் வாழும் மலைவாழ் மக்களுக்கு 1991-92-ல் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

முற்பகல் 10.25

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் காக்காயனூர், சோழகணை, ஓசூர் போன்ற பகுதிகளில் ஆதிவாசி மக்கள் தனியாக நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வேறு எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அங்கு இல்லை. இப்படிப் பட்டவர்கள் காட்டின் நடு மத்தியில் குடிசைகள் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நலன் குறித்து சிறப்புத் திட்டத்தின்கீழ் நீங்கள் இந்தத் திட்டத்தை எடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் பழங்குடிகள் துணைத் திட்டத்தின்கீழ் வராத பகுதியாகும். இங்குள்ள



பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காக "சிதறி வாழும் பழங்குடிகள்" (Dispersed tilted )group என்ற தலைப்பின் கீழ் திட்டங்கள் தீட்டலாம். நடப்பு ஆண்டில் சிதறி வாழும் பழங்குடிகள் நலத் திட்டத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதில் 12.50 இலட்சத்தை பழங் குடிகளுக்கு வீடுகள் கட்டித் தர செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வீட்டு மனைப் பட்டா உள்ள பழங்குடிகளுக்கு மட்டுமே வீடுகள் கட்டித் தர இயலும். ஆகையினால் பழங்குடி மக்கள் வாழும் மாவட்டங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர தக்க முன்மொழிவுகளை அனுப்புமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து இன்னும் பதில் வராததினால் 1991-92-ல் சிதறி வாழும் பழங்குடிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் முழுமையாகவில்லை. இதனால் பெரியார் மாவட்டம் பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட பாரஸ்ட் செட்டில்மெண்ட் உட்பட எந்த இடமும் இன்னும் சிதறி வாழும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படவில்லை. மேலும் பாரஸ்ட் செட்டில்மென்ட் பகுதிகளில் வீடுகள் கட்ட வனத்துறை அனுமதிக்குமா என்ற விபரமும் தெரியவில்லை. எனவே, பெரியார் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இது சம்பந்தமாக அங்குள்ள வனத்துறை அலுவலர்களைக் கலந்து ஆலோசித்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வீடுகள் கட்டித் தர இயலுமாயின் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்ற பின்னர், சிதறி வாழும் பழங்குடிகளுக்கு 1991-92-ல் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இந்த இடங்கள் சேர்க்கப்பட்டு வீடுகள் கட்டித் தரப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி அவர்கள். இதற்கு மேலும் கேள்வி உண்டா?

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இம்மன்றத்து மன்னவராய், மணிசிரத்து கோமகனாய், முல்லைப்பூ எடுத்து முகத்தினிலே எறிவதுபோல் சொல்லைச் சிலம்பாக்கி எங்களை எல்லாம் சொக்க வைத்திருக்கிற

1991 செப்டம்பர் 30

தமிழ்த்தாய் ஆண்டுகொண்டிருக்கிற இந்த நன்னாளில், அங்கே காட்டு இலாகா அதிகாரிகள் பாரஸ்ட் செட்டில்மெண்டில் வீடுகளைக் கட்டக்கூடாதென்ற திட்டத்தை வைக்கவில்லை என்பதையும், அவர்கள் கட்டிக்கொள்ளலாமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் மூலமாக அமைச்சரவர்களுக்குத் தெரியப்படுத்தி, விரைவிலே நீங்கள் கருணை உள்ளத்தோடு சொல்லியிருக்கிற அந்த வார்த்தைகளை அமுல்படுத்தி, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஆசியோடு—வறண்ட பகுதியாக உள்ள, 1947 ஆகஸ்ட் 15-ல் நாம் சுதந்திரம் பெற்றோம் என்று சொன்னாலும், இன்னும் சுதந்திரம் இல்லாமல் தலைவிரி கோலமாக அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுடைய நிலையை கவனத்திலே கொண்டு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின்பேரில் காட்டு இலாக்காவினரிடம் பேசி, உரிய நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 117. திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

117—

**திருவொற்றியூரில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான சந்தன மரங்கள்**

* 1009 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சென்னையை அடுத்த திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான சந்தன மரக் கட்டைகள் பிடிபட்டனவா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்த விவரம் என்ன?



1991 செப்டம்பர் 30]

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 3—7—1991 அன்று மாலை 5 மணியளவில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் ஒரு காரைச் சோதனையிட்டபோது, அக் காரில் ஜவ்வாது மலையில் கள்ளத்தனமாக வெட்டப்பட்ட 23 சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 330 கிலோ எடையுள்ள இச் சந்தனக் கட்டைகளின் மதிப்பு ரூ. 66,000. சந்தனக் கட்டைகளும் காரும் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடத்தலில் ஈடுபட்ட ஏழு குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் தற்போது ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் கடத்துவது என்பது இப்போது அதிகமாகி விட்டது. சென்ற வாரம்கூட சோழவரம் காவல் நிலையப் பகுதியில் ஒரு சந்தனக் கடத்தல் லாரி ஒன்று பிடிபட்டதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. அப்படிக் கடத்துபவர்கள் மீது இப்போது அளிக்கப்படும் குறைவான தண்டனைக்குப் பதிலாக, மிக மிக அதிகமான தண்டனை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இதுவரையில் 6 பேர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். திருப்பத்தூர் சரகத்தைப் பொறுத்தவரையில் இருவரும், வேலூர் சரகத்தில்

நான்கு பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் 80 சதவீதம் கடத்தல் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதன் காரணமாக, இதுவரை 475 குற்றங்கள் பதிவு செய்யப் பட்டு, 265.009 டன் சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன் மதிப்பு ரூ. 4,73,36,000 ஆகும்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே ,சென்னையில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன். மேலும் சில தினங்களுக்கு முன்பு, சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பன் தர்மபுரி மாவட்டத்துக்கு வந்து, தன்னுடைய இறந்துபோன தங்கையின் உடலைப் பார்த்துவிட்டுச் சென்றதாக பத்திரிகையில் தகவல் வந்திருக் கிறது. இவர் தர்மபுரி மாவட்டத்துக்கு வந்து சில மணி நேரம் தங்கியிருந்திருக்கிறார். வனத் துறை காவல் அதிகாரிகள் ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவலாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) குறுகிய கால வினா.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குறுகிய கால வினா எண். 2—திரு. கு. லாரன்ஸ்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

**தக்கலையில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை.**

* 4497 திரு. கு. **லாரன்ஸ் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் அமைய விருக்கும் நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி தடைப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?





(ஆ) ஆம் எனில், அதை நீக்கி விரைவில் பணிமனை தொடங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) & (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் அமையவிருக்கும் நேசமணி போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட் டுள்ளது.

**திரு. கு. லாரன்ஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த தக்கலை, பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்துள்ளது. இது மாவட்டத்தின் மையப் பகுதி, பல்வேறு கல்லூரிகளும் மிகச் சிறந்த ஆலயங்களும் உள்ளன. பழம்பெரும் நகராகக் கருதப் படுகிறது. அந்த பத்மநாபபுரத்தில் அந்தப் பணிமனை ஆரம்பிக் கப்பட வேண்டிய அவசியமான சூழ்நிலை இருக்கிறது. பக்கத்தில் இருக்கிற கோளாவிலிருந்து நிறைய பஸ்கள் வருகின்றன. நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும், தமிழக அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் அங்குள்ளவர்கள் பெரிதும் போற்றுகிறார்கள். மதிக்கிறார்கள். அங்கே உள்ள தனியார் நிலங்களை இந்தப் பணிமனைக்காக கையகப்படுத்துவதில் அங்குள்ள அதிகாரிகள் முழுப்பொறுப்பில் செயல்படவில்லை என்றே நான் கருதுகிறேன். எனவே நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், பத்மநாபபுரம் சப்-கலெக்டர் அவர்களுக்கு தான் அதற்கான கோரிக்கைகளை அனுப்ப வேண்டும். எனவே அந்தக் கோரிக்கைகளை அனுப்பு வதில் காலதாமதம் ஏற்படுவதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. லாரன்ஸ் அவர்களே, வினாவாகக் கேளுங்கள்.

**திரு. கு. லாரன்ஸ் :** நேசமணிப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், போர்டு ஆப் டைரக்டர்கள் அந்த நடவடிக்கை களை மிகத் துரிதமாக மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எண்ணிய எண்ணியாங்கு முடிக் கின்ற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித்

தலைவி அவர்களின் ஆட்சியில் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாமல், விரைந்து செயலாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 31—10—1991-க்குள் 3 நிர்வாக இயக்குநர்கள் அங்கே சென்று பார்வையிட்டு அந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கனிவான இந்த பதிலுக்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை குமரி மாவட்ட மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொல்கிற நேரத்தில் சிறிய அபிப்பிராயத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன். நேசமணி போக்குவரத்துக் கழகம், குமரி மாவட்டத்தின் 80 சத மக்களுடைய போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆகவே இன்னும் கொஞ்சம் வசதிகள்தான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது அந்தத் துறை சிறிது நஷ்டத்தில் இருந்தாலும் கூட, அந்த நஷ்டத்தைப் பாராது, இந்தத் துறையை அரசே தொடர்ந்து நடத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்வதோடு, எந்தக காரணத்தைக் கொண்டும் கன்னியாகுமரியில் இத் துறையை தனியாருக்கு விட்டுவிடக் கூடாது என்ற ஆலோசனையையும் இந்த மன்றத்தில் எடுத்து வைத்து, நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், தனியாருக்கு நேசமணி போக்குவரத்துக் கழகத்தை விட்டுவிடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த எண்ணம் இந்த அரசுக்கு எப்போதும் இல்லை என்பதை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே 80 சதவீதம் மக்களுக்கு பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாண்புமிகு இதய தெய்வம், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு ஆணை பிறப்பித்



15838
600 008

திருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய என்னைக் கனவுகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) முதல் துணை மதிப்பீடுகள் 1991-92, மொழிதல் (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1991-92 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை பேரவையில் அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் செவ்வாய்க் கிழமையைக் குறித்துள்ளார்கள்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) நாங்குநேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. வெ. நடேசன் பால்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குனேரி தொகுதியில் விஜயநாராயணபுர ஏரி என்று ஒரு ஏரி உள்ளது. அந்தப் பெரிய ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. நடேசன் பால்ராஜ், நீங்கள் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்பைப் படித்தால் போதும்.

**திரு. வெ. நடேசன் பால்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாங்குனேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணபுர ஏரியின் மடைகள் சேதமடைந்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### விவர அறிக்கை.

விஜயநாராயணபுரம் ஏரியானது திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு கால்வாயில் 4 வது ரீச்சில் உள்ள ஒரு பெரிய ஏரியாகும். இதற்கு மணிமுத்தாறு பாசன வசதி கிடைத்து வருகிறது.

இந்த ஏரியின் கொள்ளளவு 310 மில்லியன் கனஅடி ஆகும். கடந்த பல ஆண்டுகளாக வண்டல் மண் ஏரியில் உள்வாயில் படிந்து கொள்ளளவு சுமார் 25 சதவீதம் குறைந்துள்ளது. ஏரியின் மடைகள் பழுதடைந்தும், ஏரிக்கரையும் ஆங்காங்கே சேதமடைந்தும் உள்ளது. ஏரிக்கரைக்கு அலைதாங்கள் ....... பதிக்க வேண்டிய அவசியமும் உள்ளது.

பாசன ஆதாரங்களை மராமத்துச் செய்ய ஒதுக்கப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லாததால் இந்த ஏரியின் மொத்த பழுதுகளையும் செப்பனிட இயலாமல் உள்ளது. ஏரியில் உள்வாயில்





படிந்துள்ள வண்டல் மண்ணை தூர்வாரி அப்புறப்படுத்தினால் தான் ஏரியின் கொள்ளளவை முன்பு இருந்த அளவுக்குக் கொண்டு வரமுடியும். இதற்காக கனரக இயந்திரங்களை கொண்டு பெரிய அளவில் செலவு செய்ய வேண்டி இருக்கும்.

இந்த ஆண்டு மராமத்துப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஏரியின் மதகுகளை மட்டும் பழுதுபார்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கரையை மராமத்து செய்தல் பணிக்கு வரும் ஆண்டுகளில் ஒதுக்கப்படுகின்ற நிதி அடிப்படையில் படிப்படியாக பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

**திரு. வெ. நடேசன் பால்ராஜ் :** இந்த ஏரி மிகவும் சேதம் அடைந்திருக்கிறது. 100, 200 கிராமங்களை அழித்துவிட ஏங்கி தவித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு 'மெயின்டெனன்ஸ் எக்ஸ்பென்சஸ்' என்று ஆரம்பிப்பதைவிட ஒரு நல்ல 'எஸ்டிமேட்' போட்டு குறிப்பிட்ட காலத்திலே அதைச் செய்வார்களேயானால் அங்குள்ள மக்களை நீங்கள் பாதுகாக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விஜயநாராயணபுர ஏரியானது, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் மணிமுத்தாறு கால்வாயில் நான்காவது ரீச்சில் அமைந்திருக்கிறது. மணிமுத்தாறு பாசனம் இந்த ஏரிக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஏரியை இந்த ஆண்டு செப்பனிடுவதற்காக ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து, இந்த ஏரியின் மதகுகளை பழுது பார்ப்பதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த ஏரியினுடைய நிலைமையைப் பற்றி பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு அதை ஆழப்படுத்துவதற்கு எந்த அளவிற்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு ஒப்புதல் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு மதகுகளை சரி செய்து கொடுத்துவிட்டு, அடுத்த நிதியாண்டில் இருக்கின்ற

ஆதாரங்களை வைத்து உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த ஏரியை மேம்படுத்த ஏற்பாடு செய்யப்படும், அந்த ஏரியினுடைய கொள்ளளவை மேம்படுத்த ஏற்பாடு செய்யப் படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியை பராமரிப்புச் செய்யும்படி ஆணையிட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**(ஆ) சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றி யுள்ள கிராமங்களில் மின் விளக்குகள் எரியாதது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. இராம சுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இராமசுவாமி.

*** திரு. சி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, கல்ராயன் மலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின்விளக்குகள் எரியாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி கல்ராயன் மலைப் பகுதியில் வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு, இந்நாடு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் 850 தெரு குழல் விளக்குகள் ஒருங் கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் எரியாமல் இருந்தன. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 600 மாற்றுக் குழல் விளக்குகள் வாங்கிப் பொருத்தி அவைகள் எரியச் செய்யப்





பட்டன. மீதம் உள்ள 250 குழல் விளக்குகளை எரியச் செய்ய கல்ராயன் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் நடவடிக்கை எடுத் துள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் மீதமுள்ள 250 மின் குழல் விளக்குகளும் எரியச் செய்யப்பட்டுவிடும்.

மேற்படி கிராமங்களில் தெரு விளக்குகள் பரவலாக எரியச் செய்துள்ளபடியால் மிருகங்கள் மற்றும் பாம்புகள் தொல்லை நீக்கப்பட்டு, மக்கள் அச்சமின்றியும், பதட்டமின்றியும் நடமாட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத் தொல்லைகள் ஏதும் தற்போது இருப்பதாகத் தகவல்கள் இல்லை.

**திரு. சி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி கல்ராயன் மலைப் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்கள் வெள்ளிமலை, கரியாலூர், சேராப்பட்டு, இந்நாடு, கிளாகாடு, குண்டியாநத்தம் ஆகிய ஊர் களில் போடப்பட்ட சோதார் மின் விளக்குகள்-முந்தைய தி.மு.க. அரசில் போடப்பட்ட மின் விளக்குகள் முற்றிலும் எரியவில்லை. பேட்டரி பொங்கி விட்டதாகவும் அதை புதிதாக போட்டால்தான் எரியும் என்று கூறுகிறார்கள். அங்கு வாழும் மக்கள் கொடிய மிருகங்கள்—கரடி, புலி போன்ற மிருகங்களின் நடமாட்டத்தினால் இரவில் வெளியே வர அச்சப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சரின் அறிக்கையில் மேற்படி சோலார் பல்புகள் பற்றிய விபரம் ஏதுவும் இல்லை. 250 குழல் பல்புகள் மட்டும் இன்னும் ஒரு வாரத்தில் போடுவதாகக் கூறி உள்ளார்கள். எனவே அந்த ஊர்களை நானே நேரடியாகப் போய் பார்த்தேன். 30 கிராமங் களில் சோலார் பல்புகள் போடப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றும் எரியவில்லை. எனவே இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேணுமாயும் விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அங்குள்ள விளக்குகள் எரியவில்லை என்ற விவரத்தை அறிந்து, அங்கு

மாற்று ஏற்பாடாக 850 குழல் விளக்குகள் ஏற்பாடு செய்து 31—8—1991-ல் உள்ள நிலவரத்தின்படி 605 குழல் விளக்குகள் எரிந்துகொண்டு இருக்கிறது. 27—9—1991 இல் பொருத்தப் பட்டவிளக்குகள் 120. இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக 125 விளக்குகள் பொருத்தப்பட்டு, அந்த மக்களுடைய துயர் துடைக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமசுவாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குண்டியாநத்தம் கிராமப் பகுதியில் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியதுபோல் இந்த மாதிரி விளக்குகள் எதுவும் போடப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் எந்த குறையும் இல்லை. முந்தைய அரசின் தவறால் மலைவாழ் மக்கள் மின்விளக்குகள் இல்லாமல் கல்ராயன் மலையில் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எனவே அதைப்பற்றிய விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தென் ஆற்காடு மாவட்டத்தில் டூர் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வர வழைத்து, நேரில் பேசிவிட்டு வந்துதான் இன்று இந்த விவரங் களைத் தெரிவிக்கிறேன். அதிகாரிகள் தரக்கூடிய அறிக்கைகள் தவறுதலாக நிச்சயமாக இருக்க முடியாது. நான் நேரிலே செல்ல வேண்டுமென்று இருந்தேன். நேரம் இல்லாத காரணத் தால், அவர்களை வரவழைத்து விவரங்களைக் கேட்டேன். இப்போது நான் தருகிற குறிப்புகள் அனைத்தும் உண்மை என்று கூறுகிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.
### பொதுக் கணக்குக் குழு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன் னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.





* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை யின் 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின் வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

1984-85 ஆம் ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் சிவில், பொதுப்பணித் துறை மற்றும் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 9-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

1977-78 ஆம் ஆண்டு மற்றும் 1978-79 ஆம் ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் வருவாய் வரவினங்களின்மீது பொதுக் கணக்குக் குழு அளித்த 27 வது அறிக்கை—7 வது பேரவையில் வருவாய்த் துறை பற்றிய பரிந் துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 10-வது அறிக்கையை அளிக்கிறேன்.

1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள்மீது பொதுக் கணக்குக் குழு அளித்த 6-வது அறிக்கை—7-வது பேரவை மற்றும் 59-வது அறிக்கை—8-வது பேரவையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரை களில் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை குறித்த பரிந்துரை எண் 22 பூம்புகாரில் மேம்பாட்டுப் பணிகள் மீது அரசு மேலும், எடுத் துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 11-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசின் கணக்குகள் மீது இந்தியத் தணிக்கைத் துறைத் தலை வரின் சிவில் அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த 30வது அறிக்கை—7-வது பேரவையில் கண்டுள்ள பரிந் துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 12-வது அறிக்கையை அளிக் கின்றேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1991 செப்டம்பர் 30

1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) ஊரக வளர்ச்சித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 13-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

1977-78 ஆம் ஆண்டு மற்றும் 1978-79 ஆம் ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் வருவாய் வரவினங்கள் குறித்த பொதுக் கணக்கு அளித்த 27-வது அறிக்கை, 7-வது பேரவையில் தொழில் துறை பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 14-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

முற்பகல் 10-45

5. சட்டமுன் வடிவுகள்.

(அறிமுகம் செய்தல்)

**(அ) நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்," எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. தீர்மானம்

**பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30, உள்விதி 3-ன்கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்டமுன் வடிவுகள்-அறிமுகம் செய்தல் என்ற தலைப்பின்கீழ், வரிசை எண் 2, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு பின்னர் அறிமுகம் செய்யப்படலாம்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

**(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்விற்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

**5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.**

(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.



**(இ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1991—(ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.'

**5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.**

**(இ) வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசை தட்டும் ஒலி.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991. (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர்** அறிவிப்பு. "1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்".

5. சட்டமுன்வடிவுகள்.
(அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

**(ஈ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1991.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு** தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.**





**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

7. தனித் தீர்மானம்.

**மத்திய அரசு, மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்கள் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டத்தின் 340-வது விதி சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றிய பரிந்துரைகளைத் தர ஒரு குழுவை குடியரசுத் தலைவர் நியமிக்கலாம் என்று குறிப்பிடுகிறது. இவ்வதிகாரத்தின்கீழ் முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு மத்திய அரசால் 29—1—1953-ல் அமைக்கப்பட்டது. முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு கலேல்கர் குழு என்று பொதுவாக அழைக்கப்பட்டது. திரு. காகா சாகிப்

**10-50 மணி.**

கலேல்கர் தலைமையில் அமைந்த இக்குழுவின் உறுப்பினர்களிடையே ஒன்றுபட்ட மனப்போக்கும், ஏகமனதான கருத்துக்களும் ஏற்படவில்லை. எனவே, இக்குழுவின் அடிப்படை பரிந்துரைகளில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குழுவின் தலைவர் காகா சாகிப் கலேல்கரே தனது கடிதத்தில் மிகவும் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். அதாவது, சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைப் பிரிப்பதை தாம் எதிர்ப்பதாகவும், குழு அறிக்கைகளில் தரப்பட்டுள்ள பல பரிந்துரைகளில் தமக்கு வேறுபாடு இருப்பதாகவும் குறிப்பிட்டார். இக்குழுவின் அறிக்கை 30—3—1955 அன்று குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அது 3—9—1956 அன்று நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 30

முற்பகல் 10-50

கலேல்கர் குழுவின் பரிந்துரைகளின் மீது மத்திய அரசு எவ்வித உத்தரவுகளும் பிறப்பிக்கவில்லை. கலேல்கர் குழுவின் அறிக்கையில் அடிப்படை மாறுபாடுகள் இருந்தமையால், மத்திய அரசு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவை 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் அமைத்தது. இதன் தலைவராக திரு. பி. பி. மண்டல் அவர்களும், உறுப்பினர்களாக திருவாளர்கள் ஆர். ஆர். போலே, திவான் மதன்லால், தீனபந்து சாகு, கே. சுப்பிரமணியம் ஆகியோரை நியமனம் செய்தது. அவர்களுள், திரு. தீனபந்து சாகு உடல் நலக்குறைவால் உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகவே, அவருக்கு பதில் திரு. எல். ஆர். நாயக், குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

திரு. மண்டல் அவர்களின் தலைமையிலான இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு, தனது அறிக்கையை 31—12—1980 அன்று மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மண்டல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது. இப்பேரவை, முந்தைய அரசின் ஆட்சிக் காலத்தில், 12—5—1989 அன்று மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைக் கோரி, ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. மத்திய அரசு 13—8—1990 ஆம் நாளிட்ட, தனது குறிப்பாணையில், மத்திய அரசு அலுவலகங்களிலும், அதன் கட்டுப்பாட்டில் உள்ள, பொதுத் துறை நிறுவனங்களிலும், 27 சதவீத இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. ஆனால் இந்த ஒதுக்கீடு, கல்வி நிறுவனங்களில் அனுமதி குறித்துப் பொருந்துமா என்பது பற்றி, எவ்வித ஆணையும் பிறப்பிக்கவில்லை. எனினும், அன்றைய தமிழக அரசு, இப்பேரவையில் 21—8—1990 ஆம் நாளன்று, மத்திய அரசின் இந்த 27 சதவீத இட ஒதுக்கீட்டு முடிவைப் பாராட்டி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால், இந்த முடிவை மத்திய அரசு அறிவித்தவுடன், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாகவும், அதன் நோக்கம் நிறைவேறத்தக்க வகையிலும், நடைமுறைப் படுத்தவேண்டும் என்றும் வற்புறுத்தி வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நான் இந்த 27 சதவீதம் மட்டுமே ஒதுக்கீடு என்பதையும், கல்வித் துறையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை என் அன்றைய



1991 செப்டம்பர் 30] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

மத்திய அரசு முடிவு செய்திருந்ததையும் வன்மையாகக் கண்டித்தேன் என்பதையும் அனைவரும் அறிவீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி.)

மண்டல் கமிஷன் தன்னுடைய பரிந்துரையில் பிற்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் 52 சதவீதம் இருக்க வேண்டுமென, தன்னுடைய பிரதான பரிந்துரையாக செய்திருந்ததை, மத்திய அரசு கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டதைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஏற்கனவே தமிழகத்தில் கடைப்பிடித்து வரும், 50 சதவீத இட ஒதுக்கீட்டுக் கொள்கை போன்று, மத்திய அரசிலும் இருந்திடவேண்டுமென தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. எங்களது தேர்தல் அறிக்கையிலும் இக்கொள்கையைத் தான் தெரிவித்துள்ளோம். ஆனால், மத்திய அரசின் இந்த 27 சதவீத ஒதுக்கீட்டு அறிவிப்பினை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் இந்த மத்திய அரசின் ஆணையினை செயல்படுத்தக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்தது. மேற்படி தடையுத்தரவை நீக்கக் கோரி மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் எதிர்மனு தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசும், உச்சநீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளது. ஆனால் 30—6—1990 அன்று, இந்தியப் பிரதமருக்கும், முந்தைய அரசு எழுதிய கடிதத்தில் 52 சதவீத ஒதுக்கீடுதான் தமிழ்நாடு அரசின் நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தாலும், இட ஒதுக்கீட்டினை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, வேலை வாய்ப்பிலும், கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும் அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவில்லை என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

உச்ச நீதிமன்றம் தற்போதைய மாறிய அரசியல் சூழலில் இப்பொருள் மீது மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கையை கூறுமாறு அறிவித்து, இறுதி விசாரணை நாளை 1—10—1991 ஆம் தேதிக்குத் தள்ளி வைத்துள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்

4—7—1991 ஆம் நாளன்று, இப்பேரவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையிலும், 4—9—1991 அன்று நிதியமைச்சர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையிலும், 18—9—1991 ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண் 32-ன் மீது நிகழ்ந்த விவாதத்திற்கு நான் அளித்த பதிலுரையிலும், இம் முக்கிய பொருள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. நமது நாட்டின் மக்கட் தொகையில் 1931 சென்சஸ்படி, இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் அளவு 52 சதவீதமாக இருப்பதாலும், தமிழகத்தின் மொத்த மக்கட்தொகையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் 67 சதவீதம் இருப்பதாலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை மத்திய அரசு 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு உயர்த்த வேண்டும். இந்த ஒதுக்கீட்டினை வேலைவாய்ப்பிற்கு மட்டுமின்றி கல்வி நிறுவனங்களின் அனுமதிக்கும் பொருந்துமாறு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்பதே இந்த அரசின் உறுதியான நிலையாகும். (மேசையைத் தட்டும் ஒலி.)

சமூக நீதியைக் காத்திட சமுதாய நிலையிலும், கல்வித் துறையிலும் பின்தங்கியுள்ள வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைந்து முழுமையாக நிறைவேற்றி செயல்படுத்திட மத்திய அரசு மனப்பூர்வமாக முன்வரவேண்டுமென்றும், அப்படி மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை செயல்படுத்துகையில் பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும் 50 சதவீத இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்து கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சத இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்றும் இப்பேரவை மத்திய அரசை வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழக அரசின் இந்த உறுதியான நிலையைத் தெளிவாக மைய அரசுக்குத் தெரிவித்து, வலியுறுத்தவேண்டி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இந்தத் தீர்மானத்தை முன் வைத்து நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி, தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





## தீர்மானம்.

"அரசியல் அமைப்புச் சட்டத்தின் 340-வது விதியின்படி, சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றி வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இந்த நோக்கத்தினை சிறப்புடன் செயல்படுத்துகிற வகையில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவு 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக தமிழக அரசால் 1980 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர் தொழிற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதிலும், அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதிலும் அதிகப் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அன்றைய மத்திய அரசு 13—8—1990 நாளிட்ட தனது குறிப்பாணையில், மத்திய அரசு அலுவலகங்களிலும், இதன் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவினை 27 விழுக்காடு என்று ஆணை பிறப்பித்தது. இன்றைய மத்திய அரசும் தனது சமீபத்திய முடிவின் மூலம் அதே 27 விழுக்காட்டைத்தான் குறிப்பிடுகிறது. ஆனால் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பற்றி எந்தவித ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, சமுதாய நிலையிலும் கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு உதவுகிற வகையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைந்து முழுமையாக நிறைவேற்றி செயல்படுத்திட மத்திய அரசு முன் வரவேண்டும் என்றும், மேலும் மண்டல் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதில் 27 விழுக்காடு என்பதற்குப் பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்வதை கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக்

கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது."

முற்பகல் 11-00

பிற்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டு வரலாற்றில் ஒரு முக்கிய காலக் கட்டத்தில் பேரவையில் என்னால் முன் மொழியப் பெற்றுள்ள இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை, இப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்று நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மேலான கருத்துக்களை தெரிவித்த பின்னர், தேவையேற்படின், என்னுடைய விளக்கத்தை இறுதியில் தெரிவிக்கிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தின் மீது விவாதம். தொடங்கி வைப்பவர் திரு. செ. கு. தமிழரசன்.

**திரு. செ. கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சி தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற வரலாற்று சிறப்புமிக்க இந்த தீர்மானத்தை இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து பேசுவதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த 50 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பிலே தமிழகம் முழுவதிலும் சுவரொட்டிகள் ஒட்டி வெளிப்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிக்கை விடுத்த போது இது வாக்குகளுக்காக நடைபெறும் நாடகம் என்று சிலர் குற்றச்சாட்டினை குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னாலே இது நாடகம் அல்ல என்று தெளிவுபடுத்தக் கூடிய வகையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே புரட்சித் தலைவி அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டை தெளிவு படுத்தியிருந்தார்கள்.





இன்றைக்கு அவைகள் எல்லாம் பொய்யல்ல; உண்மையாகவே செயல்படுத்திக் காட்ட முனைந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிற வகையிலே எவரும், இந்தியத் துணை கண்டத்தில் செய்ய முடியாது ஒன்றை தமிழ்நாடு சட்டமன்றம் முன் உதாரணமாக நின்று இன்றைக்கு இதைத் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று வழி மொழிந்து பாராட்டுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த இட ஒதுக்கீட்டின் மூல கர்த்தாக்களாக இருந்த இந்திய அரசியல் சட்டத்தினுடைய சிற்பி பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கர், டாக்டர் ராம்மனோகர் லோகியா, மகாத்மா பூலே, நம்முடைய அருமை தந்தை பெரியார் ஆகியவர்களுடைய எண்ணங்களெல்லாம் இன்றைக்கு இந்த மாமன்றத்திலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சமத்துவ சோஷலிசத்தை நம்முடைய தலையாய கொள்கையாக எடுத்துக் கொண்டு' லட்சியமாக எடுத்துக் கொண்டு இன்றைக்கு ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். சமத்துவம் என்பதனுடைய விளக்கமே எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதுதான். சம வாய்ப்பு என்றால், எளியவர்களுக்கு வாய்ப்பு பெற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, வாய்ப்பே கொடுக்காமல் ஒதுக்கப்பட்டிருக்கின்றவர்களுக்கு, அவர்களுக்கெல்லாம் உரிய வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தித்தர வேண்டும். அந்த வகையிலே சமத்துவத்தை சோஷலிசத்தை நம்புகிற எவரும், அதை லட்சியமாக ஏற்றுக் கொண்டிருக்கிற எவரும் இப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டு முறையை நிச்சயமாக வரவேற்றுத்தான் ஆகவேண்டும். இந்தச் சட்டமன்றம் வரலாற்று சிறப்புடையது.

1926 ஆம் ஆண்டு இந்தச் சட்டப்பேரவையிலே, இன்றைக்கு ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பாக கம்யூனல் ஜி.ஓ. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று சொல்லப்படுகிற அந்தச் சட்டத்தை நம்முடைய தமிழகம்தான், இந்த மன்றம் தான் முதன் முதலிலே நம்முடைய இந்திய துணை கண்டத்திலே எடுத்து

காட்டாக எடுத்துச் சொல்லி இயற்றி இருக்கிறது. 1926-லே அன்றைக்கு அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள் அந்த ஆணையைப் பிறப்பித்தார்கள். முத்தையா முதலியார் அவர்கள் அந்த ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள். இட ஒதுக்கீடு என்பதை சொல்ல வருகிறபோது பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் சொல்வார்கள். பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சில குறிப்பிட்ட சமுதாயத்தை நாம இந்த வேலையைச் செய்யவேண்டாம். இதைப் படிக்க வேண்டாம, இந்த தொழிலிலே நீங்கள் ஈடுபட வேண்டாம், இவற்றில் எல்லாம் நீங்கள் கலந்துக்கொள்ளக் கூடாது என்று நாம் ஒதுக்கி, ஒதுக்கி வைத்திருந்தோம். அதற்கு நாம் நிவாரணம் காண வேண்டுமென்றால் அவர்களுக்கு எல்லாப் பணிகளிலேயும் ஒதுக்கீடு தர வேண்டும். ஒதுக்கி வைத்ததற்கு நிவாரணமாகத்தான் நாம் இன்றைக்கு ஒதுக்கீடு தருகிறோம் என்று அவர்கள் மிக சுவையாக விளக்கத்தை தந்தார்கள்.

முற்பகல் 11-05

அதுமட்டுமல்ல; ஒரு சவலைக் குழந்தைக்கு, ஒரு நொண்டி குழந்தைக்கு, இது உடல் ஊனமுற்ற குழந்தை என்பதனால் ஒரு சிறப்புப் பார்வையை நாம் பார்க்க வேண்டும். இதை சிறப்பாக கவனிக்க வேண்டுமென்று எப்படி ஒரு தாய் விரும்புவாளோ அப்படி நம்முடைய சமுதாயத்திலே ஃபிசிகலி ஹேண்டிகேப்டு என்று சொல்கிறார்களே அதைப்போல சோஷியலி ஹேண்டிகேப்டாக இருக்கின்ற சமூகத்திலே கிடக்கின்ற அந்த தாழ்த்தப்பட்ட மக்களை, ஒதுக்கப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை தாய் உள்ளத்தோடு நாம் தூக்கி விடுவதற்கு கொஞ்சம் சிறப்பு திட்டங்களோடு பார்வை செலுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் இந்த இட ஒதுக்கீட்டு முறையே செயல் படுத்தப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமூக அந்தஸ்து இல்லாது இருப்பவர்களுக்கு சமூக அந்தஸ்தை தேடித் தருவதற்கு இந்த இட ஒதுக்கீட்டு முறை மிக மிக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. பொதுவாகவே ஒரு குற்றச்சாட்டை இதை எதிர்க்கின்றவர்கள் சொல்கிறார்கள். அது என்ன குற்றச்சாட்டு என்றால், இதன் வழியாக நாம் இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்தினால் தகுதி குறைந்து விடுகிறது, திறமையின்மை





அதிகரித்து விடுகிறது. தகுதியும், திறமையும் என்ற அடிப்படையிலே தான் சம வாய்ப்பு தரப்பட வேண்டும் என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பல மனோதத்துவவாதிகள் தொடர்ந்து ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். எல்லோருக்கும் சமமான திறமையும், தகுதியும் எப்போதும் வருவதற்கான வாய்ப்பே விஞ்ஞானப் பூர்வமாக கிடையாது. மரபு வழியிலே தான் தகுதியும் திறமையும் 50 விழுக்காடு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. மரபு வழி—ஹெரிடிடரி என்று சொல்கிறார்களே அந்த மரபு வழி விஞ்ஞானப் பூர்வமாக ஒரு இன்றியமையாத காரணமாக இதிலே இருக்கிறது. எடுத்துக்காட்டாக சென்னையிலே படிக்கின்ற ஒரு பெரிய வசதியுள்ள குழந்தைக்கு விமானத்தை தெரியும், ஹெலிகாப்டரைத் தெரியும், வேறு பல கம்ப்யூட்டர் சாதனங்களை எல்லாம் தெரியும். கிராமத்திலே இருக்கின்ற அந்த குழந்தைகளுக்கு அவைகளையெல்லாம் தெரிவதற்கான வாய்ப்பே கிடையாது. ஆக அந்த மரபு வழி சிந்தனை என்பதும், அந்த ஹெரிடிடரி என்பதும் கல்வி அறிவிலும், தகுதியிலும் ஒரு இன்றியமையாத பங்கை கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதை விஞ்ஞானப் பூர்வமாக எவருமே மறுக்க முடியாது. மிகப் பெரிய மனோதத்துவ, ஆராய்ச்சி நிபுணராக இருந்த சிக்மன் பிராயர் அவர்கள் கூட இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். எல்லா குழந்தைகளுக்கும் அறிவு என்பதிலும், தகுதி என்பதிலும், திறமை என்பதிலும் மரபு வழி என்பது 50 விழுக்காடு இருக்கிறது என்பதை அவர் வலியுறுத்தி இருக்கிறார். எனவே நாம் நலிந்து இருக்கின்ற சமுதாயத்தினருக்கு விஞ்ஞானப் பூர்வமாக கைதூக்கி விடுவதற்கு இந்த இட ஒதுக்கீட்டு முறையை நாம் சொல்கின்றோம் என்று சொன்னால் அது விஞ்ஞானப் பூர்வமாக நியாயம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய 340 ஆவது பிரிவின் படியும், 16 ஆவது பிரிவினுடைய உட் பிரிவு 4 பிரிவின் படியும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களை கைதூக்கி விடுவதற்கு, தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்கு அவர்களை சமூக அந்தஸ்திலும், பொருளாதார அந்தஸ்திலும், அரசியல் அந்தஸ்திலும் மூன்று அந்தஸ்துகளிலும் உயர்த்திக் காட்டுவதற்கு ஏதாவது ஒரு முறையை நாம் செயல்படுத்தியாக வேண்டும்

என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இவைகளை செயல்படுத்த வில்லை என்ற காரணத்திற்காக அரசியல் சட்டத்தினுடைய கர்த்தாவாக இருந்த மாபெரும் தலைவர் பேரறிஞர் அம்பேத்கார் அவர்களே, நாடாளுமன்றத்திலே முதல் சட்ட அமைச்சராக இருந்த போது இந்த 340 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி தன்னுடைய அமைச்சர் பதவியையே ராஜிநாமா செய்தார். ராஜிநாமா செய்த தோடு மட்டுமின்றி பாராளுமன்றத்திலே இவைகளை எல்லாம் முறைப்படுத்தாததினால் நான் இந்தப் பதவியை ராஜிநாமா செய்யவேண்டியிருக்கிறது என்று வெளியேறினார். அந்த நிகழ்ச்சியை எல்லாம் நான் இங்கே நினைவுபடுத்துவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அவர்களுக்கு கமிஷன்களை மத்திய அரசு போட்டிருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிட்டதைப் போல 1953-லே கார்கா சாகிப் கலேல்கர் கமிஷன், அதற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இளையபெருமாள் கமிஷன், அதற்குப் பிறகு மாண்புமிகு மொரார்ஜி அவர்கள் பிரதமராக இருந்தபோது மண்டல் கமிஷன் இப்படி பல கமிஷன்களை மத்திய அரசு போட்டிருக்கிறது. தமிழகத்திலே கூட சட்டநாதன் கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1982லே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த போது அம்பாசங்கர் கமிஷன் போடப்பட்டது. இப்படி பல கமிஷன்கள் போட்டு நாம் எப்படியாவது இந்த மக்களை சமூக அந்தஸ்திலே உயர்த்த வேண்டும், பொருளாதார அந்தஸ் திலே உயர்த்த வேண்டும், அரசியல் ரீதியான அந்தஸ்திலே உயர்த்த வேண்டும் என்று நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு இவைகளுக்கெல்லாம் இறுதி வடிவமாக இருப்பதைப் போல தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நாட்டு மக்களுக்கு எது நன்மை பயக்கின்றதோ, சமுதாயத்திலே எது சமூக நீதியை வழங்கு கின்றதோ அவைகளை எல்லாம் துணிச்சலோடு செய்து கொண் டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வாய் வீராப்பு பேசிக்கொண்டிருப்பவர்களுக்கு மத்தியிலே வாய்ச்சவடால் பேசிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு மத்தியிலே செயல் பூர்வமாக, ஆக்கப் பூர்வமாக இந்த தனித் தீர்மானத்தை அரசினர் தீர்மானமாக



முற்பகல் 11-10

இங்கே அறிவித்திருக்கிறார், முன்மொழிந்திருக்கிறார். எதிரி களுடைய வாதங்களைத் தவிடுபொடியாக்குகின்ற வகையிலே இந்த தீர்மானத்தை முன்மொழிந்திருப்பதை நான் மனப்பூர்வமாக ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பிலே இங்கே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசியல் நிர்ணயச் சபையில் பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் ஒரு கருத்தை வலி யுறுத்தினார்கள். இட ஒதுக்கீடு எவ்வளவு தந்தாலும் அது 70 சதவீதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேறு பல நலிந்த பிரிவினர்களுக்கு நாம் வழங்குகிறபோது எப்படி போனாலும், மொத்தமாக அது 70 சதவீதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். மீதி 30 சதவீதம் இருக்க வேண்டும் என்று ஏன் கருதினார் என்றால் அது அதர் கம்யூனிட்டிஸ் என்று சொல்லுகிறோமே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அல்லாத, முற்படுத்தப் பட்ட மக்கள் என்று சொல்லுகிற அந்த அதர் கம்யூனிட்டீஸ் இருக்கிறதே அவைகளுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டு இருக்கின்ற ஏழை மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த 30 சதவீதத்தை நாம் தொடக்கூடாது. 70 சதவீதம் வரையில் நாம் தந்து கொள்ளலாம் என்று அவர் சொன்னார். ஆனால் இன்றைக்கு நாம் இங்கே 50 சதவீதம் தந்து இருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம்; மலைஜாதியினருக்கு 2 சதவீதம் ஆக அது கிட்ட கிட்ட 70 சதவீதத்திற்கு வந்து விடுகிறது. மீதி 30 சதவீதம் இருக்கிறது. அந்த 30 சதவீதத்திலேயே தான் பொருளாதார ரீதியாக தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்கு 'எக்கனா மிக்கலி டிப்ரஸ்டு' அது எந்த ஜாதியாக இருந்தாலும் எந்த மதமாக இருந்தாலும் அவர்களுக்கு ஏதாவது நாம் செய்ய முடியுமா என்றால் அந்த 30 சதவீதத்திலே அவர்களுக்கு தனியாக எதுவும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறோம்.

இந்தியாவில் இதுவரை பல கமிஷன்கள் போடப்பட்டு இருந்தாலும் கூட யார் உண்மையான பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதை இதுவரையிலும் உறுதியாகவும், இறுதியாகவும் எந்த கமிஷனாலும் தெரியபடுத்த முடியவில்லை. எந்த மாநிலத்திலும்

மேற்கு வங்கம் ஆனாலும், பீகார் ஆனாலும், வேறு பல மாநிலங்கள் ஆனாலும் பல கமிஷன்கள் போடப்பட்டும் கூட, எது எது பிற்படுத்தப்பட்ட ஜாதி, எது எது முற்படுத்தப்பட்ட ஜாதி என்பதை இன்னும் இறுதியாக ஒரு முழு வடிவம் கொடுத்து எந்த கமிஷனாலும் சொல்ல முடியவில்லை.

நம்முடைய தமிழ்நாட்டிலே கூட குறும்பர் என்று இருக்கிறார்கள், குறும்பாஸ் என்று இருக்கிறார்கள். குறும்பர் என்று சொன்னால் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். குறும்பாஸ் என்று சொன்னால் அவர்கள் உடனே மலை ஜாதி ஆகி விடுவார்கள். சான்றிதழ் வழங்கும்போது ஒரு 'ஸ்' வந்து விட்டாலே போதும் அவர்கள் மலை ஜாதியாகி விடுவார்கள். ரெட்டி என்று சொன்னால் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள்; கொண்டாரெட்டி என்று சொன்னால் அவர்கள் மலை ஜாதி ஆகி விடுவார்கள். நாயக்கர் என்று சொன்னால் அவர்கள் பிற்படுத்தப் பட்டவர்கள்; காட்டு நாயக்கர் என்று சொன்னால் அவர்கள் மலை ஜாதி ஆகிவிவார்கள். வண்ணார் என்று சொன்னால் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள்; குதிரை வண்ணான் என்று சொன்னால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிவிடுவார்கள். இப்படி ஒரு சின்ன சின்ன வித்தியாசங்களிலே இங்கேயும் சான்றிதழ் வழங்குவதிலே ஏகப்பட்ட குளறுபடிகள் வருகின்றன. வண்ணார் என்பதை குதிரை வண்ணான் என்று போட்டால் உடனே பிற்படுத்கப்பட்டவன் தாழ்த்தப்பட்டவன் ஆகிவிடுவான். இதிலே வேறு ஒரு விஷயத்தையும் சொல்ல வேண்டும். ஒரு மாவட்டத்திலே அது பிற்படுத்தப்பட்ட ஜாதியாக இருக்கும். இன்னொரு மாவட்டத்திலே அது மலை ஜாதியாக வந்து விடும். அடுத்த மாவட்டத்திலே தாழ்த்தப் பட்ட ஜாதியாக மாறிவிடும். இப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் கூட இந்த வித்தியாசங்கள் இருக்கின்றன.

கிறிஸ்துவர்களிலே கூட ஒரு மாவட்டத்திலே இருப்பவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இன்னொரு மாவட்டத்திலே இருப்பவர்கள் முற்பட்டவர்களாக வந்து விடுகிறார்கள். தென் பகுதியிலே இந்த நிலைமை இருப்பதை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே அறிவார்கள். இப்படிப்பட்ட இந்த சிக்கல்கள் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்றன.





வேறு பல மாநிலங்களிலே மேற்கு வங்கத்தில் பீகாரில் எல்லாம் ஏகப்பட்ட குளறுபடிகள் இருக்கின்றன. பீகார் மாநிலத்திலே முழுக்க முழுக்க இவர்கள் தான் மலை ஜாதியினர் என்று இன்னமும் அறுதியாக சொல்ல முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே தான் இதை செயற்படுத்துவதிலே இன்னும் கூட கொஞ்சம் தாமதமும், குளறுபடிகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன் (மணியடிக்கப் பெற்றது). நான் இவைகளை எல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் இவைகளை எல்லாம் நாம் செயற்படுத்துகின்றபோது ஒரு ஏழை பிராமணனாக இருந்தால், அவர்களுக்கு கூட படிப்பதற்கு வேண்டிய வசதியை நாம் செய்து தர வேண்டும். 45 ஆண்டு கால சுதந்திரத்திலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஏழைகள், படிப்பு அறிவு இல்லாதவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும், ஏழைகளுக்கு, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டு இருக்கின்ற அவர்களுக்கு ஒரு இட ஒதுக்கீடு தந்தால் அது தவறாக இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

40 ஆண்டு கால இட ஒதுக்கீடு மூலமாக பல்வேறு ஜாதி விளைவுகள் ஏற்பட்டு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் நாம் தருகிறோம். மலை ஜாதியினருக்கு 2 சதவீதம் தருகிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டப்படி நம்முடைய மாநிலத்திலே மலை ஜாதியினருடைய பங்கு மக்கள் கொஞ்சம் குறைவாக இருப்பதால் இங்கே 1 சதவீதம். ஆனால் மத்திய அரசின் அரசியல் சட்ட விதிகளின்படி 2 சதவீதம். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசப்படுகின்றது.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடிகளுக்கான ஒதுக்கீடு தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 1 விழுக்காடு, மத்திய அரசைப் பொறுத்தவரையிலும் 7½ விழுக்காடு.

**திரு. செ. கு. தமிழரசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்காக நாம் 18 விழுக்காடு கொடுக்கிறோம். இந்த 18 விழுக்காடு கடந்த பல்வேறு ஆண்டுகளாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 40 ஆண்டுக்காலம் என்பது ஏறக்குறைய ஒரு தலைமுறை. இந்தத் தலைமுறையிலே கொஞ்சம் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இப்போது பலபேர்களில், சிலர் உயரதிகாரிகளாக வந்திருக்கிறார்கள். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தாழ்த்தப்பட்டவராக இருக்கிறார், ஒரு உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். அவருடைய குழந்தைகள் டான்பாஸ்கோவிலே படிக்கலாம் அல்லது வேறு பல பெரிய பள்ளிகளிலே படிக்கலாம். ஆனால் கிராமத்திலே இருக்கின்ற, இன்னும் ஏர் ஓட்டுகின்றவன்; விறகு பிளந்துகொண்டு இருப்பவன்; விவசாயம் புரிந்துகொண்டிருப்பவன், அங்கே இருக்கின்ற இவர்களுடைய குழந்தைகள், பஞ்சாயத்து பள்ளிக்கூடங்கள், முனிசிபல் பள்ளிக்கூடங்கள் போன்ற இந்தப் பள்ளிக்கூடங்களைத் தவிர வேறு பள்ளிக்கூடங்களுக்கு போகமுடியாத ஒரு நிலைமை. இங்கே டான்பாஸ்கோவிலே படித்த ஒரு மாணவனும் அங்கே சாதாரண பள்ளிக்கூடத்திலே படித்த ஒரு மாணவனும் நாளைக்கு எம்.பி.பி.எஸ். தேர்வுக்குப் போகிறபோது இரண்டு பேருமே இந்த ஷெட்யூல்டு கேஸ்ட் கோட்டாவிலே வருவார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கான கோட்டாவிலே வருவார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் ஒரேமாதிரியான தேர்வு என்கின்ற போது ஒரு பிரச்சினை வந்துவிடுகிறது. அதனால் அவர்களுக்கு அது போய் சேருவதே இல்லை. ஏழை, உண்மையான ஆதிதிராவிட மக்களுக்கு பெரும்பாலும் 90 விழுக்காடு இன்றைக்கு போய் சேருவதே இல்லை. 40 ஆண்டுக்கால ஒரு தலைமுறை வளர்ச்சியிலே இந்தக் குளறுபடியும் இருக்கிறது. இதையும் நாம் வேதனையோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உண்மையான அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய் சேருவதே இல்லை. எனவே, இதிலேயே ஒரு சீலிங் கொண்டு வந்தால்கூட அது நன்றாக இருக்கும். அல்லது மதிப்பெண் போடுகிறபோதே கிராமப்புறத்து மாணவனாக இருந்தால் . . .

(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.



**திரு. செ. கு. தமிழரசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். கிராமப்புறத்து மாணவனாக இருந்தால் அவனுக்கு 10 மதிப்பெண் அதிகமாகத் தருகிறோம் அல்லது 5 மதிப்பெண் அதிகமாகத் தருகிறோம் என்ற நிலைமையிருந்தால் அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால், இந்த இட ஒதுக்கீடு திட்டம் நேரடியாக நாம் யாருக்காக இந்தச் சட்டங்களையெல்லாம் போடுகிறோமோ யாருக்காக நாம் இதையெல்லாம் அமல்படுத்துகிறோமோ அவர்களுக்கு நேரடியாகப் போய் சேரும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல நாம் சாதிகளற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் சமத்துவ சமுதாயத்தை உற்பத்தி பண்ண வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நல்ல முயற்சிகளையெல்லாம், சிறப்புத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். எனவே, கலப்புத் திருமணக் கொள்கைக்கும் இடஒதுக்கீடு தந்தால், அதாவது 5 விழுக்காடோ அல்லது 10 விழுக்காடோ கொடுத்தால் நன்றாக இருக்கும். தாழ்த்தப்பட்ட சாதியோடுதான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதல்ல. முற்படுத்தப்பட்ட சாதியோ பிற்படுத்தப்பட்ட சாதியோ அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட சாதியோ தாழ்த்தப்பட்ட சாதியோ, எந்த சாதியோடு எந்த சாதியோ மாறுகிற ஒரு நிலைமை வந்தால் அது சாதிகளை ஒழித்து சமத்துவ சமுதாயத்தைக் கொண்டுவர முயற்சிக்கிற நம்முடைய நல்ல கொள்கைக்கு, அதை இன்பளிமென்ட் செய்தால், அது ஒரு நல்ல முன்னுதாரணமாக இருக்கும். அவர்களுக்கும் 5 விழுக்காடு தந்தால் நன்றாக இருக்கும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நல்ல கருத்துக்களை எவர் வரினும் துணிந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிற நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டி, வழிமொழிந்து அமைகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா. சா. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற புரட்சித்

[திரு. நா. சா. பழனிசாமி] 1991 செப்டம்பர் 30]

தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு.

"ஜாதி மதங்களைப் பாரோம்; உயர்
ஜென்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே; அன்று
வேறு குலத்தின ராயினும் ஒன்றே"

என்று மகாகவி பாரதியார் அவர்கள், இந்த நாட்டிலே ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும், ஜாதிகளற்ற சமுதாயம், வேதியரும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்று என்கின்ற நிலை இந்த நாட்டிலே உருவாக வேண்டுமென்று லட்சியத்தைக்கொண்டு இருந்தாலும் கூட, நம்முடைய நாடு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஜாதிய அடிப்படையிலே, சமுதாயம் பிரிக்கப்பட்ட நிலையிலே ஜாதி என்பது இந்த நாட்டிலே இன்னும் ஒழிக்கப்படாத ஒன்றாகவும், ஜாதி அடிப்படையிலே முன்னேறியவர்கள், முன்னேற முடியாதவர்கள் என்கின்ற நிலை இந்த நாட்டிலே தொடர்ந்து இருந்து வருகிற காரணத்தினாலும், இந்த இட ஒதுக்கீட்டு கொள்கையை அமல்படுத்தவேண்டும். அதனால்தான் பிற்படுத்தப் பட்ட சமுதாயம் முன்னேறுவதற்கான ஒரு வாய்ப்பு. ஜாதியிலே முன்னேறியவர்களோடு சமமாக அந்தஸ்தை உயர்த்திக் கொள்கிற வாய்ப்பு ஏற்படுகின்ற முறையில் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் துணிச்சலோடு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

முற்பகல் 11.20

தமிழகத்திலேதான், அதுவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கொள்கை கொண்டு வரப்பட்டு, அதன் மூலமாக தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், பட்டித்



1991 செப்டம்பர் 30] [திரு. நா. சா. பழனிசாமி]

தொட்டிகளிலே வாழ்பவர்கள், விவசாயத்தைச் செய்து கொண்டிருப்பவர்கள். கல்வியறிவே பெறாதவர்கள் எல்லாம், கல்விக் கூடங்களுக்குச் சென்று, இன்று அவர்கள் உயர்ந்த பதவி களைப் பெறக்கூடிய வாய்ப்பு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே ஏற்பட்டது. அதற்குப் பிறகுதான், இந்த மண்டல் கமிஷனை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு மண்டல் கமிஷனிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகிதம் என்ற இட ஒதுக்கீட்டைச் செய்தார்கள். ஆனால், சாதி வாரியாக பிற் படுத்தப்பட்டவர்களைப் பிரிப்பதிலே, தமிழகம் மிக முன்னேறிய முறையிலே—தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் எல்லாம் பிற் படுத்தப்பட்டவர்களை சரியான முறையிலே இனம் கண்டு பிரித்து இருக்கிற நேரத்தில், வட மாநிலங்களிலே பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் யார், முன்னேறியவர்கள் யார் என்று சரியாக அந்தப் பிரிவினையைச் செய்யாத காரணத்தினால், ஒரு சிலருடைய தூண்டுதலின் காரணமாக, மண்டல் கமிஷனின் பரிந்துரையை ஏற்றுக் கொள்வதற்கு பெரு வாரியான எதிர்ப்புகள் ஏற்பட்டு, அங்கே உச்சநீதிமன்றத்திற்கு இதுசம்பந்தமாக சென்று, மத்திய அரசே பணிந்து, அதை அமல் படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இந்திய நாட்டிலே ஏற்பட்டது.

ஆனால், இன்றைக்கு மத்திய அரசிலே ஆட்சியிலே இருக்கிற காங்கிரஸ் கட்சியானது மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி 27 சதவிகிதம் என்ற முறையை ஏற்றுக் கொள்வதோடு அதில் கல்வி ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும், பின்னடைந்தவர்கள் என்கிற அந்த பிற்படுத்தப்பட்டவர்களை, இப்போது பொருளாதார நிலையையும் கொண்டுதான், பொருளாதார அடிப்படையிலே ஏழைகளாக இருப்பவர்களுக்குத்தான் அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும், இட ஒதுக்கீட்டிலே ஏழைகள் என்று பொருளாதாரத்தை இடையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜவகர்லால் நேரு அவர்கள் கூட பொருளாதார அடிப்படையை ஏற்றுக்கொள்ளவில்லை. சமுதாயத்தில், கல்வி ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் பின்னடைந்தவர்களுக்குத்தான் அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். பொருளாதாரத்தை இடை யிலே கொண்டுவரக் கூடாது என்பதை அவர்கள் குறியாகக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைய மத்திய அரசும்கூட, 27 சதவிகித ஒதுக்கீட்டை, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஏற்றுக் கொண்டிருப்பதைப்போல் தெரிகிறது. ஆனால், பிற்படுத்

தப்பட்டவர்கள், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, அகில இந்திய அளவிலே 50 சதவிகிதத்திற்கு மேலும், தமிழ்நாட்டிலே 67 சதவிகிதமாக இருந்தாலும்கூட, 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பது, பிற்படுத்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், மிகக் குறைவான ஒரு ஒதுக்கீடாகும். எனவே, பிற்படுத்தப்பட்டவர்கள், தங்களுடைய எண்ணிக்கை அடிப்படையிலே, கல்விக் கூடங்களிலும், வேலைவாய்ப்பிலும் சலுகைளைப் பெற வேண்டுமென்றால், அவர்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு என்பது, கட்டாயமாக அமல்படுத்த வேண்டிய ஒன்று. அதை புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து, மத்தியிலே இருக்கிற அரசு, ஒரு தோழமை கொண்ட காங்கிரஸ் அரசாக இருந்தாலும்கூட, தங்களுடையக் கொள்கையைப் பொறுத்த வரையில்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையைப் பொறுத்தவரையில்—புரட்சித் தலைவரின் அடியொட்டித்தான் புரட்சித் தலைவி அவர்களும் கொள்கையைப் பின்பற்றுவார்கள் என்று நாட்டுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற எண்ணத்தின் அடிப்படையில், இன்று 50 சதவிகித இட ஒதுக்கீட்டை, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கியாக வேண்டுமென்று மத்திய அரசுக்கு—கமிஷன் பற்றிய விவாதம் பாராளுமன்றத்திலே மிகவும் பரபரப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்துவதை எதிர்த்து, பல போராட்டங்கள் முன்னேறிய இனத்தவரால் நடத்தப்படுகின்ற நேரத்தில், 50 சதவிகித இடம் ஒதுக்கியாக வேண்டுமென்ற துணிச்சலான இந்தத் தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்திலே கொண்டுவந்து, பிற்படுத்தப்பட்டவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களைக் கைவிட மாட்டார்கள். இன்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவே தாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு பத்திரிகைகளிலும், ஜால வார்த்தைகளிலும் விளம்பரப்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு மரண அடி கொடுக்கின்றவகையில், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டை, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும்—வேலைவாய்ப்பில் மட்டும் கொண்டுவந்தால் போதாது; கல்விக் கூடங்களிலும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்வி போதிக்கப்ப





மேயானால்தான், அவர்களுக்கு அந்த வசதி ஏற்படுத்தப்படுமே யானால்தான், அவர்கள் வேலைவாய்ப்பைப் பெற முடியும். எனவே, கல்வியிலும் சரி, 50 சத ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அமல்படுத்த வேண்டுமென்ற புரட்சித் தலைவி அவர் களின் இந்த துணிச்சலான தீர்மானத்தை மத்திய அரசுக்கு இந்த நேரத்திலே அனுப்புவதிலே, அதற்கு மனப்பூர்வமான ஆதரவைக் கொடுத்து, இந்த அரிய வாய்ப்பினைக் கொடுத்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். வி. சண்முகம்.

**திரு. எஸ். வி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் முன்மொழிந்திருக் கிற தீர்மானத்தில், மண்டல் குழுவின் பரிந்துரை வேகமாக அமல் படுத்த வேண்டும். அதைப் போலவே, கல்வியிலும் அந்தச் சலுகைகள் பொருந்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே, ஐம்பது சதவீதம் தமிழ்நாட்டில் இருப்பதைப் போல், நாடு முழுவதிலும அமல்படுத்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நிலைமை வேறு. வட மாகாணங்களின் நிலைமை வேறு. தமிழ் நாட்டில் ஐம்பது சதவிகிதத்தில் கைவைத்தால், போர் மூளும், ஆனால், வட மாகாணங்களில் இருபத்தேழு சதம் என்றாலே ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பு நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 1982 இல் மண்டல் குழுவின் பரிந்துரைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது பரிந்துரைகள் நிறைவேறுவதற்கு ஒத்துழைத்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு நன்றி" என்று வாசகத் மண்டல் குழுவின் பரிந்துரைகளின் முதல் பாராவிலே, "அந்தப் தில் பரிந்துரையே தொடங்குகிறது.

மண்டல் குழுவின் பரிந்துரைகள் மீது இந்திய தேசத்தை ஆண்ட, ஏற்கனவே ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக்குக் கருத்து வித்தியாசம் கடுகளவும் இல்லை என்பதைச் சொல்வதற் காகவே இதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி மண்டல்

குழுவின் உணர்வுகளோடு இரண்டறக் கலந்திருந்தது. இன்னும் சொல்லப்போனால், அதை நாடாளுமன்றத்தில் வைக்கப் படுவதற்கு அன்றைக்குக் காங்கிரஸ் கட்சி உறுதுணையாக இருந்தது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளில் 27 சதவீதம் வேலை வாய்ப்புகளுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. வேலை வாய்ப்பில் மாத்திரமல்ல, அரசின் உதவிபெறும் அனைத்து நிறுவனங்களிலும் இந்த சதவீதம் அமல்படுத்தப்பட வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. கல்வியிலும் அது இருக்க வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்வி வாய்ப்பில் மட்டு மல்ல ; சலுகைகள் வழங்கப்படுகின்ற அனைத்து வாய்ப்புகளிலும் இந்தச் சதவீதம் பொருந்த வேண்டுமென்று மண்டல் மிகத் தெளி வாகச் சொல்லியிருக்கிறார். ஒருபடி மேலே போய், படித்தவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் விஷயம் மாத்திரம் அல்ல, படிக்காத வர்களும், பாமரர்களும் இதன் பலனைப் பெறுவதற்கு, நில உச்ச வரம்புச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி அந்த நில உச்ச வரம்பில் கிடைக்கின்ற மிச்ச நிலங்களை வழங்குவதிலும் மண்டல் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவற்றைச் சொன்னதோடு நில்லாமல், நான் சொல்லியிருக்கின்ற எல்லாவற்றையும் ஏக காலத்தில் அமல் படுத்த வேண்டும். எங்காவது ஒரு இடத்தில் மாத்திரம் எடுத்துக் கொண்டு அமல்படுத்தினால் அது விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்று அன்றைக்கே மண்டல் எச்சரித்திருக்கிறார். ஆனால், முந்தைய வி.பி. சிங், தலைமையில் இருந்த மத்திய அரசு வேலை வாய்ப்பிலே மாத்திரம் அதை ஏற்றுக்கொண்டு, இதர விஷயங் களில் புறக்கணித்ததால், அன்றைக்கு நாடு முழுவதும் கொந்தளிப் பான நிலை ஏற்பட்டது. இப்போதைய பிரதமரும் அதையேதான் சொல்லியிருக்கிறார்கள். அதனால், விபரீதம் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது.

அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட போது இரண்டு கட்சிகள்தான் அதை எதிர்த்தன. ஒன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இன்னொன்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. இந்த இரண்டு கட்சிகளும், நாடாளுமன்றத்தில் எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், இன்னும் பல மாகாணங்களில்; இதை ஏற்கக்





கூடாது என்று வலியுறுத்தியும் பேசினார்கள். இன்றைக்கும் மேற்கு வங்காளத்தில் ஒரு சதம் கூட பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. மேற்கு வங்காளத்தில் 117 பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் இருக் கிறார்கள் என்று மண்டல் குழு மிகத் தெளிவாகத் தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறது. ஆகவே, இந்த அறிக்கையை, இந்தத் தீர்மானத்தை, இந்திய அரசு ஏற்கும்போது, வட மாகாணங்களில் சற்றுக் கொந்தளிப்பு ஏற்படும் நிலை இருக்கும். ஏனெனில், தென்னாட்டில், தந்தை பெரியார் தோன்றி, பிற் படுத்தப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்குப் போராட்டங்கள் நடத்தியதன் உணர்வு தமிழகத்தில் இருக்கிறது. வட மாகாணங் களில் அன்றும் சரி, இன்றும் சரி, எதிர்காலத்திலும் சரி, சனாதன சந்தர்ப்பவாதிகள், அவர்களுடைய ஆதிக்கம்தான் அரசியலிலே அதிகமாக இருக்கிறது என்பதனால், இதனை வட மாகாணங் களில் ஏற்படுத்துவது என்பது மிகவும் கஷ்டமான நிலைமையாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவுக்கே ஒரு வழி காட்டக்கூடிய இந்தத் திட்டத்தை நம்முடைய தமிழக அரசு முன் மொழிந்திருக்கிறது. இதில் சிரமங்கள் இருக்கலாம்; கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால் இதனை அமல்படுத்துவதில் மத்திய அரசு முனைப்போடு முயன்றால் நடக்கும் என்ற கருத்தை மாத்திரம் சொல்லி இந்தத் தீர்மானத்தை சார்ந்திருக்கின்ற ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வாழ்த்தி வரவேற்கிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். ஆண்டித் தேவர்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இட ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடுவேண்டும் என்பதனை நீண்ட நெடுங் காலமாக வலியுறுத்தியதன் காரணமாக மற்ற மாநிலங்களை விட தமிழ் மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் யார், தாழ்த்தப் பட்டவர்கள் யார் என்று முன்னதாகவே பிரிக்கப்பட்டு இந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது உண்மை என்றாலும் கூட மத்தியிலே இட ஒதுக்கீடு சம்பந்தமாக இந்திய அரசியல் சட்டம்

இயற்றப்பட்டபோது டாக்டர் அம்பேத்கர் அவர்களும், மற்றவர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு உடனடியாக சலுகைகள் வழங்கவேண்டும் என்று சொன்ன அடிப்படையில் இந்திய அரசியல் சட்டத்திலேயே 18 சதவீதம் அவர்களுக்கு முதலிலேயே ஒதுக்கப்பட்டு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதோடு மட்டுமல்லாமல் சட்டமன்றங்களிலும், பாராளுமன்றங்களிலும் அவர்களுக்கென்றே தனி இடங்களை ஒதுக்கி அவர்களும் சமத்துவமாக வரவேண்டும், மற்ற இன மக்களோடு இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்திலே இந்திய அரசியல் சட்டம் இயற்றியவுடனே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தச் சலுகை வழங்கப்பட்டது. அதற்குப் பின்னால் தந்தை பெரியார் போன்றவர்களும், மற்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்று சொன்ன காலகட்டத்தில் தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் மண்டல் கமிஷன் பரிந்துரையில் 52 சதவீதம் என்று அவர்கள் சொல்லியிருந்தாலும் கூட, உச்சநீதிமன்றத்தினுடைய ஒரு தடை காரணமாக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தைரியமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் என்று இட ஒதுக்கீட்டைச் செய்தார்கள். அதன்படி கல்வி நிறுவனங்களிலும், அரசு அலுவலகங்களிலும், அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்களிலும் சரி, மற்றவைகளிலும் சரி 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக நிறைவேற்றிக் காட்டினார்கள். தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் புரட்சித் தலைவரின் ஆட்சியை நிறுவியே தீருவோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் புரட்சித் தலைவருடைய கொள்கையை நிறைவேற்றுவோம் என்ற முறையில் 50 சதவீத ஒதுக்கீட்டினை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும் என்று இன்றைக்கு தமிழகத்திலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மண்டல் கமிஷன் பரிந்துரையை இதற்கு முந்தைய அரசு அவசரம் அவசரமாக ஓட்டுக்களைப் பெறவேண்டும் என்ற காரணத்தால் மண்டல் கமிஷன் பரிந்துரை கூறிய முறையில் அதை அறிவிக்காமல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் என்பதை அறிவித்தபோது வட மாநிலங்களில் கொந்தளிப்பு ஏற்பட்டு புரட்சியே





நடந்தது என்று சொல்லலாம். அந்த 27 சதவீதத்தை வட மாநிலங்களில் எதிர்த்தார்கள். இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு அதே 27 சதவீதம் தான் அளிக்கவேண்டும் என்று சொல்கிற நேரத்தில்—நாம் பத்திரிகையில் பார்க்கிறோம்—வட மாநிலங்களில் அதற்குக் கூட எதிர்ப்பு வந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தைரியமாக இந்த மன்றத்திலேயே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி இன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவருடைய தைரியத்தையும் மன உறுதியையும் இந்த மன்றம் பாராட்டாமல் இருக்க முடியாது. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிலே எதிர்ப்பு இருக்கிறது, பல்வேறு இயக்கங்கள் எதிர்க்கின்றன, பல்வேறு மாநிலங்கள், எதிர்க்கின்றன என்ற போதிலும் கூட 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு, மத்திய அரசு சொன்னது போன்று இல்லாமல், கல்வி நிலையங்களிலே, அரசு பொது நிறுவனங்களிலே, வேலை வாய்ப்புகளிலே 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கவேண்டும். இதை மற்ற மாநிலங்கள் எல்லாம் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற இந்த தீர்மானத்தை அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து பேசுவதோடு, புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் இந்த தீர்மானத்தோடு அவர்கள் இந்த மாநிலத்திலே நடைமுறைபடுத்துகின்ற மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் சீர் மரபினருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற 20 சதவிகிதம் ஒதுக்கப்படவேண்டும் என்பதையும் இந்த தீர்மானத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மெத்த பணிவோடு கேட்டு, இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் சார்பாக 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு முன்மொழிந்து கொண்டுவருகின்ற இந்த தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினை சொல்ல நான் முன் வருகிறேன். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினைக் கொண்டு வருகி[illegible] இந்த தீர்மா

ளத்தின் மீது சொல்கிறபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மண்டல் குழுவினுடைய அறிக்கை 10 ஆண்டுக் காலமாக கிடப்பிலே கிடத்தப்பட்டிருந்தது. இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலேயும், தமிழகத்திலே கூட அனைத்து அரசியல் கட்சிகளும் மண்டல் குழுவினுடைய அறிக்கைகளை அமல்படுத்த வேண்டும் என்று, பல்வேறு கட்சியினர்கள் கருத்து சொன்ன போது, அந்த மண்டல் குழுவிலே என்ன இருக்கிறது என்பதனை, நடைமுறையில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லா வகுப்பினருக்கும் தெரியாமல் இருந்த ஒரு காலம் உண்டு. அதைத்தான் ஜனதா தளத்தினுடைய ஆட்சி வந்த பின்னால் திரு. வி. பி. சிங் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்கின்ற அந்த மண்டல் குழுவினுடைய அறிக்கையை இந்தியாவிலே 10 ஆண்டுக் காலம் கிடப்பிலே கிடந்ததை அவர்கள் அமல்படுத்தினார்கள். அதற்குப் பின்னால் பல்வேறு விளைவுகள் இந்தியாவிலே ஏற்பட்டது. இருந்தபோதிலும்கூட இன்றைக்கு 27 சதவிகிதத்தைவிட 50 சதவிகிதம் தமிழகத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 50 சதவிகிதத்தினையே அமல்படுத்த வேண்டும் என்று கொண்டு வந்து இருக்கின்ற இந்த தீர்மானத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால் இன்றையதினம் மத்திய அரசால் கொண்டுவந்திருக்கக்கூடிய ஜனதா தள ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்திருக்கின்ற அந்த 27 சதவிகிதத்தை அமல்படுத்துவதற்கு முதலிலே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், இன்றைய தினத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய, அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 27 சதவிகிதம் இட ஒதுக்கீட்டிலேகூட, முற்பட்டோர் சமூகத்திற்கு பொருளாதார அடிப்படையில் 10 சதவிகிதங்கள் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த பின்னால் தான் இன்றைக்கு 27 சதவிகிதத்தை அவர்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது பொருளாதாரத்திலேயும், கல்வியிலேயும் இன்றைக்கு கொண்டு வந்திருக்கக்கூடிய மத்திய அரசினுடைய, பொருளாதார அடிப்படையிலே இன்று கொண்டு வந்திருக்கிற ஒதுக்கீடு மிகப் பெரிய பாகுபாட்டை இன்றைய தினத்திலே உருவாக்கியிருக்கிறது. அவர்கள் இந்த 10 சதவிகிதத்தை உத்தரவாதப்படுத்தி விட்டுத்தான் இன்றைய தினத்திலே 27 சதவிகிதத்தை அவர்கள் அமல்படுத்துகிறார்கள். ஆக, இன்றைக்கு இதுபோன்ற பிளவு படுத்தவேண்டுமென்ற ஒரு முயற்சியில் இன்றையதினம் மத்திய அரசால் இது உருவெடுத்திருக்கிறது. இதைப் பொறுத்தவரையிலே





எங்களுடைய கருத்துக்களை இன்றையதினம் அநேகமாக, மத்திய அரசால் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டிருக்கின்ற 27 சதவிகிதத்தை நீங்கள் அமல்படுத்த முற்பட வேண்டும்.

பிற்பகல் 11.40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 27 சதவிகிதம் போதாது, 50 சதவிகிதம் வேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி :** நான் ஏற்கெனவே 50 சதவிகிதம் பற்றியும் சொன்னேன். 27 சதவிகிதத்தை அமல்படுத்துவதற்கு முன்னால் 10 சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு தான் மத்திய அரசு 27 சதவிகிதத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆகவே, இதில் 50 சதவிகிதம் கேட்கும்போது, இதில் மத்திய அரசு எந்த அளவிற்கு ஒப்புக்கொள்வார்கள் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. வி. இராஜேந்திரன்.

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி.ஐ. உறுப்பினர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக ஒன்று கேட்க விரும்புகிறேன். 10 பர்சன்ட் எக்கானமிக் கிரைட்டேரியா-க்கு உத்தரவாதம் தந்த பிறகுதான் இன்றைக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சி 10 பர்சன்ட் எக்கானமிக் கிரைட்டேரியாவை ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். மேலும் சி.பி.ஐ (எம்.), மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர், மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்கள் இந்த எக்கானமிக் கிரைட்டேரியா என்கிற வகையில் மத்திய அரசு 10 பர்சன்ட் என்று அறிவித்திருப்பதை வரவேற்றிருக்கிறார்கள். அதன்மீதும் உறுப்பினருடைய விளக்கத்தைச் சொன்னால், இத்துடன் இணைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி :** நான் சொல்வது என்பது அநேகமாக 10 சதவிகிதம் முற்படுத்தப்பட்டவர்களுக்கு பொருளாதார அடிப்படையிலே மத்திய அரசால் கொண்டு வந்திருப்பதே ஒரு புதிய பிரச்சினையை உண்டாக்கியிருக்கிறது, உருவெடுத்திருக்கிறது என்பதைத் தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். அவர் பதில் சொல்லியிருக்கிறார். நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்கள் சொல்வது என்பது ஜனதா தள ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய 27 பர்சன்டை முதலில் அமலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டும் என்பதுதான். அதற்குப் பின்னால் தமிழகத்தில் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய 50 பர்சன்டை நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம், ஆதரவு அளிப்போம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதோடு, ஒரு புதிய பிரச்சினையை உருவெடுக்க விடாமல் ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்ற 27 சதவிகிதத்தை நீங்கள் அமல்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை அமல்படுத்துகின்ற விதத்தில் 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்கிற இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து பேசுகின்ற சூழ்நிலையில் உங்கள் முன்னால் ஒரு சில கருத்துக்களை எடுத்துரைக்கலாம் என்று கருதுகிறேன்.

ஜனதா தளத்தைப் பொறுத்தவரைக்கும், இந்திய வரலாற்றில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்று துணிந்து செயல்பட்ட மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் தன்னுடைய ஆட்சியே போனாலும் பரவாயில்லை என்று மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நாட்டுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

1977-லே, முன்னாள் பிரதமர் மரியாதைக்குரிய மொரார்ஜி தேசாய் அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் மண்டல் குழு நியமிக்கப்பட்டு, 1980 டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி தம்



முடைய மறைந்த இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்களிடம் அதன் பரிந்துரை ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அது சம்பந்தமாக அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல், அந்த மண்டல் பரிந்துரைகளை அமல்படுத்தாமல், கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் கிடப்பிலேயே அதை போட்டுவிட்டார்கள். ஆனால் மீண்டும் ஜனதா தள..

**THIRU. S. PETER ALPHONSE:** Point of Order.

அவைக்குத் தவறான செய்தியைத் தருகிறார். . . .

**THIRU P. V. RAJENDRAN:** Poin of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 11.45

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது, இந்த தேசத்தினுடைய முன்னாள் பிரதமர், அன்னை இந்திரா காந்தி அவர்கள் மண்டல் கமிஷனுடைய சிபாரிசுகளையும், அதன்மீது மேற்கொண்டு நடவடிக்கைகளையும், எதையுமே செய்யாமல் கிடப்பிலே போட்டுவிட்டார்கள் என்னும் தவறான தகவலை இந்த அவைக்கு தந்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் மண்டல் கமிஷன் அறிக்கையைப் படிக்கவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நான் கொடியவனல்ல. ஆனால் மண்டல் அவர்களே, இதுபோன்ற முடிவுகள் வருவதற்கு அன்னை இந்திரா காந்தி தான் பேருதவி செய்துள்ளார்கள் என்பதை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே on a Point of Order . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு Point of Order திரு. பி. வி. இராஜேந்திரன்

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** அன்னை இந்திரா காந்தி அவர்கள்தான், தன்னுடைய கமிஷனுக்கு இரண்டு முறை எக்ஸ்டன்ஷன் தந்திருக்கிறார்கள் என்று . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Pcint cf Order என்றால் அவர் சொன்னதைத் தவிர மேற்கொண்டு ஏதாவது இருக்கிறதா ?

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மண்டல் அவர்களே தேங்க் பண்ணியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் அதே செய்தியைத் தான் சொன்னார். டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் அவர்கள் கமிஷன் அறிக்கையைத் தயாரிக்கும்போது அதை எக்ஸ்டன்ஷன் செய்தார்கள். நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் மண்டல் கமிஷன் அறிக்கையைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்த நல்லது என்ன? நாட்டு மக்களுக்கு அந்தப் பரிந்துரைகளின் பேரில் செய்த தொண்டு என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆக அவர்கள் இதிலே அக்கறை காட்டாமல், அதை கிடப்பிலே போட்டுவிட்டு, எங்களுடைய மரியாதைக்குரிய வி. பி. சிங் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமராக வந்தபோதுதான் மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லி, அதைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அன்றைய தினம் 3 மணி நேரம் இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்தக்கூடாது என்று சொன்ன இந்திரா காங்கிரஸ் காரர்கள் இன்றைக்கு . . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து தவறான தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நான் முன்பே குறுக்கிடாமல் இருந்ததற்குக் காரணம், பின்னாலே பேச வேண்டியிருப்பதால் குறுக்கிட வேண்டிய அவசியமில்லை என்று இருந்தேன். 3 மணி





நேரம் மண்டல் கமிஷனையோ, இட ஒதுக்கீட்டை எதிர்த்தோ அவர்கள் பேசவில்லை. எப்படி அது தவறாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. எப்படி தவறான நோக்கத்தோடு, இட ஒதுக் கீட்டிலே போதிய கவனம் செலுத்தாமல், அதிலே இருக்கிற குறை களை அடைத்து எப்படி கொண்டுவரவில்லை, எப்படி கொண்டு வந்திருக்க வேண்டுமென்று எல்லாம் அவர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். நான் பேசும்போது அதைச் சொல் கிறேன். அதற்கு இடையிலே தவறான தகவல்களை அவர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது முறையாக இராது.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அப்படி குறிப்பிடுவார் என்று சொன்னால், மண்டல் பரிந்துரை களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த நேரத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதை அரசு கொண்டு வந்த நேரத்தில், எதிர்த் தவர்கள் இன்றைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அமுல் படுத்தப்பட்டால்தான் அரசியல் பண்ண முடியுமென்ற சூழ் நிலையில் இன்றைக்காவது அந்தப் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள முன் வந்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றையதினம் மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் 50 விழுக்காடு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்று சொல்லி, 50 விழுக்காட்டை ஒதுக்கி இருக்கிறார்கள். அதை அமுல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசையும் நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு உங்களுக்கு நிறைய இடைஞ்சல்கள் கண்டிப்பாக வரும். ஆனால் நீங்கள் சோர்வடைய வேண்டாம். துணிந்து நின்று செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டுமென்று சொன்னபோது எத்தனைப் போராட்டங்கள், எத்தனை ஆர்பாட்டங்கள். எத்தனை எதிர்ப்புகள், எத்தனை எரிப்புகள்—என்னவாயிற்று இறுதியில்? டெல்லியில் நடந்த 27 ஆம் தேதி நடைபெற்ற [illegible]

[1991 செப்டம்பர் 30

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே On a Point of Order . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆ..? He is not yielding.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** டெல்லியில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் எங்களுடைய தலைவர் வி. பி. சிங் அவர்கள் சொல்லும் போது, நாங்கள் கட்டி வைத்த சமூக நீதி என்ற ஆலயத்திற்கு இன்று அனைத்துக் கட்சிகளும் இன்றைக்கு சரணாகதி அடைந்து விட்டன என்று குறிப்பிட்டார்கள். அதைப்போல இன்றைய தினம் சமூக நீதி காக்கப்பட வேண்டுமென்று சொல்லி ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுப்பதோடு, பொருளாதார அடிப் படையில் இட ஒதுக்கீடு கூடாது என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். காரணம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்று சொல்லி, சமூக நீதி என்று இன்றைக்கு அறிவிக்கப்பட்டு அதற்காக . . .

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற போது, அனைத்துக்கட்சிகளும், இன்றைக்கு நாங்கள் கட்டிய கோயிலில் சரணாகதி அடைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அன்றைக்கு வி. பி. சிங் கொண்டு வந்தது ஒரு நெருக்கடியினாலேதான் அவசரக் கோலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அள்ளித் தெளிக்கப்பட்டது ஆகும். அன்றைக்கு துணைப் பிரதமராக தேவிலால் அவர்கள் ஒரு விவசாயப் பேரணியை டில்லியில் கூட்டி, அதற்கு லட்சக்கணக்கில் விவசாயிகள் வருகிறார்கள் என்று தெரிந்து அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்டதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மாத்திரமல்ல, இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இதைக் கொண்டு வருகிறபோது அன்றைக்கும் சொன்னார்கள், இன்றைக்கும் சொன்னார்கள் மண்டல் குழுவினுடைய பரிந்துரையை விரைவில்



[மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மட்டுமல்ல, 'முழுமையாக', 'முழுமையாக' என்று சொல்லி, அவர்கள் பேசுகிற நேரத்தில் கூட பலமுறை சொல்லிவிட்டு, தீர்மானத்தில் கூட 'முழுமையாக' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு கொண்டுவந்தது அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தவர்கள்தான், மண்டல் கமிஷனின் சிபாரிசுகளை ஆழக்குழி வெட்டி அதில் போட்டுப் புதைத்தார்கள். மண்டல் கமிஷன் சிபாரிசை அன்றைக்கு அவர்கள் கொண்டு வந்திருந்தா விட்டால், அது வருகிறபோது முழுமையாக வந்திருக்கும். ஒன்றை உங்களுக்குச் சொல்லவேண்டுமானால், மண்டல் சிபாரிசில் இரண்டு அல்லது 3 சதவீதம் தான் வி. பி. சிங் அன்றைக்கு கொண்டு வந்தார். ஆனால் அன்றைக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க.-வினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையிலும், கட்சியின் தலைவி என்ற முறையிலும் அவர்கள் சொல்கிறபோது 50 சதவீதம் (மேசையைத் தட்டும் ஒலி) அரசு உத்தியோகத்தில் மட்டுமல்ல, கல்வி நிறுவனங்களிலும் வரவேண்டுமென்று சொன்னார்கள். ஏன் அப்படி வரவேண்டுமென்று சொன்னார்கள்? பிள்ளை வரம் கேட்கப் போகின்றவர்கள் திருமணமே ஆகாமல் பிள்ளை வரம் கேட்டால் எப்படி பிள்ளை வரம் கிடைக்கும்? கல்வி நிறுவனங்களில் போவதற்கு இடம் இல்லை, படித்து வந்தால்தானே வேலை? ஆகவே படிப்பதற்கு இடம் இல்லாமல் நீங்கள் இங்கே 25 சதவீதம் என்று சொன்னால் எப்படி நடக்கும்? (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு வி. பி. சிங் அவர்கள் இதைக் கொண்டு வருகிறபோது, ஒரு எருமை மாட்டை குளத்திலே போட்டுக் கொண்டு விலை பேசியதைப் போல கொண்டு வந்தார்கள். இங்கே இருக்கிற அதன் தோழமைக் கட்சிகளும் அதைக் கிணற்றிலே போட்டுக் கொண்டு விலை பேசினார்கள். திருமணமே ஆகாமல் பிள்ளை வரம் கேட்டதைப் போலத்தான் அன்றைக்கு கல்வி நிலையங்களிலே இடம் ஒதுக்காமல், வேலை வாய்ப்பில் மட்டும் தருவோம் என்றார்கள். கல்வி நிலையங்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இந்த விவாதத்தில் ஆளுங்கட்சியின் சார்பில் அவை முன்னவர் அவர்கள் கருத்துத் தெரிவிக்க இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கருத்தையெல்லாம் தெரிவித்தால் நன்றாக இருக்கும். இடையில் ஏதாவது சிறு விளக்கங்கள் சொல்வதாக இருந்தால் அதைச் சுருக்கமாக சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மேலும் தொடர விரும்பவில்லை. ஆனால் அன்றைக்குக் கொண்டு வந்தது அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தார்களே தவிர, அந்த மண்டல் சிபாரிசை இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் முழுமையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அன்றைக்கு முழுமையாகக் கூட அல்ல, 20 சதவீதம் கூட அல்ல, இரண்டே சதவீதம் தான் கொண்டு வந்தார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்றைக்கு மண்டல் பரிந்துரையில் 2 அல்லது 3 சதவீதம் மட்டும்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அதல்ல. மொத்தம் 100 சதவீதம் என்றால் அதை எடுத்துப் பார்க்கிற போது 2 சத வீதம்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இரண்டு சதவீதம் தான் நிறை வேற்றப்பட்டிருக்கிறது என்றாலும், அந்த இரண்டு சதவீதத் தையே ஏற்றுக் கொள்ளாமல் நாட்டில் எவ்வளவு பெரிய வன்முறையை தூண்டிவிட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் முழுவதுமாக கொண்டுவந்தால் பிரச்சினை அதிகமாக வரும் என்கிற காரணத்தாலேதான், தொடக்கத்தில் படிப்படியாகப் போகலாம் என்ற விதத்தில் அதை அமல்படுத்த முன்வந்திருக்கிறார்களே தவிர, அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது என்பதல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** படிப்படியாகப் போகிறபோது, குழந்தைக்கு முதலில் பால் கொடுத்துவிட்டு, பிறகுதான் சோறு போடவேண்டும். முதலிலே சோற்றைப்





போட்டால் எப்படிப் பிழைக்கும்? முதலில் கல்வியில்தான் ஒதுக்கியிருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11.55

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைக்கு பால் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கிற கூழையாவது கரைத்துக் கொடுப்போமே என்ற எண்ணத்தின் அடிப்படையிலே கொண்டு வந்ததே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையாக வி. பி. சிங்குக்கு பிற்பட்ட சமு தாயத்தின் மீது நம்பிக்கை இருந்தால், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றால், செய்வதை முதலிலே கல்வி நிலையங்களுக்குக் கொண்டு வந்திருக்கலாம். முதலிலே கொண்டு வருவதை, ஒரு சதவீதமோ, இரண்டு சதவீதமோ, பத்து சதவீதமோ, முடிந்ததை கல்வி நிலையங்களுக்குக் கொண்டு வர வேண்டும். நீங்கள் கல்வி நிலையங்களுக்குக் கொண்டுவராமல் வேலைக்கு என்பது— ஒன்றும் தெரியாது, ஒன்றும் தெரியாமல் எதையாவது செய்வோம் என்று கொண்டுவரப்பட்டது என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்று சொன்னால், பொருளாதாரம் வேண்டும். அதற்காக பிற்படுத்தப் பட்டவர்களுக்கு முதலாவதாக வேலையைக் கொடுத்துவிட்டு, பிறகு படிக்க வைக்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே கொண்டு வந்ததிலே என்ன தவறு என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** யாருக்குக் கொடுப் பார்கள். படித்தவர்கள் இல்லையென்றால் யாருக்கு முதலிலே கொடுப்பார்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு முதலாவது வேலையைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலே கொண்டு

வசப்பட்டது. இதற்கு ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது நீதித் துறையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். வி. சண்முகம்.

**திரு. எஸ். வி. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, இதை அமுல்படுத்தியதை ஏற்றுக்கொள்ளாமல் தாண்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள் யாரை நினைத்தும் சொல்ல வேண்டாம். வி. பி. சிங் அவர்கள் அறிவித்தபோது அதை எதிர்த்த அதிகமான முதலமைச்சர்கள் ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்கள், அதைத் தாண்டிவிட்டவர்கள் ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே பிறந்திருக்கிற குழந்தைகளுக்கு, அவர்கள் வளருவதற்கு உத்திரவாதத்தை அளித்துவிட்டு பிறகு பிறக்கிற குழந்தைகளைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றுதான் வி. பி. சிங் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். படித்திருக்கிற பல இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு, பட்டதாரிகளுக்கு முதலிலே வேலைக்கு உத்திரவாதம் செய்ய வேண்டும் என்றுதான் பிற்பட்ட சமுதாயத்திற்கு 27 சதவீதம் என்று அமல்படுத்தினார். பிறப்பதை பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால் ஏற்கெனவே பிறந்த குழந்தைகளைக் காபந்து பண்ண வேண்டும் என்பதுதான் இன்றைக்குள்ள முக்கிய பிரச்சினை. அந்த அடிப்படையிலே தான் திரு. வி. பி. சிங் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே பல பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** நம்முடைய வி. பி. சிங் அவர்கள் இந்தக் கொள்கையை அறிவித்த நேரத்தில் எங்களோடு இருந்த பாரதீய ஜனதா கட்சியினர்கூட, மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்திவிட்டார்கள் என்று சொல்லி ஓடிவிட்டார்கள். அது பிரச்சினையல்ல. ஆனால் அந்த நேரத்தில் எதிர்த்த பாரதீய





ஜனதா கட்சி கூட இப்போது தேர்தல் வந்து வெற்றி அடைந்து வுடன் உத்திரப் பிரதேச மாநிலத்தில் அதனுடைய முதலமைச்சர் கல்யாண்சிங் மூலம் 27 சதவீதம் இட ஒதுக்கீட்டை அமல் படுத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரப் பிரதேசத்தில் 27 சதவீதம் அமல்படுத்தப் பட்டது என்று சொல்கிறார்கள். அந்த 27 சதவீத இட ஒதுக்கீட்டினுடைய ஆணையின் கதி என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு என்று வருகிற நேரத்தில் எல்லா பகுதிகளிலும் அது பிரச்சினையாக வந்து கொண்டிருக்கிறது. அதை யாருமே ஏற்றுக்கொண்டு முன்னால் வந்து ஆதரிக்கிற பெருந்தன்மை இல்லாமல் போகிற சூழ்நிலை ஏற்பட்டதுண்டு. இருந்தாலும் துணிச்சலுடன் செயலாற்றிய மனப்பக்குவம் யாருக்கு இருக்கிறது என்பதுதான் கேள்வி. இந்த நாட்டு பிற்பட்டச் சமுதாய மக்களுக்கு வாழ்வு வழங்க வேண்டும் என்று சொல்லி துணிந்து செயலாற்றிய, அந்த திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக அதையே பிரச்சினையாக கிளப்பி விட்டிருக்கிறார்கள். இப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மரியாதைக்குரிய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் கூட 27 சதவீதம் என்று அறிவித்திருக்கிறார். அங்கே, அதிலே பிரச்சினை வரவில்லையா? அங்கேயும் பிரச்சினை வந்து கொண்டுதான் இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே இதே தீர்மானம் விவாதிக்கப்பட்டது. அப்போதும் இதைப் போல எதிர் வரிசையில் இருந்து எங்களுடைய மனங்களைப் புண்படுத்தும் தன்மையிலே இங்கே பலரும் பேசினார்கள். நான் கடைசியாக சொன்னேன். "நாங்கள் ஏற்கெனவே தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறோம். எங்களுடைய துணைத் தலைவர் ஆதரவு தெரிவித்து பேசிக் கொண்டிருக்கிறார். அதனாலேயே [illegible]

[1991 செப்டம்பர் 30

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

நண்பகல் 12.00

பேசுவதை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை" என்று சொல்லி சில பகுதிகளை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டபோது அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேரும் ஒருமித்தக் கருத்தோடு இருக்கிறோம் என்பதைக் காட்ட வேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம். தவிர, இந்த அவையிலே இருப்பவர்கள் அதிலே பிளவுபட்டு இருக்கிறார்கள் என்று காட்டுவதிலே பயன் இல்லை என்று சொல்லி, காங்கிரஸ் கட்சியிலே இருந்து யார் யாரெல்லாம் எந்தெந்தக் கட்டத்திலே ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள் என்று சொல்லி, அதனோடு நாம் அமைதி பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நானும் அமர்ந்து விட்டேன். காரணம் ரகுமான்கான் அவர்களும், இந்த வரிசையிலே இருந்து தி.மு.க. ஆதரவாளர்களும் அன்றைய தினம் அப்படிப் பேசினார்கள். நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது, வேண்டுமென்றே உணர்வுகளைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நீங்கள் தொடர்ந்து பேசுவீர்களேயானால் எங்களுடைய பதிலும் கடுமையாக இருக்கும் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அருள்கூர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் துணையாக இருக்க வேண்டுமே தவிர, இதைப் போன்ற உணர்வுகளை புண்படுத்துகின்ற தன்மையில் தொடர்ந்து பேச வேண்டாம் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு குமாரதாஸ் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளும், இந்த தீர்மானத்தைப் பொறுத்த மட்டிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள், ஒருமனதாக நிறைவேற்றித் தாருங்கள் என்று, எல்லோரும் ஆதரிக்கிற சூழ்நிலையில், உங்களுடைய கட்சி ரீதியாக சில விவரங்களை பேசி, ஏதோ நமக்குள் ஒரு மாறுபட்ட உணர்வு எழுப்பப்படும் என்கிற நிலைமைகள் வெளியே போவது நல்லது அல்ல. எனவே இந்த நீங்கள் ஆதரிப்பதில், நீங்கள் இருக்கிற நிலைமையை ஒத்துப் பேசுவது நன்றாக இருக்கும்.



1991 செப்டம்பர் 30]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கருத்து வேறுபாடுகளோ அல்லது கொள்கை வித்தியாசங்களோ இருக்கும் என்று சொன்னால் நான் பேசி முடித்த பிறகு அவர்கள் சொல்லலாம். இடையிலே குறுக்கிடுகின்றபோது அவர்கள், அவர்களைப் பெரியவர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் உண்மையைப் பெரிது என்று சொல்வோம். இப்படி மாறி மாறி விவகாரங்கள் வந்து கொண்டுதான் இருக்கும். ஆகவே நான் இதை முடித்த பிறகு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விவகாரம் வராமல் பேசுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆக இந்த சமூக நீதி என்று சொல்வது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. இது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வந்த ஒரு முக்கியமான பிரச்சினை. இதிலே, என்று வர்ண பேதம் தோன்ற ஆரம்பித்ததோ, அன்றே இந்தப் பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது. கல்வியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் ஒருவன்; அவன் படித்தவன்; அது அவன் தொழில். ஒருவன் வியாபாரம் செய்கிறான்; அவனும் படித்தவன்; அது அவனுக்குத் தேவை. ஒருவன் நாட்டை ஆண்டான். அவனும் படித்தான். அது அவனுக்குத் தேவை. ஆனால் ஒருவன் மட்டும் படிக்கவில்லை; அவன் படிக்க அனுமதிக்கப்படவும் இல்லை; அவன்தான் சூத்திரன். ஆண்டாண்டுக் காலம் படிக்காமல் இருந்த அவனைப் படித்தவனோடு போட்டி போட 'மெரிட்' என்கிற அளவுகோலால் நீங்கள் ஒரு முடிவினை எடுப்பீர்கள் என்று சொன்னால், அந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் அடியோடு ஒழிந்துவிடுவான். எனவே அளவுகோல் என்கின்ற ஒன்றை வைக்காமல் நீங்கள் 'தகுதி' என்று சொல்லாமல், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு வருகின்ற நேரத்திலேதான் அவன் தப்பித் தவறி வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே பொருளாதார அடிப்படை என்று கருத்துக்களை நீங்கள் களைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 30

[டாக்டர் தே. குமாரதாஸ்]

அதேபோல, சுதந்திரப் போராட்ட உணர்வு சூறாவளியாகக் கிளம்பியபோது அதை அடக்கி ஆள்வதற்காக வெள்ளைக்காரர்கள் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்கள். அதுதான் இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் வேலை கொடுப்பது. அதற்காக விக்டர் [illegible]ம் என்கிற வெள்ளைக்காரரால் 1885 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் காங்கிரசு கட்சி. இந்தியர்களில் சிலருக்கு வேலையும் கிடைத்தது; பலருக்கு கிடைத்தும் போய்விட்டது. படித்தவர்களுக்குக் கிடைத்தது. அன்றைக்கு படித்தவர்கள் யார்? நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருந்தேனே, அந்த மூன்று வர்ணத்துக்காரர்கள்தான். சூத்திரன் படிக்கவும் இல்லை; அவனுக்கு வேலை கிடைக்கவும் இல்லை. 1904 ஆம் ஆண்டு இந்தியன் சிவில் சர்வீஸில் பணியாற்றிய 17 இந்திய அதிகாரிகளில் 16 பேர் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; அதிலேயும் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். 21 தலைமைப் பொறியாளர்களில் 19 பேர் அதே சாதியைச் சேர்ந்தவர்கள். ஆந்திராவிலுள்ள குண்டூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில், பணியாற்றிய 29 பேரில் 29 பேரும் அதே உயர் சாதியைச் சேர்ந்தவர்கள்; அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதைப் பொறுக்கமாட்டாத டபிள்யூ. ஆர். கார்னிஸ் என்ற வெள்ளைக்காரர் அன்றையதினம் இந்திய நாட்டினுடைய சென்சஸ் அதிகாரியாக இருந்தவர் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. விசுவநாதன்.

**திரு. ஜி. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற தீர்மானத்தை அனைவருமே ஒத்துக்கொள்கிற சூழ்நிலை இருக்கிற நேரத்தில் இதிலே தன்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது சாதி வித்தியாசங்களை தூண்டிவிடுகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசத் துவங்குகிறார்கள். தாங்கள் தலையிட்டு இப்போதே அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முதலிலேயே உங்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்தேன். எல்லோருமே ஏற்றுக்கொண்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட இருக்கிற தீர்மானத்தின் மீது அவரவர் ஒரு கருத்து வேறுபாடு வரக்கூடிய பிரச்சினைக்கு



1991 செப்டம்பர் 30]

[பேரவைத் தலைவர்]

உள்ளே போக வேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன். வேகமாகப் பேசி முடியுங்கள். அந்தமாதிரி கருத்து வேறுபாடு இருக்கிற பிரச்சினைக்குள் போக வேண்டாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லவில்லை. நாங்கள் ஆதரிக்கத்தான் செய்கிறோம். ஆனால், எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், நீங்கள் இந்த பொருளாதார அடிப்படை, தகுதி அடிப்படை இப்படியெல்லாம் நாங்கள் கொடுத்துவிடுவோம் என்று சொல்லி ஒரு முடிவுக்கு வருவீர்கள் என்று சொன்னால், இதனால் பாதிக்கப்படுகிறவன் யார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து இந்தத் தீர்மானத்தின் மீது பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12.05

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசு கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் பொருளாதார அடிப்படை பற்றிய எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

நமது நாட்டில் மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சமூகநீதி கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எவருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது என்றே நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழகத்தில் இவ்வளவு பெரிய அளவுக்கு இட ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறோம். அப்படி இருக்கையில் மத்திய அரசில் 27 சதவீதம் என்று அறிவிக்கிற போதே இவ்வளவு பெரிய எதிர்ப்பு வட மாநிலங்களில் கிளம்புகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும், இந்தியா முழுமைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும் என்பதற்காகவே (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இன்று கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

[1991, செப்டம்பர் 30

[செல்வி ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய ஒருமித்த கருத்தை நல்ல முறையில் தெரிவித்தால்தான் இந்த எண்ணம் நிறைவேறும். அப்படி இல்லாமல் வேண்டாத சில கருத்துக்களை இங்கே பேசி சிலருடைய உணர்வுகளைப் புண்படுத்துகிற வகையில் குமாரதாஸ் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவார்களானால், இத்தகைய நிலைமைகள்தான் பத்திரிகைகளில் பெரிதுபடுத்தப்படும். எந்த நோக்கத்திற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோமோ, அந்த எண்ணம் நிறைவேறாது என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின்மீது தன்னுடைய நல்ல கருத்துக்களை மட்டும் தெரிவிக்குமாறு உங்கள் மூலமாக அன்புடன் வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் அவர்கள் கவனிக்க வேண்டும். 27 சதவீதம் என்பது எங்களுக்கு ஏற்புடையதல்ல. 50 சதவீதம் இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது கருத்து வேறுபாட்டிற்கான பிரச்சினைகளுக்குள்ளே செல்லாமல் நீங்கள் பேசுவது நல்லது என்று நினைக்கிறேன். அந்த வகையில் பேசிமுடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இரண்டு நிமிடங்களில் முடிக்கவும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீட்டைப் பற்றி வருகிற நேரத்தில் எப்போதெல்லாம் இட ஒதுக்கீடு என்று பிரச்சினை வருகிறதோ, அப்போதெல்லாம் பிரச்சினை வந்திருக்கிறது. 1927-ல் முதலாவது ஆணை பிறப்பிக்கப்படுகிறது (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து குமாரதாஸ் பிரச்சினை இல்லாமல் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினோம் என்பதை நாட்டுக்கு நாம் தெரிவிக்க வேண்டும் (குறுக்கீடு). நீங்கள் இந்தப் பிரச்சினை வருகிறபோது எப்போதும் பிரச்சினை இருந்தது, இப்போதும் இருப்பது நல்லது என்பதைப் போல பேச ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் கருத்துக்குப் போகவேண்டும். எல்லோரும் உங்களை வரவேற்பார்கள்.



1991 செப்டம்பர் 30]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1927-ல் இந்த கம்யூனல் ஜி.ஓ. அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். 1937-ல் இந்த நேரத்தில்தான் (குறுக்கீடுகள்) உயர் ஜாதியினர் அல்லாதவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டுமென்று கோரிக்கை நீதிக்கட்சியிலே இருந்தது. அதனால் அந்தக் கட்சியே 1937-ல் உடைந்துபோய் இருக்கிறது. அன்றையதினம்

. . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான செய்திகளை இந்த அவைக்குத் தருகிறார்கள். நீதிக்கட்சி தொடர்ந்து வந்திருக்கிறது. இதைக் கொண்டு வந்தால்தான் போனது என்று ஒரு தவறான செய்தியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நீதிக்கட்சியினுடைய வரலாறு பூராவும் படித்துவிட்டு, இதனால் போனது என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மறிக்கிறபோதே நீங்கள் பார்ப்பீர்களானால்— என்னை பேசவே விடவில்லை (குறுக்கீடுகள்) எல்லோரும் குறுக்கிட்டு குறுக்கிட்டு பேசினால் நான் எதைச் சொல்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறுக்கீட்டிற்கு இடமில்லாமல் பேச வேண்டும். இதைத்தான் உங்களிடம் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருக்கிறேன் (குறுக்கீடு). 1937-ல் ஏன் நீதிக்கட்சி உடைந்தது என்பதற்கு நீங்கள் கருத்தைச் சொல்கிறீர்கள். அது தவறான கருத்து என்பதை இங்கே இருக்கிற மூத்த உறுப்பினர்கள் சொல்லாமல் இருக்க மாட்டார்கள். நீங்கள் தவறான கருத்தைச் சொல்லிவிட்டு குறுக்கிடக் கூடாது என்று நினைக்கக்கூடாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடைந்தது என்பது வரையிலும் உண்மை. ஏன் உடைந்தது என்பதற்காக ஒரு காரணம் சொன்னீர்கள் என்றால் அதை மறுக்க வேண்டிய கடமையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து வேகமாக முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** தலைவர் அவர்களே, இந்திய அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு எல்லா இந்தியர்களுக்கும் சமமாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஷரத்து ஒன்று சொல்கிறது. 16-வது பிரிவில், இந்திய அரசுப் பணிகளில், வேலை வாய்ப்பில் எல்லா இந்தியருக்கும் சமமாக வாய்ப்பு இருக்க வேண்டும் என்று சொல்லி இதற்காக சில பர்சென்டேஜ்களைப் பற்றிய விவரங்களை எல்லாம் நான் வைத்திருக்கிறேன். அவைகளைப் பற்றிச் சொன்னால், நீங்கள் நேரம் தரமாட்டீர்கள். நிறைய புள்ளிவிவரத்தோடு வந்தேன். ஆனால் ஒன்றையும் பேச வாய்ப்பில்லை. பரவாயில்லை. இருந்தாலும், முக்கியமான பிரச்சினையை நான் சொல்லியாக வேண்டும். செண்பகவல்லி என்கிற ஒரு அம்மையார், தனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, இந்திய அரசுப் பணிகளில் உள்ள அனைத்து இடங்களிலும், எல்லோரும் சமம் என்று இருக்கின்ற நேரத்தில் எனக்கு படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது தவறு என்று சொல்லி, சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு வழக்கைப் பதிவு செய்து, அதன் அடிப்படையில் அவர்களுக்கு, படிக்கலாம் என்கிற விதத்தில் ஒரு உத்தரவைக் கொடுத்ததன் மூலம் அரசு ஆணை, அந்தச் சட்டமே அன்றையதினம் அடிபட்டுப் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆகவே படிப்பிலும், பணியிலும் சம வாய்ப்பு கிடைக்கப்பட வேண்டும் என்று இருக்கின்ற ஆணையை அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், தமிழகம் முழுவதும் அந்தத் தீர்ப்பு வந்த நேரத்தில், பெரிய பிரச்சினை வந்தது. அந்த நேரத்தில், தந்தை பெரியார் போன்றவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், டெல்லிக்குச் சென்று, அன்றைய பிரதமராக இருந்த மரியாதைக்குரிய நேரு அவர்களைப் பார்த்து முதன் முதலாக 1951-லே அரசியல் ரீதியாக, சட்டத்தைத் திருத்தினார்கள். சமுதாய ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பிற்படுத்தப்







பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு-பிரத்யேகமான விதி செய்யப் படுவதற்கு அரசியல் அமைப்பு அடிப்படை விதி தடையாக இருக்கக்கூடாது என்கிற விதத்தில், அரசியல் சட்டத்தைத் திருத்தினார்கள் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.10

தமிழகத்தில் 1954-ல் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த நேரத்தில் தாழ்த்தப் பட்ட மலைஜாதியினருக்கு 16 சதவிதமும், பிற்படுத்தப்பட்டவர் களுக்கு 25 சதவீதமும், பொதுத் தொகுப்பு என்கிற விதத்தில் 59 சதவீதமும் என்கிற அடிப்படையில் இட ஒதுக்கீட்டினைச் செய்திருக்கிறார்கள் (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போதே 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் முழு வரலாற்றையும் சொல்லிக் கொண் டிருந்தால் இந்த விவாதம் எப்போது முடிவது? மற்ற தலைவர்களும் இன்னும் பேசவேண்டியிருக்கிறது. இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள், 50 விழுக்காட்டை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாத் துறையிலும் வழங்கவேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் ஆதரித்து அமர் கிறேன்.

அதேநேரத்தில், 27 சதவித விழுக்காட்டை மத்தியிலே அமுல் படுத்தவேண்டும் என்கிற கோரிக்கையை நீங்கள் கண்டிப்பாக வற்புறுத்தவேண்டும் என்று சொல்கிறேன் (குறுக்கீடு). 50 விழுக்காட்டை நம்முடைய கோரிக்கையாக நாம் வைக்கிறோம். நீங்கள் அதை ஏற்று, 50 சதவிதத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று சொல்கிறேன் (குறுக்கீடு). நம்முடைய உணர்வுகளை நாம் தெரியப்படுத்துகிறோம். அதேநேரத்தில், டெல்லியில் நடை பெற்ற, இந்திரா காங்கிரஸ் சர்க்கார் அங்கே ஆட்சியிலே இருக் கின்றபோது, இந்த மண்டல் பரிந்துரைகளை அமுல்படுத்து வதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். ஆனால் நமது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், யாரும் அதிலே பங்கு பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் பேசி முடித்ததற்குப் பிறகு, விவாதத்தைத் தொடங்குவது சரியல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில், மண்டல் கமிஷன் பரிந்துரைகள் பற்றி விவாதிக்க மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் பங்குகொள்ளவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதே செய்தி ஏற்கனவே பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. ஏற்கனவே எங்களுடைய கழகத்தின் சார்பில் இதற்கு பத்திரிகைகளிலும் மறுப்பும் வெளியிடப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையிலோ அல்லது தமிழக முதல்வர் என்ற முறையிலோ எனக்கு, சென்னைக்கு எந்த அழைப்பும் வரவில்லை. வந்திருந்தால், நானே கலந்து கொண்டிருப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது எனக்குப் பதிலாக மூத்த தலைவர் யாரையாவது அனுப்பி வைத்திருப்பேன். ஆனால் அங்கே எங்கள் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன், எம்.பி. அவர்களுக்கு மத்திய அமைச்சர் திரு. சீதாராம் கேசரி அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், இப்படி மண்டல் கமிஷன் பரிந்துரைகளைப் பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் கூட்டப்பட உள்ளது என்ற தகவல் மட்டும் தெரிவிக்கப்பட்டது. எந்த தேதியில், எந்த நேரத்தில், கூட்டப்பட உள்ளது என்பது தெரிவிக்கப்படவில்லை. பாராளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பின்னரும், எங்கள் பாராளுமன்றக் குழுத் தலைவர், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று பேராவலினால், மேலும் 4 நாட்கள் டெல்லியிலே தங்கியிருந்தார். மாண்புமிகு மத்திய அமைச்சர் சீதாராம் கேசரி அவர்களின் தனிச் செயலாளரைத் தொடர்புகொண்டு என்றைக்கு இந்தக் கூட்டம் கூட்டப்படும் என்று மீண்டும் விசாரித்தார். ஆனால் அவர்களால் சரியாகச் சொல்லமுடியவில்லை. இந்த நிலையில் 20 ஆம் தேதியன்று மாண்புமிகு பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் இல்லத்திலே ஒரு அதிகாரபூர்வமற்ற கூட்டம் கூட்டப்பட்டது. 'அன்-அபிஷியல் மீட்டிங்'. அந்தக் கூட்டத்திற்கும் எங்கள் பாராளுமன்றக் குழுத் தலைவர் சுவாமிநாதன் அவர்களுக்கு அழைப்பு வரவில்லை.



அதன் பின்னர் அவர் மேலும் விசாரித்து, சரியான தகவல் கிடைக்காததால் சென்னைக்கு வந்துவிட்டார். சென்னைக்கு வந்த பிறகு 21 ஆம் தேதி அந்தக் கூட்டம், அங்கே கூட்டப்பட்டது. ஆனால் அதற்கான முறையான தகவல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. வே. தம்புசாமி.

* **திரு. வே. தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்ட இட ஒதுக்கீடு சம்பந்தமாக சில கருத்துக்களை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பில் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

பொதுவாக இன்றைய அரசியல் சூழ்நிலையில் இட ஒதுக்கீடு என்பது யாராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். காரணம், இந்திய நாடு முழுமையும் நாம் சுதந்திரம் பெற்ற பிறகும்கூட பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைத்து மக்களும், அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, இருண்ட அந்த சமூகச் சூழ்நிலையில் அவர்களும் இதரப் பகுதி மக்களோடு சமமாக வரவேண்டும் என்பதற்காக இட ஒதுக்கீடு என்பது அவசியம். இதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் மண்டல் கமிஷன் அறிக்கைக்கு முன்னாலேயே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நேரு காலத்திலே காகா கலேல்கர் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது என்பது. அதில் ஏதோ சில கருத்துக்கள் வித்தியாசம் ஏற்பட்டு அந்தக் கமிஷனுடைய அறிக்கையைக் கூட அமல்படுத்தவில்லை. அதற்குப் பிறகு ஜனதா ஆட்சிக் காலத்தில் மண்டல் அவர்கள் தலைமையில் கமிஷன் நியமிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, அந்த அறிக்கை உருவானது. குமாரதாஸ் அவர்கள் பேசுகிறபோது கூட குறிப்பிட்டார். அந்த அறிக்கை உருவாவதற்கு மரியாதைக்குரிய முன்னாள் மாண்புமிகு பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் உறுதுணையாக இருந்தார் என்பதும் அதிலே கருத்து வித்தியாசம் கிடையாது. ஆனால் அந்த அறிக்கை உருவான பிறகு, அந்த [illegible] அமல்படுத்த

[திரு. வே. தம்புசாமி]



பிற்பகல் 12.20

மத்தியிலே, ஆட்சி அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி செயல்படவில்லை என்பது தான் என்னுடைய கேள்வியாகும். அதற்குப் பிறகு ஜனதா தள ஆட்சியில் வி. பி. சிங் பாரதப் பிரதமராக பொறுப்பேற்ற பிறகு, இந்த மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த முன்வக்கு வந்தபோது, இந்திய நாடு முழுமையும் ஒரு விவாத மேடையாகவே மாறியது. ஒரு விவாத மேடை மட்டுமல்ல. அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகள் சேதங்கள், இவைகள் அனைத்தையும் நாம் அறிவோம். அப்படி ஒரு விவாதம் ஏற்படுகிறபோது அந்த விவாதம் நாடு முழுமையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அனுபவ அடிப்படையிலேதான் ஒவ்வொரு மாநிலத்திலும் தீர்மானங்களை நாம் முன்மொழிய வேண்டும். எனக்கு முன்னாலே குமாரதாஸ் அவர்கள் பேசிய போது, அதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திருமணம் ஆகாததற்கு முன்னால் குழந்தை பெற கேட்பது நியாயமில்லை என்று. நான் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் பள்ளிக்கூடம் இல்லாததற்கு முன்னால் இட ஒதுக்கீடு எப்படி கிடைக்கும் என்பது தான். ஆனால் இப்போது கேட்கிறேன். பள்ளிக்கூடம் இருந்தாலும் இன்றைய தினம் கீழ்த் தட்டில், அடித் தட்டில் பின்தங்கிய மக்கள் பள்ளிக்கூடத்திற்கு குழந்தைகளை அனுப்புவதற்கு ஒரு பொருளாதார அடிப்படை தேவை என்பதையே இந்த மண்டல் கமிஷன் சுட்டிக் காட்டுகிறது.

இந்த மண்டல் கமிஷன் பரிந்துரை வெறும் இட ஒதுக்கீட்டுக்கு மட்டும் அல்ல. அவர்களுடைய உற்பத்தி உறவில் ஒரு மாறுதல் வரவேண்டும் என்று கூறுகிறார்கள். அப்படி மாறுதல் ஏற்படுகிற போது தான் ஒரு சமூக மாறுதலை செய்ய முடியும். அப்படி ஒரு சமூக மாறுதல்களை செய்ய வேண்டுமென்றால் ஒரு முற்போக்கான ஒரு தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அதை அமல்படுத்த வேண்டும். அப்படி அமல்படுத்தாமல் இதர பின் தங்கிய மக்களை, பின் தங்கிய பகுதியினரை ஒரு உண்மையான பொருளாதார விடுதலை பெற்றார்கள் அல்லது விடுதலை பெற முடிந்தது என்று நாம் சொல்ல முடியாது. எனவே விரைவாக இந்த உச்ச வரம்பு சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு நிலம் வழங்குவதனாலேதான் ஒரு உண்மையான பொருளாதார விடுதலையை அவர்கள் காண முடியும் என்று மண்டல் கமிஷன் அறிக்கை குறிப்பிடுகிறது.



[திரு. வே. தம்புசாமி]

இப்படி உண்மையிலேயே அதை நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு நாம் ஏன் முயற்சி எடுக்கவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி. முயற்சி எடுத்தோம் என்று சொல்லலாம். அமரர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு பினாமி ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. கொண்டு வந்து இந்தச் சட்டமன்றம் ஏகமனதாக நிறைவேற்றி மத்தியிலே ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சிக்கு அனுப்பியபோது அவர்கள் அதில் கையெழுத்து போடவில்லை. அதை அமல்படுத்தலாம் என்று தமிழகத்திற்கு அவர்கள் உத்திரவு போடவில்லை. அது அப்படியே கிடப்பிலே போடப்பட்டது. மறுபடியும் தி.மு.க. ஆட்சி இருந்த காலத்தில் அப்படி ஒரு தீர்மானத்தை இயற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அப்போதும் கிடப்பிலே போடப்பட்டது. இப்போதும் இன்றைக்கு கொண்டுவர இருந்த அந்த பினாமி ஒழிப்புச் சட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நாம் பினாமி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றி விட்டாலும், ஏகமனதாக நிறைவேற்றினாலும் அதற்கு அங்கீகாரம் அளிப்பது யார்? அதை நிறைவேற்றுவதற்கு சகல உரிமைகளையும் கொடுப்பது யார் என்பதுதான் இன்றைய தினம் கேள்வியாக இருக்கிறது. எனவே தான் பள்ளிக்கூடம் செல்வதற்கு, படிப்பதற்கு அவர்களுக்கு அடிப்படையான பொருளாதார வசதியை உருவாக்க வேண்டுமென்றால் அவர்கள் கையிலே நிலம் இருந்தால் தான் முடியும். இன்றைக்கு உண்மையிலேயே கேட்கிறேன். மதிய உணவு கொடுக்கிறோம், சீருடை கொடுக்கிறோம், செருப்பு கொடுக்கிறோம். ஆனால் எத்தனை குழந்தைகள் படிப்பதற்கு முன்வக்கு வருகிறார்கள்? வரவில்லை ஏன்? என்ன காரணம்? அந்தக் குடும்பத்திலே இருக்கிற பொருளாதார நெருக்கடி, தன்னுடைய குழந்தை படிப்பதைவிட ஒரு வீட்டிலே மாடு மேய்த்தால் ஏதாவது கிடைக்காதா? ஒரு ஓட்டலிலே வேலை செய்தால் ஏதாவது கிடைக்காதா என்று நினைக்கக்கூடிய நிலைமை கிராமப்புறங்களிலே இருக்கிறது. எனவேதான் அந்தச் சூழ்நிலையினை முதலிலே விடுவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய செ. கு. தமிழரசன் ஒரு உண்மையை ஒத்துக் கொண்டார்கள். நிச்சயமாக நான் அதை வரவேற்கிறேன். இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் நகரத்திலே உத்தி

[திரு. வே. தம்புசாமி]

யோகம் பார்க்கக் கூடியவர்கள் அவர்களுடைய குழந்தைகளை உயர் கல்வியிலே படிக்க வைக்க முடியும். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கிராமப்புறத்திலே எருமை மாடு மேய்க்கக் கூடியவர்களுக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது ? அது அங்கு போய்ச் சேருமா என்ற கேள்வியை அவர்கள் கேட்டார்கள். நியாயமான கேள்வி. எனவேதான் இது அடிப்படையான ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது. தீவிரமான பொருளாதார நிலச் சீர்திருத்த சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதும் ஒரு சமூக மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்பதும் எங்கள் கட்சியினுடைய ஆழமான கருத்தாகும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதார வசதி எல்லா தரப்பினருக்கும் ஏற்பட வேண்டும் என்பது ஒரு பொதுவான கருத்து. ஏழை எளியவர்கள், பாட்டாளிகள், உழவர் பெருங்குடி மக்கள் எல்லாம் வளர வேண்டும் என்பது வேறு. ஆனால் உயர் மட்டக் கல்வி போன்றவைகளில் கல்வி ஒதுக்கீடே வேண்டாம் என்ற முடிவுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்களா. ஆகவே அப்படியே ஒதுக்கினாலும் அந்த தாழ்த்தப்பட்டவர்கள், வறுமையில் இருப்பவர்கள் உழவர்களுக்கெல்லாம் கேடு பயக்கும் என்று எண்ணுகிறீர்களா ? ஒதுக்கியதற்கு பிறகு யாராவது வந்தால் சேர்த்துக் கொள்ளவே கூடாதா ? ஆகவே ஒதுக்கியதனால் என்ன தவறு ? ஒதுக்குவது வேண்டாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ? கல்வியிலும் மற்ற துறைகளிலும் மேல் மட்டங்களிலே ஒதுக்கீடே இல்லாமல் வெறும் வேலை வாய்ப்பு தருவது என்பதுதான் உங்களுடைய கொள்கையா ?

**திரு. வே. தம்புசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் அதற்கு அடிப்படையாக இருப்பது பொருளாதார நெருக்கடி என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். அந்த அடிப்படையிலே தான் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பிரச்சினைகளையெல்லாம் பரிசீலிக்கிற போது, சுதந்திரம் அடைந்த பிறகு நாடு முழுவதும் கிடைத்திருக்கக் கூடிய சில அனுபவங்களை நாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். 40 வருஷமாக மத்தியிலே காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெற்றது. அப்படி நடைபெற்ற காலத்திலே அது



1991 செப்டம்பர் 30]

[திரு. வே. தம்புசாமி]

பிற்பகல் 12.25

அனுஷ்டித்த பிற்போக்கு பொருளாதார கொள்கையின் விளைவாக இன்றைய தினம் வேலையற்ற நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக 11 கோடி பட்டம் பெற்ற மக்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையிலே தான் மார்க்ஸிஸ்ட் கட்சி தலைமையிலே செயல்படுகிற மேற்கு வங்காள இடதுசாரி முன்னணி அரசு அடிப்படையான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது. குறைந்தபட்ச ஒரு பொருளாதார திட்டத்தை அதனால் ஏற்படுத்த முடிந்தது என்கிற அந்தக் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையிலேதான் இதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவேதான் இன்றையதினம் ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினை, நாடு முழுவதும் வேலை தேடக்கூடிய இளைஞர் சமூகத்திலே ஒரு கடுமையான பிரச்சினையாக அமைந்திருக்கிறது. இதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைப் பயன்படுத்திக்கொண்டு பிற்போக்குவாதிகளும், பிற்போக்கு இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் கடுமையான பல்வேறு பிரச்சினைகளை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏதோ அரசியலுக்காகச் சொல்கிறேன் அல்லது அரசியல் போட்டா போட்டிக்காகச் சொல்கிறேன் என்பது அல்ல. இது ஒரு அரசியல் போட்டா போட்டி அல்ல. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்பது மிக மிக அவசியம் என்பதை வற்புறுத்தும் அதே நேரத்தில் அந்த ஜாதியைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு பெரும்பான்மை போய்ச் சேருவதற்கான சூழ்நிலைமையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் முற்படுத்தப்பட்ட ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பது இன்றையச் சூழ்நிலையில் மிக மிக முக்கியம். இதன் மூலம் முற்படுத்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் எந்தவிதமான தகராறும் வராமல், எந்தவிதமான ஒரு கருத்து மோதலும் வராமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோள் ஆகும். இன்றைய தினத்திலே முதல்வர் தீர்மானத்தில் 27 சதவீதம் என்றிருப்பதை 50 சதவீதம் ஆக்கவேண்டும் என தீர்மானத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதே

[1991 செப்டம்பர் 30

[திரு. வே. தம்புசாமி]

நேரத்தில் மத்திய அரசு இன்றைய தினம் 10 சதவீதம் இடம் முற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக நம்முடைய அரசு நிலை என்ன என்பதை விளக்கவில்லை. அப்படி அதையும் ஏற்றுக்கொண்டால் நாம் கோருகிற 50 சதவீதம், அது ஒரு 10 சதவீதம், முன்னாலே இருக்கின்ற 22 சதவீதம் ஆக ஏறத்தாழ 82 சதவீதம் என்ற அளவுக்கு இது இருக்கிறது. அதற்குப் பிறகு முன்னாள் இராணுவத்தினர், ஊனமுற்றோர் இப்படி பல்வேறு பிரிவுகளுக்கும் இடம் ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவேதான் இப்படிப்பட்ட அனுபவங்களை எல்லாம் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனவே, இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் 27 சதவிகிதம் பொறுத்தவரையில் ஒன்றுபட்ட அனைத்து சக்தியையும் பயன் படுத்த வேண்டுமே தவிர 50 சதவிகித இட ஒதுக்கீட்டை ஏற்கவில்லை. எங்களுடைய கோரிக்கை அடிப்படையான 27 சதவிகிதத்தை பெற்றுத் தருவதற்கு, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மக்களை ஒன்றுபடுத்துவதற்கு அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**37-வது பாராளுமன்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், சென்னை வந்து, பேரவை நிகழ்ச்சிகளைப் பார்வை யிட்டுக் கொண்டிருந்த பல்வேறு நாட்டு பிரதிநிதிகளுக்குப் பாராட்டு.**

**Hon'ble Mr. Speaker :** I am glad to inform the House that the Delegates from Australia, New South Wales, Tasmania, British Columbia, Nova Scotia, Quebec, Isle of Men, Jersey, Pahang, New Guinea, Sri Lanka, United Kingdom and St. Helena, who have come to Tamil Nadu for the Post Conference Tour after the 37th Commonwealth Parliamentary Conference held at Delhi are now witnessing the proceedings of our House from the distinguished visitors' gallery. I, on behalf of our Hon. Chief Minister PURATCHI THALAIVI, the Members of this Legislative Assembly and the people of Tamil Nadu extend a hearty welcome to them and I have no doubt that they will enjoy our hospitality during their short stay with us.



1991 செப்டம்பர் 30]

[திரு. வே. தம்புசாமி]

7. தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

**மத்திய அரசு, மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்புகளிலும் கல்வி நிலையங்கள் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தல்--தொடர்ச்சி.**

**திரு. வே. தம்புசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அடிப்படையிலேதான் திரு. வி. பி. சிங் அவர்கள் 27 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அறிவித்தபோதே, இந்திய நாடு முழுவதும் எவ்வளவு கொந்தளிப்பு ஏற்பட்டது என்பதை நாம் எல்லாம் அறிவோம். அதனால் எவ்வளவு சேதங்கள், நஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டது என்பதை நாம் அறிவோம். அந்த வகையிலேதான் இந்தச் சூழ்நிலையில் 27 சதவிகிதம் என்பதை தமிழக அரசு பெற்றுக் கொடுப்பதிலே அனைத்துப் பகுதி மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஒன்றுபட்ட சக்தியை உருவாக்கி அதைப் பெறு வதிலே கடுமையாக முயற்சிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். 50 சதவிகித இட ஒதுக்கீடு இன்றைய தினம் அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதிலே சிக்கல் வரும். 27 சதவிகிதத்திலே இவ்வளவு பெரிய சிக்கல்களும், பிரச்சினைகளும் இருந்தன—இது 50 சதவிகிதம் என்று சொல்கின்றபோது மேலும் எவ்வளவு சிக்கல்களை ஏற் படுத்தும் மற்ற மாநிலங்களைச் சேர்த்து ஒரு ஒன்றுபட்ட இந்தியாவாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். வி. சண்முகம்.

[பிற்பகல் 12-30]

**திரு. எஸ். வி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27 சதவீதம் போதாது; 50 சதவீதம் வேண்டும் என்பது நம்முடைய தீர்மானம். அது வேண்டாம், 27 சதவீதமே போதும் என்று சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர் களை உங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 27 சத வீதம் அறிவிக்கப்பட்ட போதே அவர் சார்ந்து இருக்கின்ற மேற்கு வங்க முதலமைச்சர் அதனை எதிர்த்தார்கள். அங்கு 117 பிற் படுத்தப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன என்று . . .

[1991 செப்டம்பர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது உங்கள் கருத்தா ?

**திரு. எஸ். வி. சண்முகம்** : தலைவர் அவர்களே, மண்டல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே 27 சதவீதம் போதும் என்று சொல்லுகிற இவர் அங்கே எத்தனை சதவீதத்தினை அமல்படுத்துகிறார் என்று விளக்கினால் நல்லது. அங்கு ஒன்று கூட இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை; பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். திரு. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தம் இல்லாமல் குறுக்கிடுகிறார்கள். அவரவர்கள் கட்சிக்கு என்று ஒரு கருத்து உண்டு. அதிலே நான் குறுக்கிட தயாராக இல்லை. எங்களுடைய கட்சிக்கு ஒரு கொள்கை, ஒரு கருத்து உண்டு. அதைச் சொல்வதற்கு உரிமை வேண்டும். அது தானே தவிர வேறு ஒன்றும் பிரச்சினை இல்லை.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. ராஜேந்திரன் அவர்கள் கூட சொன்னார்கள், அந்த 10 சதவீத இட ஒதுக்கீடு பற்றி என்னவென்று கேட்டார்கள். இப்போது சொல்கிறேன். ஆதரிக்கிறோம். அது முற்பட்ட சமூகத்தில் இருக்கின்ற பொருளாதாரம் அற்ற மிகவும் பின்தங்கிய எவ்வளவோ ஏழை மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அது போய் சேரவேண்டும் என்பதிலே கருத்து வித்தியாசம் இல்லை.

அதேபோன்று மாண்புமிகு திரு. தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டார்கள், பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மிகவும் ஏழையான நிலையில் இருப்பவர்களுக்கு அது போய் சேரவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே கருத்து வித்தியாசம் இல்லை. ஆனால் நாடு முழுவதும் இருக்கக்கூடிய நிலைமைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு ; அதனால் தொடர்ந்து வந்து இருக்கக்கூடிய விளைவுகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் ஒரு தீர்மானம் என்ற ஒரு நிலைக்கு நாம் போக வேண்டும் என்பது தான் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில் அதனுடைய கருத்தே தவிர நிர்ணயிக்கக் கூடியது தவறு ; அல்லது அங்கு நடந்ததா ; இங்கு நடந்ததா என்பது அல்ல. இந்த நிலையிலே தான் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில் இந்த சூழ்நிலையில் 50 சதவீத



1991 செப்டம்பர் 30]

இட ஒதுக்கீட்டை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்று கூறுவதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை என்பதை கட்சியின் கருத்தாகச் சொல்லி இந்த கருத்தைச் சொல்வதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. எஸ். வி. சண்முகம்** : தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இருங்கள், நீங்கள் ஏற்கனவே சொன்னீர்கள், அதற்கு அவர் பதில் சொல்லிவிட்டார். உங்களுக்கு ஒரு கருத்து இருப்பது போல அவருடைய கட்சிக்கும் ஒரு கருத்து இருக்கிறது. (குறுக்கீடு) ஏதாவது தவறாக கருத்து வந்திருந்தால் நீங்கள் சொல்லலாம்.

**திரு. எஸ். வி. சண்முகம்** : தலைவர் அவர்களே, அவர்கள் கட்சிக்கு கொள்கை இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கூடாது என்பது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கையா ? (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. வே. தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதிலே எந்தவிதமான கருத்து வித்தியாசமும் இல்லை. அதைத்தான் நான் முன்பே சொல்லிவிட்டேன். ஆகவே இன்றைக்கு இருக்கக் கூடிய 27 சதவீத இட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுக்க தமிழக அரசு அனைவருடைய கருத்தையும் ஒருமுகமாக இருந்து பெற்றுக்கொடுக்க முன்னுக்கு வரவேண்டும் என்று தான் நான் கூறுகிறேன். ஆகவே, 50 சதவீதம் என்ற அந்த எண்ணிக்கை கூடுதல் என்பதைச் சொல்லி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அதனால் இதை ஏற்கவில்லை என்ற அந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர இட ஒதுக்கீடு தவறு என்று நான் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் என்ன கூறுகிறார் என்பதை தெளிவாக விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 50 சதவீத ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்பதைத் தான் எதிர்க்கிறோம் ; 27 சதவீதத்தையாவது

[மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா]

அமல்படுத்தும்படி செய்யுங்கள் என்று கூறுகிறார். அப்படியானால் தமிழகத்தில் ஏற்கனவே 50 சதவீத இட ஒதுக்கீடு இருக்கிறதே, இதனை தமிழகத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 சதவீத இட ஒதுக்கீட்டை மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற இந்தத் தீர்மானத்தை தான் ஏற்க வில்லை என்று கூறுகிறேன்.

[பிற்பகல் 12.35]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து பல நாட்களாக அதிலேயே பேசி பழக்கப்பட்ட எங்களுக்கு இந்தத் தீர்மானத்திலாவது ஒட்டிப் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததில் பெருமை அடைகிறேன்; மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் தீர்மானத்தில் மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் 27 விழுக்காடு என்பதற்குப் பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்வதை கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 27 விழுக்காடு என்பதற்கு பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று ஏன் அதில் நேராக தெரிவிக்கப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன். இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல அது ஒரு சமூக நீதிப் பிரச்சினையாகும். அரசியல் கண்ணோட்டத்தோடு அந்தப் பிரச்சினையை அணுகுவதைக் காட்டிலும் அரசியல் ஆதாயத்திற்காக அந்தப் பிரச்சினையைப் பயன்படுத்துவதைக் காட்டிலும் காலங்காலமாக புறக்கணிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்பதில் அனைத்து தரப்பாரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து செயல்படுத்துவது சிறந்தது என்று கருதுகிறேன். ஒருகாலத்தில் கோயில்கள் என்றாலும் ஒதுக்கிவைக்கப்பட்டு கல்விச்சாலைகள் என்றாலும் ஒதுக்கி



[திரு. ச. இராமச்சந்திரன்]

வைக்கப்பட்டு, சமுதாயத்தில் ஒரு பகுதியினர் வகுப்பு அடிப்படையிலேதான் ஒதுக்கிவைக்கப்பட்டார்கள் என்பதே வரலாறு. வரலாற்றுக் காரணங்களினால் வாய்ப்பு இழந்தவர்களை சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்றவர்களை கை தூக்கி விடுவதற்கு என்று திட்டமிடுகிறபோது எந்த அடிப்படையில் ஒதுக்கீடு அவர்கள் காலங்காலமாக செய்து வந்தார்களோ, செய்யப்பட்டார்களோ அதே வகுப்பு அடிப்படை வைத்து கை தூக்கி விடுவதுதான் சரியானதாகும். முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்று சொல்வதைப்போல ஜாதியை, வகுப்பை அடிப்படையாக வைத்து பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அதையே அடிப்படையாக வைத்து அவர்களுக்கு நிவாரணத்தைத் தேடுவதுதான் நோய்க்கு ஏற்ற மருந்தாகும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இதோடு பொருளாதார காரணத்தைக் காட்டுவது பொருத்தமாக இராது. வருமானத்திலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகள் வேறு, சமுதாயத்திலே விளைந்திருக்கின்ற சங்கடங்கள் வேறு. ஆகவே, வருமானத்தை அடிப்படையாக வைத்து, முன்னேறிய வகுப்பினரானாலும் அவர்கள் துன்பப் படுகிறார்களே என்று கருணை காட்டுவது வேறு, அதேபோல எல்லா வகுப்பிலேயும் இருக்கக்கூடிய ஏழைகள் துன்பத்திற்கு ஆளாகிறார்கள்; வறுமைக்கு ஆளாகிறார்கள். அத்தகையோரை சீர்தூக்கும் செய்வதற்கு அரசியல் சட்டத்திலே இருக்கிற இந்த ஒதுக்கீடு முறையைப் பயன்படுத்தக் கூடாது. அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு, அவர்களுக்கும் வாய்ப்பு கிடைப்பதற்கு வேண்டுமானால் படிப்பதற்கு ஸ்காலர்ஷிப், உதவிச் சம்பளம் அல்லது வட்டியில்லா கடன் போன்ற பொருளாதாரக் காரியங்களை வைத்து அந்த ஏழைகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமே தவிர, அவர்களுக்கு ஒரு ஒதுக்கீடு என்று வைப்பதை, சமுதாய நீதியில் அக்கறை கொண்டோர் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் தீர்மானத்தை நாம் இங்கே நிறைவேற்றுகிறோம். இந்தத் தீர்மானம் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இந்திய அரசு ஏற்கெனவே ஒரு முடிவு அறிவித்து இருப்பதாக பத்திரிகைகளிலே எல்லாம் செய்தி வந்திருக்கிறது. நாளைய தினம் உச்சநீதி மன்றத்திலே அந்த நிலைமையை அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அதிலே பார்க்கிறபொழுது அவர்கள் பொருளா

[1991 செப்டம்பர் 30

[திரு. ச. இராமச்சந்திரன்]

தார அடிப்படையிலே இட ஒதுக்கீட்டையும், சமூக நீதியையும் குழப்புகின்றார்கள். இதனால் நாம் மேற்கொண்டிருக்கிற இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு இந்தக் கொள்கைக்கு, அது முரணாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். இங்கே நம்முடைய பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியும் சமூக நீதியிலே அவர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு அவர்கள் தங்களுடைய கட்சியின் மூலமாக டெல்லியிலேயும் இந்த நீதியை அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஏனென்றால் முற்பட்டோருக்கு என்று தனி இட ஒதுக்கீடு ஒரு 10 சதவீதம் என்று அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே, சமூக நீதி அடிப்படையிலே அது சரியாக வராது. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களேகூட சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு என்றுதான் பிரிவு 15 (4), 16 (4) என்று வைத்து இருக்கிறார்கள். பொருளாதாரத்திலே எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு அளவுகோல் வேறு. ஆகவே, அந்த 10 சதவிகிதத்தை அவர்கள் ஒதுக்கியிருப்பது, அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதா என்று எனக்குத் தெரியாது. சட்ட வல்லுநர்கள்தான் தெளிவாக்க வேண்டும். ஆனாலும், அது தர்ம நியாயத்திற்கு ஏற்றது அல்ல என்பதை இங்கே நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12.40

இந்தத் தீர்மானத்தை வரவேற்று அனுப்புகிறபோது, இதை இந்திய அரசு ஏற்றுக் கொள்கிற வாய்ப்பு இருக்கிறதா என்றும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தைத் தெளிவாக்கினார்கள். மண்டல் குழு பரிந்துரையில் எத்தகைய முடிவு எடுக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், தமிழ்நாட்டில் ஆளுங் கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழைக்க வேண்டுமென்ற அக்கறை ஏன் பிறக்கவில்லை என்பது, உண்மையிலேயே நம்மை சிந்திக்க வைக்கவேண்டிய ஒன்றாகும். ஏனென்றால், 50 சதவிகிதத்தை பிற்பட்ட மக்களுக்கு என்று அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிற மாநிலம் தமிழ் நாடு. ஆகவே, இந்த தமிழ்நாட்டின் அனுபவத்தைப் பெற,



1991 செப்டம்பர் 30]

[திரு. ச. இராமச்சந்திரன்]

ஆலோசனையைப் பெற, நிச்சயமாக அவர்கள் ஆளுங்கட்சியை அழைத்துப் பேசியிருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், 1951 ஆம் ஆண்டில் முதன்முறையாக அரசியல் சட்டத்திலே வேலைவாய்ப்புக்கு மட்டுமதான பிற்பட்ட மக்களுக்கு வாய்ப்பு தரப்பட்டது. பிரிவு 16 (4)-ன்படி. அன்றைய தினம், தந்தை பெரியார் அவர்களும், அவர்களோடு சார்ந்த அத்தனை பேரும், பிற்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் சேர்ந்து போராடியதன் விளைவாகத்தான், அவர்களுக்கு கல்வியிலேயும் இடம் வேண்டுமென்று போராடியதன் விளைவாக, இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 15(4), முதன்முதலாக, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அன்றையதினம், திருத்தம் செய்யப்பட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம், இந்த சட்டமன்றத்திலே இன்று நிறைவேற்றப்படுகிற தீர்மானம், வெறும் தீர்மானமாக இருந்து விடக்கூடாது. இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு அனைத்துத் தரப்பாரும், முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்தத் தீர்மானம், வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்ற அளவிலே இருந்து விடுமேயானால், அதனால் நாம்தான் பழிக்கு ஆளாவோம். எப்படி முதன்முதலாக, 1951 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் முன் நின்று, மிகப்பெரிய இயக்கத்தை நடத்தி, ஒரு அரசியல் சட்டத்திருத்தத்தையே கொண்டு வந்தார்களோ, அதற்காக எப்படி தமிழ்நாட்டு மக்கள் பேராதரவு தந்தார்களோ, அதேபோல் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி, பிற்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பதை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தேவைப்பட்டால், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கும், நாம் அத்தனை பேரும் சட்டமன்றத்திலே மட்டுமல்ல; மக்கள் மன்றத்திலேயும் போராடத் தயாராக இருக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். போராடுகிற அவசியம் இல்லாமலே நம்முடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் முன்வந்து, அந்தத் திருத்தத்தைச் செய்துவிட்டால் நல்லது. ஏனென்றால், இந்திய அரசைப் பொறுத்தவரையில் ஒரு கருத்து சரியாகவோ, தவறாகவோ இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

'மயிலே, மயிலே இறகு போடு' என்றால் அவர்கள் போட மாட்டார்கள். போராடித்தான் நாம் உரிமைகளை, அவர்களிடத்திலேயிருந்து பெற முடியும் என்ற ஒரு கருத்து இருக்கிறது.

[திரு. ச. இராமச்சந்திரன்]

அந்தக் கருத்து தவறு என்று அவர்கள் நிரூபிக்க முன் வருவார்களேயானால், உண்மையிலேயே நாம் இந்திய அரசை வரவேற்கக் காத்திருக்கிறோம். இல்லையென்றால், மயிலினிடத்திலே இருந்து இறகை நாம் எடுக்கிற முறையினை கையாள வேண்டித்தான வரும். அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி துணை நிற்கும் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர்.

பிற்பகல் 12.45

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்தும், அவர்களுக்கு சமூக நீதியை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடும், மண்டல் குழு பரிந்துரை செய்திருக்கிற அறிக்கையிலுள்ள 27 விழுக்காடு என்பதை 50 விழுக்காடாக மாற்ற வேண்டுமென்றும், வேலைவாய்ப்புகளுக்கு மட்டும்தான் 27 விழுக்காடு என்பதை கல்வியிலே இடம் ஒதுக்குகிறபோதும் ஒதுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, இங்கே மத்திய அரசு அதற்கான சட்டத்தை நிறைவேற்றி, நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இந்த அவையினுடைய ஏற்புக்காக வைத்திருக்கிறார்கள். நூறாண்டு, நூறாண்டு காலமாக, பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்த அளவுக்கு பல்வேறு வகைகளிலே பிற்படுத்தப்பட்டார்களோ, அந்த அளவுக்குச் சலுகைகளைத் தந்து தீரவேண்டிய அவசியமும், தாழ்த்தப்பட்டவர்கள் எந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு சலுகைகள் தரவேண்டிய அவசியம் நமக்கு இருக்கிற காரணத்தினாலேதான். இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி, சமூக நீதி வழங்கவேண்டிய ஒரு இன்றியமையா திட்டத்திற்கு நாம் அனைவரும் நகர்ந்து இருக்கிறோம். சரி சமமாக வாழவேண்டிய மக்கள் இனத்திலே, ஒரு சாராரை பல்வேறு காரணங்களினுடைய அடிப்படையில் பல்லாண்டு காலமாக, நூறாண்டு, நூறாண்டு காலமாக பள்ளத்திலே வீழ்த்தி விட்டார்கள் என்றால், பள்ளத்திலே வீழ்த்தப்பட்டவர்கள் தாங்களாகவே மேலே ஏறுவது என்பது, கரையேறுவது என்பது





[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இயலாத ஒன்று; மேலே இருப்பவர்கள் கை கொடுத்துக் கீழே விழுந்தவர்களைக் கை கொடுத்துத் தூக்கி விட்டால்தான் மேலே கரைக்கு வந்து, மேலே இருப்பவர்களுக்குச் சமமாக இருக்க முடியும் என்ற காரணத்தினாலேதான் உயர்ந்த இடத்திலே இருப்பவர்கள். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், ஆகியோர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டிய பொறுப்பு உடையவர்களாகவும், உணர்ச்சியுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவேதான், மேல் வகுப்பினர் என்று கருதுபவர்கள் எல்லாம் கை கொடுத்து, தள்ளப்பட்டவர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் எழுப்பி விட்டால்தான், அல்லது, இழுத்து விட்டால்தான் அவர்களும் சேர்ந்து கரைக்கு வருவார்களே தவிர, இல்லாவிட்டால் அவர்கள் கரையேற முடியாது என்ற காரணத்தாலேதான் சலுகைகளை வழங்க வேண்டிய இன்றியமையாக் கட்டாயத்திற்கு நாம் அனைவரும் வந்து இருக்கின்றோம்.

பிற்பகல் 12.45

அதுமட்டுமல்ல, இந்தத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், சென்ற 70 ஆண்டு காலமாக சமூக நீதி வழங்க வேண்டுமென்ற கருத்து பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களாலும், அவர்களைப் பின்பற்றி வருகின்ற கட்சியினராலும் நாட்டிலே பரப்பப்பட்டதன் காரணமாக, ஆரம்பக் கட்டத்திலே இதற்கு எதிர்ப்புகள் இருந்தாலும் கூட, இதில் இருக்கிற நியாயத்தையும், நேர்மையான தன்மையையும், இதில் இருக்கிற சமூகநீதிப் போக்கையும் அறிந்து கொண்டதன் காரணமாகத் தமிழகம் ஓரளவுக்குச் சென்ற 70 ஆண்டு காலமாகப் பக்குவப்படுத்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, எல்லோருடைய உள்ளங்களும் ஓரளவுக்கு நேர்மையான பக்கம் இருந்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தர வேண்டிய ஒரு கட்டத்திற்கு ஆளானதன் காரணமாகத்தான் தமிழகத்தைப் பொறுத்தவரை எவ்விதக் கிளர்ச்சிக்கும் இடமில்லாத வகையில் இது நடந்தேறியிருக்கிறது என்பதை நீங்கள் நன்றாகக்

காணலாம். ஆனால், இன்றைய நிலையில் மன்றத்திலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாகத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு நல்கி இருக்கின்றார்கள். இதனுடைய தன்மைகளையெல்லாம் நாம் பார்ப்போமேயானால் தமிழகம் எந்த அளவுக்குப் பக்குவப் படுத்தப்பட்டு, பதப்படுத்தப் பட்டு வந்திருக்கிறது என்பதை, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் இங்கே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

1921 ஆம் ஆண்டில் தான் முதன்முதலாக நீதிக்கட்சி இந்த மாநிலத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆளத் தொடங்கிற்று என்றாலும், 1916 வது ஆண்டிலே நீதிக்கட்சி துவங்கியதிலிருந்தே இந்த இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு தந்தாலொழிய, அவர்கள் வாழ்க்கையிலே பொருளாதாரத்தில் ஆனாலும் சரி, சமூக அந்தஸ்தில் ஆனாலும் சரி, அவர்கள் அறிவாற்றல் பெறுவதில் ஆனாலும் சரி, அவர்களுடைய அறிவுத் திறன், ஆற்றல் திறனைப் பயன் படுத்துவதிலானாலும் சரி, இவர்கள் வளர முடியாது என்ற கருத்தை அவர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆனால், காங்கிரசிலே, மாபெரும் காங்கிரஸ் இயக்கத்திலே ஈடுபாடு கொண்டிருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய செயலாளராகவும் இருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி யினுடைய தலைவராகவும் இருந்து, தீவிரமாக பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டு வந்தாலும், இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலும் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டே இந்தக் கருத்தை ஆதரித்து அதற்கு வலுவான ஆக்கத்தைத் தேடிக் கொண்டு வந்தார்கள் என்பதையும், காங்கிரசிலே அவர்கள் இருக்கின்றபோதே 1924 ஆம் ஆண்டு விலகுகிற காலம் வரையிலும் கூட இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள் என்பதையும் இந்த நாடு நன்கு அறியும். பெரியார் அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் 1925 ஆம் ஆண்டு, திருவண்ணாமலையில்



நடைபெற்ற மாநாட்டில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர அவர்கள் முயன்று, அப்போது அங்கேயிருந்த விஷய ஆலோசனைக் கமிட்டியிலே இதனை எதிர்த்ததன் காரணமாக அது விடுபட்டது. 1924-லே காஞ்சிபுரத்திலே நடைபெற்ற மாநாட்டிலும் திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அது கடைசிவரையில் எடுக்கப்படாமல் இருந்து, கடைசியிலே எடுக்கப்படாததன் காரணமாக, இனிமேல் இந்தக் காங்கிரஸ் கட்சியிலே எனக்கு வேலையில்லை என்று பெரியார் அவர்கள் அந்த மாநாட்டிலே இருந்து வெளியே வந்தார்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம். அப்பொழுதே இந்த உணர்வுகளுக்கு இடம் அளிக்கப்படவில்லை என்பதை எல்லோரும் உணர்வார்கள். 1921 ஆம் ஆண்டு நீதிக்-கட்சி ஆட்சியில் இருந்தபோது, 16—2—1921-லே இந்த இட ஒதுக்கீடு பற்றி அரசின் சார்பாக அறிக்கை வெளியிடப்பட்டது. பிறகு 15—5—1992 லேயும், 6—2—1924 லேயும் மீண்டும் வலியுறுத்தப் பட்டு இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த ஆணைகளை நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு அப்போது இருந்த வெள்ளைக்கார ஆளுநர் அவர்கள் சரியான இடம் தராததால், அதன் காரணமாக இது நிறைவேற்றப்பட முடியவில்லை. அதற்குப் பிறகுதான் 1927 வரையிலும் வெள்ளையர் ஆட்சியில் ஆளுநர் இணக்கம் இன்மையால் அந்த அரசாணைகள் நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தன.

பிற்பகல் 12.50

1927 வது ஆண்டில் நீதிக் கட்சி ஆட்சியில் உறுதிப்பாட்டோடு வெள்ளையர் ஆட்சியும் இணங்கி வந்ததன் காரணமாக 1927-லே தான் இந்தச் சட்டம் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டது. 4—11—1927-ல் இந்தச் சட்டம் மாண்புமிகு முத்தையா முதலியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தொடர்ந்து பல்வேறு துறைகள் வாயிலாக 1929-க்கும் அதன் தொடர்பாக ஆணைகளும் அடுத் தடுத்துப் பிறப்பிக்கப்பட்டு, தொடர்ந்து வந்திருக்கிறப் பாங்கினை நன்கு அறிவோம். அப்போது ஒதுக்கீடு செய்திருந்த முறைக்கும்

[1991 செப்டம்பர் 30

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்போது ஒதுக்கீடு செய்திருக்கிற முறைக்கும் இருக்கிற வேறுபாட்டையும் இந்த மன்றம் நன்கு அறியும் என்று நான் கருதுகிறேன்.

1927-ம் ஆண்டிலே நீதிக் கட்சியின் சார்பாக இந்தச் சட்டம் வந்தபோது அப்போது ஒவ்வொரு 12 இடங்கள் வேலை வாய்ப்புக்கும் முதன்முதலாகக் கொண்டுவந்து, 1929-30-க்குப் பிறகுதான் கல்வித் துறையிலும் இது இடம் பெற வேண்டுமென்று கொண்டுவரப்பட்டது. 1927-ல் வந்தபோது வேலைவாய்ப்புக்கு என்று கொண்டுவரப்பட்டபோது ஒவ்வொரு 12 இடங்களிலும் பிராமணர்கள் அல்லாதவர்களுக்கு 5 இடங்கள் என்றும், பிராமணர்களுக்கு 2 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு இடம் என்றும், ஆங்கிலோ இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு 2 இடங்கள் என்றும், முஸ்லீம்களுக்கு 2 இடங்கள் என்றும் ஆக 12 இடங்கள் ஆக்கப்பட்டன. இந்த 12 இடங்கள் என்ற நிலைமை அதற்குப் பின்னால் தொடர்ந்து வந்த ஆட்சி, மற்றவர்களாலும் காப்பாற்றப்படுகிற அளவுக்குத்தான் வந்திருக்கிறது.

1927-ல் நிறைவேற்றப்பட்ட அந்த இட ஒதுக்கீடு சட்டம் 1947 வரையிலும் தொடர்ந்து கையாளப்பட்டு வந்திருக்கிறது. 1937-ல் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் இந்தச் சட்டம் எந்தவகையிலும் கைவைக்கப்படாமல், திருத்தப் படாமல், மாற்றப்படாமல் நீதிக் கட்சி எந்த இட ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டுவந்ததோ அதைத்தான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1937-ல் நடைமுறைப்படுத்தினார்கள். பிறகு 1946-லே மாண்புமிகு பிரகாசம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் அதற்குப் பிறகு மாண்புமிகு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக வந்தபோதும் இந்தச் சட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1947 லேதான் ஒரு சிறு மாற்றம் செய்தார்கள். அந்தச் சிறு மாற்றம் 12 இடங்கள் என்பது 14 இடங்கள் என்று ஆக்கப்பட்டு, பிராமணர்கள் அல்லாத இந்துக்களுக்கு 6 இடங்கள் என்றும் பிற்பட்டவர்களுக்கு 2 இடங்கள் என்றும், பிராமணர்களுக்கு 2 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 2 இடங்கள் என்றும், ஆங்கிலோ இந்தியர்களுக்கு ஒரு இடம் என்றும், முஸ்லீம்களுக்கு ஒரு இடம் என்றும் வகுக்கப்பட்டது.



1991 செப்டம்பர் 30

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படுவதற்கு முன்பு, இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாறுபட்டது என்ற வழக்கு 1951 வது ஆண்டு திருமதி செண்பகம் துரைராஜ் என்பவரால் சென்னை மாநில அரசின் வகுப்புவாரி ஒதுக்கீட்டினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றபோது ஏழு நீதிபதிகள் இருந்து தீர்ப்பளித்தார்கள். அதை ஆராய்ந்து, தமிழ்நாட்டிலே வகுப்பு வாரி பிரதிநிதித்துவ இட ஒதுக்கீடு சட்டம் அடியோடு செல்லாது, இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி என்கிற காரணத்தால் அந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டம் அடியோடு செல்லாது என்று தீர்ப்பளித்தார்கள்.

அதற்குப் பிறகு பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும் மற்றவர்களும் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டம் இல்லாவிட்டால் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் உயராது என்று கருதி, பெரியார் வழியைக் கடைப்பிடித்தார்கள். காங்கிரசிலே பெரும் பங்கு வகித்து, காங்கிரசிலே தலைமை ஏற்று நடத்தி வந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் இந்தக் கருத்திற்கு உடந்தையாக இருந்ததன் காரணமாக அவர்கள் இந்தக் கருத்தை ஏற்று, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும் இருந்த நெருங்கிய தன்மை காரணமாகவும், அவர்களிடத்திலே நம்பிக்கைக் கொண்டிருந்ததன் காரணமாகவும் தமிழ்நாட்டிலே இதைக் கொண்டுவருவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய முதல் திருத்தமே இந்த வகுப்பு வாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம் தருகின்ற அளவுக்கு கொண்டுவரப்பட்ட திருத்தம்தான். அதற்குப் பிறகு மாறுதல்கள் ஏற்பட்டு, இப்போது வந்திருக்கிற நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எந்த ஒரு எதிர்ப்புக்கும் எந்த ஒரு கிளர்ச்சிக்கும் இடம் இல்லாத வகையில், இங்கே இருக்கிற மக்கள் சமூக நீதியையும் நியாயத்தின் தன்மையினையும் உணர்ந்திருக்கிற காரணத்தால் இந்தத் தமிழகத்தில் அமைதியான முறையில் மாற்றங்களை நம்மால் செய்ய முடிந்திருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை வடக்கே, வட மாநிலங்களில் ஏற்படாத

[1991 செப்டம்பர் 30
[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தன் காரணமாகத்தான், இப்படிப்பட்ட தன்மைகளை அவர்களே உணர்ந்துகொள்ளாததன் காரணமாக இன்னும் சொல்லப்போனால், அங்கே இருக்கிற மேல் வகுப்பினர் மட்டுமல்ல ; அங்கே இருக்கிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றவர்களுக்குக் கூட இதனுடைய பலன்கள் மற்றவைகள் தெரியாததன் காரணமாக அவர்களே இப்படிப்பட்ட கிளர்ச்சிகளிலே ஈடுபடுகிற அளவுக்கு நிலைமைகள் ஏட்பட்டிருக்கின்ற காரணத்தால் விளக்க வேண்டிய அளவுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அளவுக்கு உணர்த்த வேண்டிய அளவுக்கு அங்கே நிலைமைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக அங்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12.55

இங்கே மண்டல் கமிஷனுடைய தன்மைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அதனுடைய அமைப்பு முறைகள் மற்றவைகளை எல்லாம் நான் விரிவாக எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். மண்டல் குழு அமைக்கப்பட்டது என்றாலும் அந்தக் குழு அமைப்பதற்கான வரம்புகளையும், விதிமுறைகளையும் நாம் அடிப்படையாகக் காணவேண்டும். அதை அமைப்பதற்கு வைத்திருந்த விதிமுறைகள், வரம்புகளை இங்கே நான் சுட்டிக்காட்டுகிறேன். அந்தக் கமிட்டி எந்த அடிப்படையில் எந்த நோக்கத்தில் எந்தக் கொள்கையில் எந்தத் திட்டத்தில் இதை ஆராய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள் என்றால் பிற்பட்டவர்களில் கல்வி ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியுள்ளவர்களைப்பற்றி முடிவு செய்ய ஒரு வழிகாட்டுதலை அமைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மண்டல் குழுவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கண்டிஷன் அடிப்படையிலே அதாவது எந்த அடிப்படையிலே நிர்மாணிக்க வேண்டுமென்று சொல்கிறபோது பிற்பட்டவர்களில் கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பின்தங்கியுள்ளவர்களை முடிவு செய்யக்கூடிய ஒரு வழிகாட்டுதலை அமைக்கவேண்டும். சமூகம் மற்றும் கல்வி ரீதியாக அடையாளம் காட்டப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற அரசு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் அவர்கள் சிபாரிசு செய்யவேண்டும். மத்திய, மாநில அரசுப் பணிகளில் போதுமான அளவில் இல்லாத பிற்படுத்தப்பட்டோருக்கு



1991 செப்டம்பர் 30]
[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எந்த அளவுக்கு ஒதுக்கிடு செய்யலாம் ; எந்த அளவுக்கு அளிக்க முடியும் என்பதை ஆராய்ந்து பரிந்துரை செய்யவேண்டும். எந்த அளவுக்கு ஒதுக்கீடு செய்யலாம் ; எந்த அளவுக்கு அரசால் முடியும் என்பதையும் குறிப்பிட்டு ஆதாரங்களைத் தொகுத்து குடியரசுத் தலைவரிடம் அறிக்கை அளிக்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைக் கணிக்க குழுவினர் எந்தெந்த அம்சங்களை முக்கியமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி ஆய்வுக்கு அவை எடுத்துக்கொள்ளப்பட்டன. அதிலேயும் கவனிக்க வேண்டும். அதிலே பரம்பரையாக ஜாதி சூழ்நிலையில் உயர்ந்த ஜாதிக்காரர்களால் தாழ்ந்த ஜாதிகள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களைப் பிற்படுத்தப்பட்டவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். எந்த ஜாதியில் பெண்கள் 25 சதவீதத்திற்கு மேல் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்களோ அந்த ஜாதியினர் பிற்படுத்தப்பட்டவர்களாகக் கணக்கிடப்பட வேண்டும். கல்வி ரீதியாகச் சொல்கிறபோது எந்த ஜாதியில் 5 முதல் 15 வயதுக்குள் உள்ளவர்களில் 25 பேருக்கு மேல் பள்ளிகளை எட்டிப் பார்க்க முடியவில்லையோ அப்படிப்பட்ட வகுப்பினரையும் பிற்பட்ட வகுப்பினர்களாகக் கருத வேண்டும். எந்த ஜாதி 5 முதல் 15 வயதுக்குள் உள்ளவர்களில் 25 சதவீதத்திற்கு மேல் வருமானம் இல்லாதவர்களாக மேற்கொண்டு படிக்க முடியாமல் விட்டவர்களாக இருக்கிறார்ளோ அந்த ஜாதியினரும் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்பட வேண்டும்.

எந்த ஜாதியில் 5 வயது முதல் 15 வயதுக்குள் உள்ளவர்களில்
25 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடர
முடியாதவர்களாக இருக்கிறார்களோ அந்த வகுப்பினரும் பிற்
பட்ட வகுப்பில் சேர்க்கப்படவேண்டும் என்று சொல்லியதோடு
மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டோர்
கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்லி, எந்த ஜாதியில் அரசு
நிர்ணயித்துள்ள அளவு சொத்தில் 25 சதவீதத்திற்குக் குறைவான
சொத்து உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களும் பிற்
படுத்தப்பட்டவர்களாகக் கருதப்பட வேண்டும். எந்த ஜாதியில்
25 சதவீதத்திற்குமேல் குடிசைகளில் வாழ்கிறார்களோ அந்த
வகுப்பினரும் எந்த ஜாதியில் உள்ளவர்கள் அரை கிலோ மீட்டர்
தூரம் வரை சென்று குடிநீர் கொண்டுவரவேண்டிய அவல நிலை
யில் இருக்கிறார்களோ அவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களாகக்

[1991 செப்டம்பர் 30

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கருதப்பட வேண்டும் என்று இப்படி 11 அம்சங்கள் போட்டு அந்த அம்சங்களின் அடிப்படையில்தான் மண்டல் குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த மண்டல் கமிஷன் இந்தியாவில் இருக்கின்ற 467 மாவட்டங்களில் 405 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து இந்த கருத்துக்களை எல்லாம் அவர்கள் திரட்டியிருக்கிறார்கள். 3 வகைகளில் அதாவது சமூக ரீதியாக, கல்வி ரீதியாக, பொருளாதார தியாக வந்த பிற்படுத்தப்பட்டவர்களின், பட்டியலைக் காட்டியிருக்கிறார்கள் மண்டல் குழு தன்னுடைய அறிக்கையை 31—12—1980 அன்று மத்திய அரசினிடத்தில் சமர்ப்பித்தது. ஆனால் 13—4—1982-ல் தான் மண்டல் அவர்கள் மறைவு எய்தினார். அதற்குப் பிறகு 1982-லேதான் இந்த மண்டல் குழுவினுடைய அறிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே மிக, மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்ன என்று கேட்டால் மண்டல் கமிஷனுடைய முக்கியமான பரிந்துரை என்று காண்கிறபோது அதைத்தான் நாம் திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறோம்.

ஆனால் மண்டல் குழுவினுடைய பரிந்துரை ஒன்று என்பதையும், மாண்புமிகு பிரதமராக இருந்த திரு. வி. பி. சிங் அவர்கள் கொண்டு வந்த உத்தரவு வேறு ஒரு விதமாக அமைந்திருந்தது என்பதையும் நாம் காண்கிறோம். மண்டல் குழுவினுடைய பரிந்துரையின் பேரில்தான் மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள் கொண்டு வந்த அந்தச் சட்டமும், ஆணையும் இருந்தன என்புதை ஒப்புக்கொண்டாலும் அதில் சிலபல வேறுபாடுகள் இருந்தன என்பதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

பிற்பகல் 1.00

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபோதுகூட, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்து முன்னாள் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்கள் பாராளுமன்றத்திலே 3½ மணி நேரம் பேசுகிறபோது அவர்கள் எதிர்த்தார்கள் என்றார்கள். அவர்கள் எதிர்க்கவில்லை. மண்டல் கமிஷனுடைய கருத்தை முழுக்க நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, சில பல குறைகளை ஏன் விட்டுவிட்டார்கள்



1991 செப்டம்பர் 30]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்பதையும் சுட்டிக்காட்டி, கல்வித் துறைக்கு ஏன் இல்லை என்றும் கேட்டு, இங்கே எழப்படுகின்ற இடங்களை பிற்பட்டவர்கள் வகுப்பிலே இருக்கின்ற இடத்திலே வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள், தொழில் அதிபர்கள் மற்றவர்களுக்குச் சொல்லாமல், அந்த ஒதுக்கப்படுகின்ற இடம் பிற்பட்டவர்களுக்குத்தான் போகவேண்டும். ஆனால் போகின்ற வசதிகள், வாய்ப்புகள் ஏழைகளுக்கு, பிற்பட்டவர்களுக்குப் போகவேண்டும். பிற்பட்டவர்களிலே இருக்கின்ற வசதி படைத்தவர்களுக்குப் போகாமல், தொழிலதிபர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் போகாமல், தொழிலதிபர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் போகாமல் ஏழைகளுக்குப் போகட்டும் என்றுதான் வாதாடினாரே தவிர, குறைகளைச் சுட்டிக்காட்டினாரே தவிர, அவர்கள் எதிர்க்கவில்லை. இந்த மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளைப் பார்ப்பீர்களேயானாலும்கூட பிற்பட்டவர்கள், சமூக அடிப்படையிலே, கல்வி அடிப்படையிலே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 27 சதவிகிதம் வேலைகள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இது தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், பழங்குடி மரபு மக்களுக்கும் என்று ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கின்ற 22 சதவிகிதத்திற்கு கூடுதலான ஒதுக்கீடாகவும், ஆக மொத்த இடம், 22.5 மற்றும் 27 சதவிகிதம், ஆக 49.5 சதவிகிதம் ஆகும் என்று சொல்லி விட்டார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களைச் சேர்ந்தவர்கள் பகிரங்கமாக போட்டியில் தேர்வு செய்யப்பட்டால் அதை இந்த 27 சதவிகிதம் கணக்கில் கொண்டு வந்து சரிக்கட்டக்கூடாது. அது தவிர இது தனித்தனியாக இந்த 27 சதவிகிதம் இடங்களும் வழங்கப்பட வேண்டும்.

மேலும், வேலைக்கு முதன்முதலில் தேர்வு செய்யும் நிலை மட்டும் இல்லாமல் பதவி உயர்விலேயும் எல்லா நிலையிலும் இந்த 27 சதவிகிதம் வழங்கப்பட வேண்டும் என்றுதான் மண்டல் குழு பரிந்துரைத்தது. ஆனால் வி.பி. சிங் அவர்களின் ஆட்சி வந்து, அந்த திட்டத்திலே இந்த பதவி உயர்விலே எல்லா சூழ் நிலையிலே 27 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்ற கருத்து வி. பி. சிங்கினுடைய அறிக்கையிலே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் மண்டல் குழுவினுடைய அறிக்கையிலே அது இருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட 27 சதவிகித இடங்களையும் நிரப்ப போதிய நபர்கள் கிடைக்கவில்லை என்றால் 3 வருடங்கள் காத்திருந்து பார்க்கவேண்டும். அப்படியும் போதிய நபர்கள் கிடைக்க

வில்லை என்றால் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட இடங்கள் புதிய பட்டியலில் இருந்து நிரப்பப்பட அனுமதிக்கப்படலாம் என்றும் மண்டல் குழு பரிந்துரைத்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடி வகுப்பினருக்கும் வழங்கப்பட்டு வருவது போல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் உச்சபட்ச வயது வரம்பில் சலுகை காட்ட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடி மரபினருக்கும் வைக்கப்பட்டிருப்பதுபோல் ஒவ்வொரு வகையான பதவிக்கும் தனித்தனியான பட்டியல் முறை பின்பற்ற வேண்டும் என்பதையும் மண்டல் குழு வற்புறுத்தி இருக்கிறது. இந்த இடஒதுக்கீடு, அது தொடர்பான பிற ஏற்பாடுகளும், மத்திய அரசு, மாநில அரசுகளின் பதவிகள் அனைத்துக்கும், இந்த அரசுகளின் பொதுத் துறை நிறுவனப் பணிகளுக்கும், தேசியமயம் ஆக்கப்பட்ட வங்கிகள் பணிகளுக்கும் பொருந்தும் என்று மண்டல் குழு பரிந்துரை பண்ணி இருக்கிறது. ஆனால் வி. பி. சிங்கினுடைய தன்மைகளில் இது பல துறைகள், அனைத்துத் துறைகளுக்கு மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், பொது நிறுவனங்களாக இருந்தாலும் ; வங்கிகளாக இருந்தாலும் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொல்லியும், வி. பி. சிங்கினுடைய அறிக்கையிலே என்ன இருந்தது, அவர் வெளியிட்ட சட்ட அறிக்கையிலே என்ன இருக்கிறது என்றால், ராணுவத் துறை, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறை, விண்வெளித் துறை, அணுசக்தித் துறை, கல்வித் துறை, மாநிலங்கள் மீது உத்தரவு திணிக்கப்படமாட்டாது, இந்தத் துறைகளில் இந்த ஒதுக்கீடு இல்லை என்று வைத்தார்கள். இந்த இடத்திலேதான் மண்டல் குழுவினுடைய பரிந்துரை வி. பி. சிங்கினுடைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை குற்றச்சாட்டாக மற்றவர்கள் சாட்டவேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. (குறுக்கீடு) இதிலே என்ன சந்தேகம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, -கல்வியிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் மாணவர்களுடைய எதிர்ப்பும், கிளர்ச்சியும் அதிகமாக இருந்த காரணத்தினாலே, அதை அந்த இடத்திலே ஒத்திவைத்தார்கள். அவ்வளவு தானே தவிர, மாற்ற வேண்டாம் என்று . . .



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராணுவத் துறை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை, விண்வெளித் துறை, அணுசக்தித் துறை, கல்வித் துறை இவைகளில் எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு தான் கிளர்ச்சிகள் வந்தது. இந்த ஒதுக்கீடு கூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. மாணவர்கள் மற்றவர்கள் செய்தார்கள் என்பது வேறு.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் Habitual supplying of wrong information to the House -க்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா? அப்படி எடுத்தால் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் மீது எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.05

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பரிந்துரைகள் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைதான் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். மற்றொன்று, அரசிடமிருந்து எந்த ஒரு வகையிலும் நிதியுதவி பெறுகின்ற தனியார் துறை தொழில் நிறுவனங்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பணி வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று மண்டல் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இதையும் திரு. வி. பி. சிங் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அந்த அறிக்கையிலும் இது இடம் பெறவில்லை. அனைத்துப் பல்கலைக் கழகங்களும், அவைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் கல்லூரிகளும் இந்த முறையை கடைப்பிடிக்க வேண்டும். மண்டல் குழுவினுடைய இந்தப் பரிந்துரையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மத்திய அரசாலோ மாநில அரசுகளாலோ நடத்தப்படும் அறிவியல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதைப் பொறுத்தவரையிலும் கூட 27 சதவிகிதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்களை தேர்வு செய்ய வேண்டும் என்ற அந்த பரிந்துரையும் திரு. வி. பி. சிங் அவர்களுடைய அறிக்கையிலே இடம் பெறவில்லை.

[1991 செப்டம்பர் 30

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏதேனும் மாநிலங்களில் இந்த 27 சதவிகிதத்தை விட கூடுதல் சதவிகித இடங்களை ஏற்கெனவே ஒதுக்கீடு செய்து வழக்கத்தில் இருந்தால் அதை இந்த பரிந்துரை பாதிக்காது என்று இருப்பதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மற்றொன்று. இதை சில மாநிலங்கள், மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா, ஹிமாச்சல் பிரதேஷ் போன்ற 4, 5 மாநிலங்கள் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், இந்த வி.பி. சிங் அவர்கள் விட்ட இட ஒதுக்கீட்டு முறையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று பகிரங்கமாக சொன்னதோடு மட்டுமல்லாமல், மேற்கு வங்கம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுடைய பட்டியலே எங்களிடத்தில் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியல் மற்றும் அனைத்து வகுப்பினர்கள் பெயர் பட்டியலை வைத்து, ஒன்றாக வைத்து கணக்கிடுகிறோமே தவிர, எங்களிடத்தில் பிற்படுத்தப்பட்டோர்க்கு என்று பட்டியல் இல்லை என்று வாதிட்டுக்கொண்டனர்.

அந்த நிலையிலும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த இந்தியாவின் பிரதமராக இருந்த மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்கள் எந்தெந்த மாநிலங்கள் கடைப்பிடிக்க முடியுமோ அந்த மாநிலங்கள் மட்டும் கடைப்பிடிக்க வேண்டும். யார் யார் வேண்டாமென்று சொல்கிறார்களோ அவர்கள் கடைப்பிடிக்க வேண்டாம் என்று சொன்னார்கள். இந்தக் குழப்பத்தைத் தான் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள் இந்தியாவின் சார்பாக, 'இந்தியாவிலுள்ள அத்தனை மக்களுக்கும் ஒரு சட்டம் கொண்டு வருகிறோம் என்றால் விருப்பப்பட்ட மாநிலங்கள் அதை நடைமுறைப்படுத்தலாம், விருப்பப்படாத மாநிலங்கள் நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று சொன்னால் நடைமுறையில் அது எப்படி பொருந்தி வரும்? மத்திய அரசாங்கத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்படுகிற வேலைகளுக்கு தான் இது. அந்தந்த மாநிலங்களைப் பொறுத்து தேர்ந்தெடுக்கப்படுகிறது அவரவர்கள் விருப்பம். விருப்பம் இல்லையென்று சொல்லிவிடலாம். மாநில அளவில் ஒதுக்கீடு செய்யும்போது ஒவ்வொரு மாநிலங்களும் அவரவர்கள் விருப்பப்படி நடக்கிறார்கள். இது மத்திய அரசினுடைய வேலை வாய்ப்புக்கு மட்டும் பொருந்தியிருக்கிற காரணத்தினால், சில



1991 செப்டம்பர் 30]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாநிலங்கள் செய்தால் செய்யலாம், செய்யாவிட்டால் வேண்டாமென்று சொல்வதெல்லாம் சரியாக இருக்காது என்கிற நிலைமையிலே தான் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அதுமட்டுமல்லாமல், இட ஒதுக்கீட்டை 27 சதவிகிதமாக ஒதுக்கியிருந்தாலும் கூட தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இங்கே 50 சதவிகிதமாக ஆக்கப்பட்ட சூழ் நிலையை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இதையே 9 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்கள், பிற் படுத்தப்பட்டவர்களுக்கே இந்த 31 இடங்களும் போகட்டும், ஆனால் இந்த 31 இடங்களும் வசதி படைத்தவர்களுக்கு போகாமல், 2, 3, 4 தலைமுறையாக படித்துப் படித்துப் படித்துப் படித்து வசதி பெற்ற ஒரு குறிப்பிட்ட வசதி படைத்தவர்களிலே அந்த இடங்களையும் அவர்கள் அனுபவிப்பதற்கு இடம் கொடுக்காமல், ஆனால் வசதி குறைவாக இருக்கின்ற, 9 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கும் கீழே இருக்கின்ற பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அந்த இடங்கள் போக வேண்டும். வேறு யாருக்கும் போக வேண்டாம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் அது போக வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்தக் கருத்தை எடுத்துச்சொன்னார்கள்.

[பிற்பகல் 1.10]

1971 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். சட்டநாதன் அவர்களுடைய தலைமையின்கீழ் ஒரு குழு முதன் முதலாக அறிவிக்கப் பட்டபோது கூட சட்டநாதன் ஆராய்ந்தறிந்து, பிற்படுத்தப் பட்டவர்களுக்கு என்று இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், கல்வி நிறுவனங்களில், அரசாங்க வேலைகளில், மற்றவைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், குறிப்பிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே உயர்ந்த ஜாதி என்று கருதப்படுகிற குறிப்பிட்ட வர்கள் தான் அதை முழுக்க அனுபவித்துக் கொண்டு போகி றார்கள். ஆகவே, அவர்களுக்குக் கீழே இருப்பவர்களுக்கு அது போகாமல் போய் விடுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது மாதிரி 'கடைமடைக்கு தண்ணீர் போகாமல் தலையிலேயே தண்ணீரை எடுத்துக்கொண்டு விடுகிறார்கள், கடைமடைக்கு அது போய் சேர்வதில்லை' என்பது மாதிரி வசதி படைத்த, வளர்ந்த, பல 2, 3 தலைமுறையாக படித்த மேம்பாடு

[1991 செப்டம்பர் 30
[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எட்டிய அந்தக் குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமே வருகின்றதை
எடுத்து, வாரிக் கொண்டு விட்டுவிடுகிறார்கள். கீழே போய்
சேரவில்லை என்று சொல்லிய அவர் எப்படியோ 13 ஜாதிகளை
பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டுமென்று
சொன்னார். ஆனால் எந்த ஜாதி என்று அவர் சொல்லவில்லை.
சொல்லியிருந்தால் அவருக்கு ஆபத்து வரும் என்று நினைத்த
தாலோ அல்லது கிளர்ச்சி வரும் என்று நினைத்ததாலோ அல்லது
எந்த சேர்க்கப்பட்ட ஒரு ஜாதியையும் நாம் நீக்கினால் அந்த
ஜாதியினர் கிளம்பிவிடுவார்கள் என்ற காரணத்தாலோ அதற்கு
மேல் அவர் சொல்லவில்லை. கிட்டத்தட்ட 136 ஜாதி, பிறகு 172
ஆக வளர்ந்து, அந்த பிற்படுத்தப்பட்ட பட்டியலில் மேலும்
ஜாதிகள் சேர்ந்து 1987 ஆம் ஆண்டு வாக்கிலே மொத்தம் 201
ஜாதிகள் என்கிற அளவில் சேர்க்கப்பட்டது. ஒரு காலத்தில்
136 ஜாதிகள் தான் இருந்தன. அதற்கு அப்புறம் சில சாதிகள்,
முற்போக்கு சாதிகள் என்று கருதப்பட்டவைகளை பின்னால்
சேர்த்து, அவர்களும் பிற்பட்டவர்கள், அவர்களும் பிற்பட்ட
வர்கள், இவர்களும் பிற்பட்டவர்கள் என்று சேர்த்து, 136 ஆக
இருந்த சாதிகள் பிற்பட்டோருடைய பட்டியலில் 201 ஆன
தற்குப் பிறகு, டைல்யூட் என்பார்கள் ஆங்கிலத்தில், அதைப்
போல இடங்கள் ஒதுக்கீடு செய்வது பரவலாக ஆனதற்குப்
பிறகு, அது ஒரு சிலருக்கு மட்டும் போகின்ற சூழ்நிலை ஏற்
பட்டதென்ற கருத்தை ஒட்டித்தான் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள், பொருளாதார அடிப்படையிலே என்று
சொன்னார்கள். அதற்குப் பிறகு எல்லோரும் கிளர்ச்சி செய்ததன்
காரணத்தால், மக்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை, புரிந்து
கொள்ளும் காலம் வரட்டும் என்று அதை நீக்கிவிட்டு, 50 விழுக்
காடு என்று ஆக்கினார்கள். 31-ஐ 50 ஆக ஆக்கியதே எல்லோ
ருக்கும் வியப்புக்குரியதாகவும், மற்ற வகைகளிலேயும் இருந்தன.
ஏனென்றால் 56 சதவிகிதத்தினர் அப்போது பிற்பட்ட வகுப்
பினர்கள் இருந்தார்கள். 50 சதவிகிதமாவது அவர்களுக்கு
ஒதுக்கீடு செய்வது பொருத்தமாக இருக்கும், நியாயமாக
இருக்குமென்று கருதி புரட்சித் தலைவர் அவர்கள் செய்
தார்கள். அப்படிச் செய்த உடனே, திராவிட முன்னேற்றக் கழகத்
தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மக்களே கேட்காத போது
ஏன் இவ்வளவு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றுதான்
கேட்டார்கள்.



1991 செப்டம்பர் 30]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)
[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன்னும் ஒரு உதாரணமும் சொன்னார்கள். விருந்துக்குச்
செல்லுகின்றபோது, விருந்திலே பரிமாறும்போது விருந்திலே
உட்கார்ந்திருக்கிறவர்களே எதிர்பாராத அளவுக்கு விருந்திலே
ஏராளமாகப் பரிமாறிவிட்டார்கள், ஏன் இவ்வளவு பரிமாறி
னார்கள் என்று கேட்கின்ற அளவுக்கு 50 சதவிகிதமாகக் கொடுத்
திருக்கிறார்கள் என்று 31-ஐ 50 ஆக ஆக்கியதற்கு எதிர்ப்புத்
தெரிவிக்கின்ற அளவுக்குக் கருத்துக்களைக் கூறியவர்கள்தான்
அவர்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இருந்தும்கூட, 56
சதவிகிதம் பிற்பட்டவர்கள் இருக்கிறார்கள், 50 சதவிகிதம் அவர்
களுக்கு ஒதுக்குவதுதான் நியாயமென்று சொல்லி, புரட்சித்
தலைவர் அவர்கள் ஒதுக்கினார்கள். மண்டல் குழு அறிக்கை
தாக்கல் செய்யப்பட்டு, அது நடைமுறைக்கு வருவதற்கு முன்
னாலேயே இந்த மன்றத்திலேயே ஒரு கேள்விக்கு நான் பதில்
சொல்லியிருக்கிறேன். 31—12—1980-லே தான் மண்டல் அவர்கள்
தன்னுடைய அறிக்கையை மத்திய அரசுக்குத் தந்திருக்கிறார்கள்.
அதற்குப் பிறகுதான், 2 ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசு
நடவடிக்கை எடுத்திருக்கிறது. மண்டல் குழு மத்திய அரசிடம்
அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னாலேயே, 1—7—1980-ல்
இந்த அவையில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கின்றபோது நானே
பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களின் சார்பாக. அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.
மக்கள் குரல் பத்திரிகையில் வந்ததை அப்படியே கத்தரித்து
வைத்திருக்கிறேன். அதை இங்கே மாண்புமிகு பேரவைத்
தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்ட விரும்புகிறேன். அது
எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அப்போது என்ன
சொன்னேன் என்பது வந்திருக்கிறது. 'தமிழகத்தில் பிற்பட்
டுத்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு
செய்யப்பட்டு இருப்பது போலவே மத்திய அரசு செய்ய வேண்டு
மென்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது, என்று சட்ட
சபையில் நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தகவலைத் தெரி
வித்தார் என்று சொல்லிவிட்டு, தமிழ்நாட்டில் கல்வி, வேலை
வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள், முன்
னேறிய சமூகத்தினர் என்று 3 பாகுபாடுகள் செய்து, ஒவ்வொரு
பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு செய்து அமுல்படுத்தி வருகிறோம்;

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தமிழகத்தில் இப்படி 3 பிரிவுகளாகப் பிரித்து சலுகைகளை வழங்கி வருவதுபோல மத்திய அரசும் பின்பற்ற வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் கோரிக்கை கொடுத்திருக்கிறோம். இப்போது தமிழகத்தில் 50 சதவிகிதம் ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதையே மத்திய அரசும் பின்பற்ற வேண்டுமென்று மண்டல் குழு அறிக்கை கொடுப்பதற்கு முன்னாலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கியபோதே வற்புறுத்தி வந்திருக்கிறது. பிறகு டிசம்பர் திங்களிலே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, 2 ஆண்டுகளுக்குப் பிறகு அதை நடைமுறைப் படுத்தவில்லை—பாராளுமன்றத்திலே அந்த அறிக்கை வைக்கப் பட்டது. 8—7—1990-லே மாண்புமிகு முதல்வரவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கின்றபோதே, அது சம்பந்தமாக மாச்சரியமான கருத்துக்கள் வந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் இது தான் என்பதைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொன்னார்கள். நாம் பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை ஆதரிப்பவர்கள், அது நமது அடிப்படையான கொள்கை; இந்த இட ஒதுக்கீட்டின் மூலமாக சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நினைப்பவர்கள், பிரதமர் வி. பி. சிங் மண்டல் பரிந்துரைகளை அமல்படுத்த முடிவெடுத்ததை ஏற்கெனவே வரவேற்றிருக்கிறேன், பிரதமர் வி. பி. சிங் அவர்கள் மண்டல் குழுவின் அறிக்கையை எடுத்து நடைமுறைப் படுத்தும் முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம், போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம், வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்: அதிலே இருக்கும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அதை நிறைவு செய்ய வேண்டுமென்பதைத்தான் அப்போதே வற்புறுத்தி வந்திருக்கிறோம் என்று 8—7—1990-லே வெளியிட்ட அறிக்கையிலே மாண்புமிகு முதல்வரவர்கள் பொதுச் செயலாளர் என்ற முறையிலே அறிக்கையை வெளியிட்டார்கள். முடிவெடுத்ததை நாங்கள் ஏற்கெனவே வரவேற்றிருக்கிறோம். புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடு கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பிலும் ஏற்படுத்தித் தந்தார்கள். அதேபோல, மத்திய அரசும் செய்ய வேண்டுமென்று. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீதம்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இடங்கள் ஒதுக்கியது போதாது 50 சதவீத இடங்கள் ஒதுக்கப் படவேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு இல்லையென்று சொல்வது தவறு. அங்கேயும் இதை அமல்படுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப் பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் எல்லோரையும் மத்திய அரசின் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று தான் மாண்புமிகு முதல்வர் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். என்பது மட்டுமல்லாமல், நாட்டு மக்களுக்கு அறிவிக்கிற வகையிலும் சுவரொட்டிகளின் மூலமாக மண்டல் பரிந்துரைகளை ஆதரிக்கிறோம், 27 சதவீதம் போதாது. 50 சதவீதம் வேண்டும், கல்வி நிலையங்களிலும், அமல்படுத்துங்கள். எல்லாத் துறைகளுக்கும் கொண்டுவாருங்கள், ஏழைகளுக்குப் பயன் கிடைக்கும்படி செய்யுங்கள் என்று அந்த சுவரொட்டிகளில் அடித்து, நாடெங்கும் பரப்பப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். என் இந்த நிலையை கல்வி நிலையங்களில் கொண்டுவரவேண்டும் என்பதை சொல்கிறேன். என்றால் கல்வி நிலையங்களில் படித்து பட்டதாரிகளாக, பி.ஏ., பி.எஸ்.சி., எம்.ஏ., எம்.எஸ்.சி., பி.காம்., எம்.காம், பி.ஈ., எம்.பி.பி.எஸ். என்ற பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல், வேலைவாய்ப்பில் எப்படி நுழைய முடியும்?

பிற்பகல் 1-15

அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிற போது முதலில், பொருளாதாரத்தை பார்த்துக் கொண்டுதான் பிறகு கல்வி நிலையங்களைப் பற்றி கவனிக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினரும் சொல்லியிருக்கிறார்கள். என்பதில் நாம் வியப்படைய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான தகுதி பெறாமல் வேலை எப்படி தர முடியும்? ஒவ்வொரு வேலைக்கும் பி.ஏ., படித்திருக்க வேண்டும். பி.எஸ்.சி. படித்திருக்க வேண்டும். எம்.ஏ., எம்.எஸ்.சி., படித்திருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படும்போது, அந்தப் படிப்பைப் பெறாமல் இட ஒதுக்கீடு வேலைவாய்ப்பில் எப்படி பெறமுடியும்? படிப்பு வாய்ப்பு தராவிட்டால் என்ன பயன்? தாழ்த்தப்பட்டவர்கள் யாருமே வராமல், பிற்படுத்தப்பட்டவர்கள் யாருமே வராமல் இருந்தார்கள். ஆகவே முற்பட்ட இனத்தவர்க்கே அவ்வளவு இடத்தையும் கொடுத்து விட்டோம் என்ற நிலைதான் ஏற்படுமே தவிர, அந்த

[1991 செப்டம்பர் 30

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேலைக்கு முன்னால் நாம் செய்ய வேண்டிய பணி கல்விதான். கல்வியிலே இட ஒதுக்கீடு செய்தால்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்க முடியும். அந்த நிலையை தமிழகம் நீண்ட பெரும் காலமாக செய்து வருவதன் காரணமாகத் தான் இதில் நல்லதொரு வளர்ச்சியையும் நாம் காணமுடிகிறது.

1927-லே இந்த இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டுவந்ததன் காரணமாக, கிட்டத்தட்ட அந்த தலைமுறை ஓரளவுக்குக் கற்று, அதற்கு அடுத்த தலைமுறையும் பலன் பெற்று, மூன்றாவது தலைமுறையும் பயன்படுகிற அளவுக்கு, இந்த 62—64 ஆண்டுகள் ஆனதன் காரணமாக எந்த நிலைக்கு இந்த நாடு வந்திருக்கிறது என்பதற்கு ஒரு குறிப்பை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறார்கள் முதல் தலைமுறை என்று பார்ப்போமேயானால், பள்ளிக் கூடத்தில் போய்ப் பார்க்கிறபோது, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள் அப்போது 100-க்கு 30, 35, 40 என்றுதான் மார்க் வாங்குவார்கள். அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்ட பிறகு அடுத்த தலைமுறையில் 65 சதவீதம், 70 சதவீதம் மார்க் வாங்கினார்கள். அவர்களுக்குப் பிறகு வருகிற தலைமுறை 90, 91, 87, 88 சதவீதம் மார்க் வாங்குகிறார்கள். இட ஒதுக்கீடு உடனடியாக இல்லாவிட்டாலும் அடுத்தடுத்த தலைமுறைக்கு பலன் அளிக்கின்றன என்பதை நாம் புள்ளி விவரங்கள் மூலமாக நாம் பார்க்கலாம்.

இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி சேர்க்கைக் கணக்கை மட்டும் நாம் பார்த்தால், 1991-92-ல் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்த பாங்குகளை பார்த்தோமானால், இதில் மொத்தம் விண்ணப்பம் போட்டவர்கள் 10,415 பேர். மொத்தம் எடுக்கப்பட்டவர்கள் 957 பேர். இந்த 957 பேரில் பொதுப் பிரிவு—எல்லா பிரிவினருக்கும் பொதுவாக இருக்கிற பிரிவில் 297 பேர் வந்தார்கள். அதில் பிற்படுத்தப்பட்டவர்கள் 31 சதவீதம் பேர் வந்தவர்கள். 297 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் 20 சதவீதம் பேர், 192 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடு. ஆனால் 172 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். பழங்குடியினர் 1 சதவீதம், 9 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்று நான் சொல்கிறேன் என்றால், கட்-ஆப் மார்க் வாங்கியவர்



1991 செப்டம்பர் 30]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

களைப் பார்த்தால் இந்த பத்தாயிரத்து சில்லறை பேரையும் வைத்து அதிகமாக மார்க்குகளை வாங்கியவர்களைப் பார்த்தால், பாடங்களில் 200-க்கு எவ்வளவு வாங்குகிறார்கள் என்று பார்த்து, புகுமுக தேர்வில் 50 எண்களுக்கும் சேர்த்து 250-க்கு என்று கணக்குப் போடுகிறார்கள். இந்த 250-லே பொதுப் பிரிவினர் பட்டியலில் எந்த அளவில் வந்து நிற்கிறார்கள் என்று சொன்னால் 236.55. கிட்டத்தட்ட 237-க்கு மேல் வாங்கியவர்கள் மட்டும்தான் இந்த பொதுப் பிரிவில் வந்து அப்படி 297 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குக் கீழே வாங்கியவர்கள் பொது வகுப்பில் இடம்பெற முடியவில்லை. ஆக பிற்படுத்தப் பட்டவர்கள் பொது நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். இட ஒதுக்கீடு 60 ஆண்டுக் காலமாக செய்வதன் காரணமாக, தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருவதன் காரணமாக, எல்லா அரசியல் கட்சிகளாலும், வற்புறுத்தப்படுவதன் காரணமாக, பிற்பட்ட வகுப்பினர் கட்-ஆப் மார்க் எந்த அளவில் நிற்கிறார்கள் என்றால் 231.70.

பிற்பகல் 1-20

உயர்ந்த வகுப்பினர்—எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் பிரிவுக்கான மார்க் 236.55 இல் நிற்கிறது. பிற்பட்ட சமுதாயத்தைப் பொறுத்த வரையில் 231.70 என்ற அளவிற்கு இருக்கிறது. இப்படி 250-க்கு ஏறக்குறைய 232 மார்க்குகள் மேலே வாங்கிய பிற்பட்ட வகுப்பினருக்குத்தான் இடம். அந்த அளவிற்குத்தான் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையில். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 192 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் விண்ணப்பித்தது ஏராளமாக இருந்தாலும்கூட, அவர்களுடைய கட்-ஆப் மார்க் 222. 250-க்கு 237-க்கு மேலே வாங்கியவர்கள் ஓ.சி. 232-க்கு மேலே வாங்கியவர்கள்தான் பிற்பட்டோர். 232-க்கு மேலே வாங்கியவர்கள்தான் சேர முடியுமே தவிர அதற்குக் கீழே வாங்கிய பிற்பட்ட சமுதாயத்தினர் சேர முடியவில்லை மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 222 மார்க்குக்கு மேலே வாங்கியவர்கள்தான் சேரமுடியும். கிட்டத்தட்ட எல்லா வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தியதன் காரணமாக, ஒதுக்கீடு செய்து அவர்களைப் படிக்க வைத்ததன் காரணமாக கிட்டதட்ட உயர்ந்த வகுப்பினருக்குச் சமமாக. இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கு மேலாகக் கூட, பிற்பட்ட சமுதாயத்தினரும், தாழ்த்தப்

பட்ட வகுப்பினரும் வாங்கியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, கட்-ஆப் மார்க் 250-க்கு 207-உடன் நிற்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 172 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அந்த 172 பேரும் 207 மார்க்குக்கு மேலே வாங்கியவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே பழங்குடியினர் கூட சளைக்கவில்லை. பழங்குடியினருக்கு ஒரு சதவீதம் ஒதுக்க வேண்டும். அவர்களும் 209 மார்க்குக்கு மேலே வாங்கியிருக்கிறார்கள். 209 மார்க்குக் கீழே வாங்கிய யாரையும் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியிலே சேர்க்கவேயில்லை. காரணம் 250-க்கு 209-ஓடு நின்றுவிடுகிறது. அதற்குள்ளாகவே உயர்ந்த வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் எல்லோரும் அடங்கிவிடுகிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்த இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக ஆக்க வேண்டுமென்று அகில இந்தியாவிலே நாம் சொல்வதற்குக் காரணம் இதுதான். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒதுக்கியிருப்பதைவிட சில மாநிலங்களில் குறைவாகவும், ஏற்றமாகவும் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எஸ்.ஸி., எஸ்.டி.க்கு கூட 207 கட்-ஆப் மார்க் வருகிறது என்று சொன்னார்கள். 207 கட்-ஆப் மார்க் வாங்கியவர்களைக்கூட சில தனியார் கல்லூரிகளுக்கு அனுப்புகிறோம். அப்படி தனியாருக்கு அனுப்பியதிலே, இன்றைக்கு ஒரு பெண் மாரியம்மாள் என்ற பெண், தகப்பன் இல்லாத விதவையின் மகள். அவருக்கு கோயம்புத்தூரில், பி.எஸ்.ஜி. கல்லூரி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே சென்றால் ரூ. 22,000 கொண்டு வந்து கட்டினால்தான் உன்னை ஏற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். அவரால் எப்படி ரூ. 22,000 கட்டிச் சேர முடியும்? ஆகவே அப்படிப்பட்ட நிலைமையில் உள்ள அந்த அருமைக் குழந்தைகளுக்கெல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் இதிலே வராது. மானியக் கோரிக்கையின் மீது பேசியிருக்க வேண்டும்.



பிற்பகல் 1-25

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு விரிவான விளக்கத்தை சொல்வார்கள் அரசாங்கத்தின் சார்பாக நாம் எடுத்துக் கொண்ட சுய-நிதிக் கல்லூரிகளில் உள்ள 50 சதவீதம் இடங்களுக்கு கட்-ஆப் மார்க் அடிப்படையிலே தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். மீதமுள்ள 50 சதவீதம் இடத்திற்கு, குறைந்த அளவு 60 மதிப்பெண்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, அதற்கு மேல் மார்க் உள்ளவர்களில் யார், யார் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களில் யார் யார் நன்கொடை அளிக்கிறார்களோ அவர்களுக்கு இடம் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இந்த கட்-ஆப் மார்க்குக்கு மேலே வருகிறவர்களுக்கு எல்லாம் நாம் இடம் ஒதுக்குகிறோம். யாரையும் நாம் 'டிஸ்கிரிமினேட்' பண்ணுவதேயில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பொறியியல் கல்லூரியில் பார்த்தாலும்கூட பொதுப் பிரிவில் 227 மார்க் வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்த வரையில் 220 மார்க் வருகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் 199 மார்க் வருகிறது. தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் 171 மார்க் வருகிறது. 3,035 பேர் பொதுப் பிரிவிற்கு தகுதியிருந்தும், 270 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் 7,720 பேர் தகுதியுடையவர்களாக வந்திருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 800 பேர்தான். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் ஆள் இல்லை என்று சொல்ல முடியாது. 2,302 பேர் தகுதி உடையவர்களாக வருகிறார்கள். அவர்களில் 392 பேருக்குத்தான் இடம் கிடைத்தது. இதிலே தாழ்த்தப்பட்டவர்களும் சளைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் சொல்லுகிறபோது கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றவைகளில் இடம் தரவில்லை என்றார். அது பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னே. இப்போது எந்த வேலைக்கு எடுத்தாலும், எந்தக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்குகிற இடங்களிலே ஆட்கள் இல்லாமல் இல்லை. இந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் மட்டும் தகுதி படைத்தவர்கள் 2176 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்தாலும்கூட இந்த 18 சதவீதப்படி தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள் 327 பேர்தான். ஆக 327 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் போதுமான அளவுக்கு

53/340—18

மதிப்பெண்கள் வாங்காததன் காரணத்தால் அந்த இடத்தைப் பெற முடியாமல் போய் இருக்கிறார்கள். ஏன் இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்றால், இந்த நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகவும், மத்திய அரசைப் பொறுத்தவரையில் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இந்தத் தீர்மானத்தை நாம் வற்புறுத்துகிறோம். எல்லா மாநிலங்களிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க பல்வேறு வகைகளிலே எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாக இருந்து முன்மாதிரியாக இருந்து பல பணிகளை ஆற்றி அதிலே வெற்றி கண்டு வருகிற தமிழகம் இந்த வகையிலும் முன்னணியிலே இருந்து, இங்கே நமக்கு மட்டும் 50 சதவீதம் என்று ஒதுக்காமல், மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஒதுக்கீடு செய்கின்றவகையிலும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் என்று ஒதுக்கினால்தான் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம், மற்றவைகள் எல்லாம் உரிய அந்தஸ்தையும், உரிய நிலைமையையும் பெற்று அவர்கள் சிறப்பாக வளர முடியும் என்ற காரணத்தாலேதான் இது மிக மிக வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகவேதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதன் மூலம் இந்த அரசினுடைய நோக்கத்தை நாடு புரிந்து கொள்ள வேண்டும்; மத்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பது மட்டுமல்லாமல் தமிழகத்திலே இருக்கிற அத்தனை பேரும் வேறுபல மாநிலங்களைப்போல இல்லாமல், வேறு பல வட மாநிலங்களிலே இருக்கின்ற மாச்சரியம், குழப்பம் மற்றவைகள் போல் இல்லாமல் ஒருமித்த உணர்வோடுதான் தமிழக மக்கள் இருக்கிறார்கள்; சமூக நீதி வழங்க வேண்டும் என்ற தன்மையிலேதான் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டவும், வற்புறுத்தவும் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதை எல்லோரும் ஆதரித்துப் பேசி இருப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி உள்ளத்தால் இதை வரவேற்காவிட்டாலும், அவர் கட்சியினுடைய கட்டுப்பாடு, கட்சியினுடைய கட்டுப்பாடு என்று எடுத்துச் சொன்னார். ஆக அப்படி ஒரு தீர்மானத்தை வடக்கே இருப்பவர்கள் நிறைவேற்றி விட்டதன் காரணமாக இங்கே தம்புசாமி கட்டுப்பட வேண்டிய அவசியத்திலே ஆளாகி இருக்கிறாரே தவிர, அவருடைய உள்ளம் அதை மறுக்



கிறது என்று நான் சொல்வதற்கு இல்லை. எல்லோருடைய ஒருமித்த ஆதரவினுடைய தன்மையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் மூலம் இந்த தமிழகம் ஏற்றம் பெறும்; தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு வேலை வாய்ப்புக்கோ அல்லது கல்வி நிலையங்களுக்கோ விண்ணப்பிக்கிறவர்களும் நியாயம் பெற முடியும்; சமூக நீதி நிலைநாட்டப்படும். எந்தக் கனவை சர். பி. டி. தியாகராய செட்டியார் அவர்களும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பெருந்தலைவர் காமராசர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் எண்ணினார்களோ அந்தக் கனவை முழுதுர நிறைவேற்றுகின்ற வகையிலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டியது இந்த அவையினுடைய கடமை என்று கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

* **திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்ற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒரு முக்கியமான கட்டத்திலே இந்தத் தீர்மானம் நம்முடைய அவை முன்னாலே கொண்டுவரப்பட்டு இருக்கிறது. சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை ஆதரித்தும் எதிர்த்தும் நாடு முழுவதும் இன்றைய தினம் விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே வன்முறைக் கலவரங்கள், உயிருக்கும் உடைமைக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு வகுப்புகளுக்கு இடையே மோதலும் பதட்டமும் உருவாகி இருக்கிறது. வட மாநிலங்களில்தான் இத்தகைய போராட்டங்கள் வேகமாக வெடித்து இருக்கிறது. நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் குலைக்கக்கூடிய வகையில் உருவெடுத்து உள்ள கலவரங்களுக்கு முடிவு கட்ட வேண்டிய கட்டமாக இந்தக் கட்டம் இருக்கிறது. சமூக நீதியை நிலை நாட்டுவதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய நல்ல நோக்கத்துடன் மத்திய அரசை

கேட்டுக்கொள்ளும் வகையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளின் மீதான இந்த மாமன்றத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்ற இருக்கிறது. இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் பலரும் சுட்டிக்காட்டியதைப் போல, முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் சுட்டிக்காட்டியதைப் போல தமிழகத்தில் இருக்கும் நிலை பிற மாநிலங்களில் இல்லை. தமிழகம் இதில் முன்னோடி மாநிலமாக இருக்கிறது. அதைத்தான் முதலமைச்சருடைய தீர்மானம் கோடிட்டுக் காட்டுகிறது. இத்தகைய நிலைக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. மேற்கு வங்காளம், ஒரிசா, பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்கள் '7 சிஸ்டர்ஸ்' 'ஏழு சகோதரிகள்' போன்ற அந்த மாநிலங்களிலே சாதி அடிப்படையிலான கணக்கு எடுப்பு எடுக்கப்படவில்லை.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** ஆனால் தமிழகத்தில் ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திலேயே ஜாதி அடிப்படையில் அரசு நியமனங்கள் வழங்கும் நிலை உருவாக்கப்பட்டது. கம்யூனல் ஜி.ஓ. உருவான களமே தமிழகமாக இருக்கிறது. இங்கே பேசிய பலரும் எந்த ஆண்டில் முதல் முதலாக ஜாதி அடிப்படையில் வேலைகளுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதைச் சொன்னார்கள். குறிப்பாக குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். நானும் கொஞ்சம் தேடிப் பார்த்தேன். 27 தானா, 91-ஆ, 1904-ஆ என்று தேடிப் பார்த்தேன். எனக்கு கிடைத்திருக்கிற தகவல்படி முதல் முதலாக சென்னை இராஜதானி-வெள்ளைக்கார கவர்னருடைய ஆளுகைக்கு உட்பட்ட அந்த காலத்தைய இராஜதானி—1854-ல் சென்னை வருவாய் வாரிய நிலையாணை எண் 128(2) மாநிலத்தில் உள்ள மாவட்ட ஆட்சியாளர்களுக்கு கீழுள்ள அனைத்து பதவிகளும் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மக்கள் தொகை அடிப்படையில் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறது.



அதிலே கடைசி வாக்கியமாக குறிப்பிட்ட செல்வாக்குள்ள ஜாதிகளுடைய குடும்பங்களுக்கு கொடுக்கப்படக் கூடாது என்று இருக்கிறது. அதற்கு பின்னாலே இங்கே டபிள்யூ. ஆர். கார்னீசைப் பற்றிச் சொன்னார்கள். 1871-ல் தலைமை மக்கள் தொகை கண்காணிப்பாளராக இந்த மாநிலத்தில் அவர் பணியாற்றி இருக்கிறார். அன்றைய ஜாதிவாரி மக்கள் தொகையையும், ஜாதி வாரியான அரசு அலுவலர்கள் எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்து அரசுக்கு ஆலோசனை ஒன்றை வழங்கினார். அரசு வேலைகளில் பிராமணர்களின் எண்ணிக்கையை குறைத்து பிராமணர் அல்லாத இந்துக்கள், முகமதியர்களை அமர்த்த ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று 1871-ல் அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

1881-ல் மீண்டும் ஒரு அறிக்கையை அவர் கொடுத்திருக்கிறார். மக்கள் தொகை அறிக்கையின்படி மொத்த மக்கள் தொகையில் 3.6 சதவீதம் பிராமணர்கள், 42.2 சதவீதம் வேலைகளில் 10 ரூபாய் சம்பளத்திற்கு மேல்—அன்றைய சம்பளம் 10 ரூபாய்—பெறுபவர்களாக இருந்தனர் என்று கணக்கு கொடுக்கிறார். அதே 85-ல் நிதியுதவி மூலமாக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு என்று நடத்தப்படும் பள்ளிகளுக்கு அரசு அப்போதே மானியம் கொடுத்திருக்கிறது 1885-ல். 1910-ல் பிராமணர் அல்லாதார் இயக்கம் என்று ஒன்று சட்டப் பேரவையில்—சட்டப்பேரவை என்றால் கவுன்சில்—முகம்மதியர்களுக்கு இடம் ஒதுக்குவதைப்போல எங்களுக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று அந்தக் காலத்தில் கேட்டிருக்கிறார்கள்.

1919-ல் அப்போதைய ஆளுநர் மெஸ்டன் பிரபு என்பவர் 65 பேர்களுக்கு தொகுதிகளில் 24 தொகுதிகள் பிராமணர் அல்லாத இந்துக்களுக்கு என்று ஒதுக்கியதன் மூலமாக நீதிக்கட்சி பெரும்பான்மை பெறுகிறது. 1921-ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி புறக்கணித்தது. நீதிக்கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றது. சட்டமன்றத்தில் ஓ. தணிகாசலம் செட்டியார் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ரூபாய் 100-க்கு மேலான மாத ஊதியமுடைய 66 சதவீத அரசு பதவிகளுக்கும், ரூ. 100-க்கு கீழுள்ள மாத ஊதியமுடைய 75 சதவீதம் அரசு பதவிகளுக்கும், முஸ்லீம்களையும் சேர்த்து

பிராமணர் அல்லாதோர் அந்தப் பதவிகளைப் பெறும்வகையில் அரசுப் பதவிகளை ஒதுக்கீடு செய்து அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்படுகிறது. 16—9—1921-ல் பலரும் சொல்கிற ஜாதிய ஆணை—இது முதல் ஆணை என்று சொல்கிறார்கள். முதல் ஆணை இல்லை. இரண்டாவது ஆணை. அரசு முதல் ஜாதிய ஆணை 1854—128(2)-ஐ பின்பற்றி வருவாய்த் துறையில் மட்டும்தான் 1854. 1921-ல் எல்லா அரசுப் பதவிகளிலும் நியமனம் செய்வதற்கான கோட்பாடுகள் மற்ற எல்லா அரசுத் துறைப் பதவிகளிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதோடு. அனைத்து அரசுத் துறை அதிகாரிகளும், எத்தனை பிராமணர் அல்லாதவர்களை நியமித்தார்கள் என்பதை ஆறு மாதத்திற்கு ஒரு முறை அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறார்கள். 1921 டிசம்பர் 31 முடிய அரையாண்டு அறிக்கையின்படி அரசு பதவிகளில் இனவாரியாக இருந்தவர்கள் விவரம் வருமாறு: பிராமணர்கள் 22 சதவீதம், பிராமணர் அல்லாதவர்கள் 48 சதவீதம், இந்திய கிறிஸ்துவர்கள் 10 சதவீதம், முகம்மதியர்கள் 15 சதவீதம், ஐரோப்பியர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் 2 சதவீதம், மற்றவர்கள் 3 சதவீதம் என்ற அந்த கணக்கு கூறுகிறது.

(பிற்பகல் 1-35)

1922 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ல் இரண்டாவது ஜாதிய ஆணை எண் 658 வெளியானது. வருவாய் வாரிய நிலையாணை எண் 128 (2) அரசு இடஒதுக்கீடு கோட்பாடு அரசு நியமனங்களுக்கு மட்டுமல்லாமல், பதவி உயர்வுக்கும் பொருந்தும் என்று அந்த ஆணையில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1928-ல் டாக்டர் சுப்பராயன் அவர்கள் அமைச்சரவை பொறுப்பெற்றது. 'அது இன்டிபென்டன்ட் கவர்ன்மென்ட். நீதிக்கட்சியின் சார்பிலே வந்த அரசாங்கம் அல்ல. அந்த அரசாங்கத்தை காங்கிரஸ் கட்சியும் அன்றைய தினம் ஆதரித்தது. அந்த அமைச்சரவையிலே, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், சேதுரத்தினம் ஐயரும் அமைச்சராக இருந்தார். அவரும், அன்றைய தினம் ஜாதி ஆணையை ஆதரித்து இருக்கிறார். ஆனால், அந்த தீர்மானத்தை அன்றைய தினம் கொண்டு வந்தது முத்தையா. எஸ். முத்தையா அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அரசு ஒரு ஆணையை வெளியிடுகிறது. அரசுப் பதவிகளில் ஏற்படும் ஒவ்வொரு 12



காலியிடங்களுக்கும்—ஏற்கனவே அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுதான்—5 பதவிகள் பிராமணரல்லாத இந்துக்களுக்கும், 2 பதவிகள் முஸ்லீம்களுக்கும், 2 பதவிகள் இந்தியக் கிருஸ்துவர்களுக்கும், 2 பதவிகள் பிராமணர்களுக்கும், 1 பதவி நலிந்த பிரிவினருக்கும் என்று ஒதுக்கப்பட்டது.

1933-ல், இப்போது பேசுகிறோம் அல்லவா, பொருளாதார அடிப்படை—அன்றே ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டு, இந்த ஒதுக்கீடுகளாலே திருப்தி அடையாத பிற்படுத்தப்பட்டோர் ஒரு சங்கம் அமைத்து, அவர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். 'பிராமணரல்லாதோரில், பொருளாதார ரீதியாக உயர்நிலையில் உள்ளோர், பொருளாதார ரீதியாக கீழே உள்ளவர்களின் ஒதுக்கீட்டை எல்லாம் பங்கு போடுவதாக' அன்றைய தினம் குறை கூறி தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். பிறகுதான், 1947-லே அந்த ஜாதி ஆணை வருகிறது. மூன்றாவது ஜாதி ஆணை, அரசு பதவிகளிலே காலி இடங்கள் ஒவ்வொரு 14-க்கும், பிராமணரல்லாதோருக்கு 6, பிராமணர்கள் 2, பிற்படுத்தப்பட்டோர் 2, அரிசனங்கள் 2, கிருத்துவர்கள் 1, முகமதியர்கள் 1 ஆக 14 என்ற ஆணை, 1947-லே பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

நம்முடைய சென்னை மாநகராட்சியினுடைய மேயர் ஆண்டுதோறும் யாராக இருக்கவேண்டும் என்பது கூட கிட்டத்தட்ட இந்த அடிப்படையிலே வந்ததுதான். ஒரு ஆண்டுக்கு பிராமணரல்லாத இந்து என்று சொன்னால், அடுத்த ஆண்டு, பிராமணர், அதற்கு அடுத்த ஆண்டு மீண்டும் பிராமணரல்லாத இந்து, அதற்கு அடுத்த ஆண்டு கிருத்துவர் என்று 8 ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஒவ்வொருவரும் வரவேண்டும் என்று இருக்கிறதே, அதிலே 50 சதவீதம் பிராமணரல்லாத இந்துக்களுக்கு என்று வருகிறது அல்லவா, அந்த நியமனங்கள்கூட இந்த அடிப்படையிலே வந்ததுதான்.

1950-ல் அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொண்ட பின் செண்பகம் துரைராஜன்—அந்த வழக்கைப்பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்—அவர்கள், இங்கே ஹைகோர்ட்டிலே ஒரு ரிட் பெட்டிஷனை தாக்கல் செய்தார்கள். பிறகு சுப்ரீம்கோர்ட்டுக்கு அந்த வழக்கு சென்றது. அந்த வழக்கிலே, தனக்கு மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லை, மருத்துவக் கல்லூரியிலே என்னைவிடக் குறைந்த மதிப்பெண்கள்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [1991 செப்டம்பர் 30

பெற்றவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். எனக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள, 15, 16-வது ஆர்ட்டிகள்களிலே குறிப்பிடப் பட்டு இருக்கிற, உரிமையை இது மீறுவதாக இருக்கிறது என்று சொல்லி, வழக்கைத் தொடுக்கிறார். அந்த வழக்கிலே செண்பகம் துரைராஜன் அவர்கள் வெற்றி பெறுகிறார்கள். **Shenbagam Durairajan Vs State of Madras** என்று சொல்வார்கள். அந்த வழக்கிலே அவர்களுக்கு வெற்றி கிடைக்கிறது. அதற்கு பின்னாலே, இதே சட்டப்பேரவையில் அது விவாதமாக வந்தது. பெருத்த விவாதமாக வந்தபோது, அன்றைய தினம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் சட்டமன்றத்திலே வாக்குறுதி கொடுக்கிறார்கள். நிச்சயமாக, நான் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்கிறேன்—அது வரைக்கும் அரசியல் சட்டம் திருத்தப்படவில்லை—1951 ஆம் ஆண்டு சொல்கிறார், அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசிடம் வாதாடி, பேசி, அரசியல் சட்டத்தைத் திருத்துவோம், நிச்சயமாக இந்த ஜாதி ஆணையை செல்லுபடியாகச் செய்வோம் என்று பக்தவச்சலம் அவர்கள் அன்றைய தினம் இந்தப் பேரவையிலே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே அன்றைய தினம் காங்கிரஸ் க்ட்சியினுடைய தலைவராக இருந்த காமராஜ் அவர்கள் ஜவஹர்லால் நேரு அவர்களிடத்திலே பேசி, முதல் அரசியல் சட்டத் திருத்தத்தை, 1951 ஆம் ஆண்டு, கொண்டுவந்தார்கள்—அதுதான் பலரும் இங்கே குறிப்பிட்ட ஆர்ட்டிகிள் 15 கிளாஸ் 4, அந்த ஆண்டு கொண்டுவரப் பட்ட திருத்தம்தான் இந்தத் திருத்தம். அப்போது பலரும் இதைக் குறை கூறினார்கள். அன்றேகூட காங்கிரஸ்காரர்கள் என்ன செய்துவிட்டார்கள், காங்கிரஸ்காரர்களா இதைக் கொண்டு வந்தார்கள்? என்று எல்லாம் பேசினார்கள். ஆனால் அண்ணா அவர்கள் வெளிப்படையாகப் பேசினார்கள். 'திராவிட நாட்டிலே' எழுதியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்தார்கள் என்பதற்காக நான் எதிர்க்கமாட்டேன், நல்ல காரியத்தை யார் செய்தாலும் நான் வரவேற்பேன். இந்த முயற்சி நல்ல முயற்சி, இது நீண்ட தொலைவுக்கு நம்மை அழைத்துச் செல்லக் கூடிய முயற்சி என்று சொல்லி, அண்ணா அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். "மாற்றான் தோட்டத்து மலரேயானாலும் மணம் உள்ள மலரே" என்று சொல்லி, அன்றைய தினம் இந்தச் சட்டத் திருத்தத்தை அண்ணா அவர்கள் வரவேற்று எழுதியிருக்கிறார்கள்.



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

1953-ல் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்றதற்குப் பின்னாலேதான், முதன் முறையாக 25 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, கல்வியிலும், வேலைகளிலும், இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதன் முதலாக உத்தரவிட்டது, காமராஜ் அவர்கள், முதலமைச்சராக பதவியேற்றதற்குப் பின்னால்தான், வெளியிடப் பட்டது. அதே ஆண்டிலேதான் காகா சாகிப் கலேல்கருடைய பர்ஸ்ட் பேக்வர்ட் கிளாஸ் கமிஷனும் வருகிறது. 1969-லே சட்டநாதனுடைய தலைமையிலே பிற்படுத்தப்பட்டோர் நலக் கமிஷன் அமைக்கப்படுகிறது. அந்தக் கமிஷனுடைய சிபாரிசினுடைய அடிப்படையில், 1971-ல் காமராஜ் அவர்கள் உத்தரவிட்ட 25 சதவீதம் அமலில் இருந்து வந்தது.

பிறகு, 1971 ஆம் ஆண்டினுடைய மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம், அரிசன மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம், பொதுப் பிரிவினருக்கு 51 சதவீதம் என்று அறிவிக்கப்படுகிறது. பிறகு, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில், அரசுப் பதவிகளில், இட ஒதுக்கீடு பொருளாதார அடிப்படையில் 9 ஆயிரம் ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு என்று, 1979 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்தார்கள். 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் அவர் புதியதாக ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். பிற்பட்டோருக்கு 50 சதவீதம், ஹரிஜன மலைவாழ் மக்களுக்கு 18 சதவீதம், பொதுப் பிரிவினருக்கு 32 சதவீதம் என்று 1980-லே அறிவித்திருக்கிறார்.

(பிற்பகல் 1-40)

1989-லே இங்கே அதை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பிற்பட்டவர்களுக்கு 30 சதவீதம், மிகவும் பிற்பட்டவர்களுக்கும், சீர் மரபினருக்கும் சேர்த்து 20 சதவீதம், தாழ்த்தப்பட்ட மலை ஜாதியினருக்கு 18 சதவீதம், பொதுப் பிரிவினருக்கு 32 சதவீதம் என்று இங்கே அன்றைய தினம் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. இங்கே இந்த இட ஒதுக்கீட்டிற்கு எதிராக கிளர்ச்சிகள் நடைபெறவில்லை. அத்தனை பேரும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே இங்கே இந்தப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்ததில்லை. ஆனால் மற்ற பகுதிகளிலே இது பிரச்சினையாக உருவெடுத்ததற்குக் காரணம்,

[1991 செப்டம்பர் 30

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

முதலாவது 'பேக்வர்டு கிளாஸ் கமிஷன்' அதாவது பிற்பட்டோர் நலக் குழு 1953-லே காகா சாகிப் கலேல்கர் கமிஷன் அமைக்கப்படுகிறது. 1955-லே அவர் தன்னுடைய அறிக்கையிலே எல்லாம் கொடுக்கிறார். இந்த அறிக்கையில் இருந்த விஷயங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலையில் இங்கே படித்துக் காட்டினார். அவருக்கும் இதிலே நம்பிக்கையில்லை. 4 பேர் டிசென்டிங் நோட் கொடுத்தார்கள். எனவே அதிலே பெரிய சாதனைகள் எதுவும் நடைபெறவில்லை.

ஆனால் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே மொரார்ஜி தேசாய் ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்தபோது, மொரார்ஜி தேசாய், பிந்தேஷ்வரி பிரசாத் மண்டல் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைக்கிறார்கள். மொரார்ஜி தேசாய் உயர் ஜாதியைச் சேர்ந்தவர், பிந்தேஷ்வரி பிரசாத் மண்டல் பீஹாரைச் சேர்ந்தவர். ஒரு ஜமீன்தார் குடும்பத்தில் ராஜாவாகப் பிறந்தவர். ஜமீன்தார் குடும்பத்திலே மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தாலும், ராஜா குடும்பத்திலே பிறந்தவர். அவர் முன்பு 1952 லேயிருந்து 1957 வரை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே போட்டியிட்டு, வெற்றி பெற்று, சட்டப் பேரவை உறுப்பினராக பீஹாரிலே இருந்திருக்கிறார். ஸ்ரீகிருஷ்ண சின்ஹாவிற்கு நான் மிகவும் வேண்டியவனாக இருந்தேன் என்று அவர் சொல்கிறார். அதற்குப் பின்னாலே 1957-லே தோற்றாலும் 1962-லே மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வெற்றி பெற்று அவர் அங்கே உறுப்பினராக இருந்திருக்கிறார். 1967-லே எஸ். எஸ். பி-யின் சார்பில் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலேயிருந்து அவருக்கு பிற்பட்டோரிடத்திலே அக்கறை, வெளியே வருகிறது. 1967-68-க்குப் பின்னாலே எஸ். எஸ். பி-யிடத்திலே மாறுபட்ட கருத்து கொள்கிறார். அவர் 43 நாட்கள் பீஹார் மாநிலத்தினுடைய முதலமைச்சராகவும் இருந்திருக்கிறார். பிறகு 1971-லே தோற்றுப் போனார். 1977-லே ஜனதா கட்சி சார்பிலே பாராளுமன்றத்திற்குச் செல்கிறார். அப்போதுதான் அவருடைய தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டது. அதிலே பி. பி. மண்டல் தலைவர். ஆர். ஆர். போலே, திவான் மோஹன்லால், எல். ஆர். நாயக், நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த, மீனவ சமுதாயத்தைச் சார்ந்த கே. சுப்பிரமணியம் அவர்களும் அதிலே உறுப்பினராக இருந்தார்.



158380

1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே ஜனதா ஆட்சி போய்விட்டது. மீண்டும் அன்னை இந்திரா தலைமையில் ஆட்சி அமைந்தபோது, அந்த கமிஷனுடைய ஆயுள் இரண்டு முறை நீட்டிக்கப்பட்டது. எந்த வகையில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் மண்டல் குழுவின் பரிந்துரைகள் வெளியாவதற்கு உதவினார் என்பதை மண்டல் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். 31—12—1980 ஆம் நாள், அவர் அந்த அறிக்கையை அளித்தபோது அன்றைய ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்திலே 5-வது பத்தியில்—

'It may be mentioned that although this Commission was appointed by previous Janata Government, Shrimathi Indira Gandhi's Government not only gave two extensions but extended all support and co-operation in the discharge of our work. This clearly shows her devotion and commitment to the cause of the suppressed, depressed and the oppressed'

என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் மண்டல் அவர்கள் கலேல்கர் கமிஷனுடைய சில பகுதிகளை எடுத்து, தன்னுடைய கமிஷன் Report–லே சேர்த்து இருக்கிறார்.

In exercise of the powers conferred by Article 340 of the Constitution, the President appointed the First Backward Classes Commission on 29th January 1953 under the Chairmanship of Kaka Kalelkar. It submitted a report on 30th March 1955. It mentioned 2399 castes as backward castes. Out of this, 837 are most backward.

அவரது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சொல்கிறார். எப்படியெல்லாம் சிரமப்பட வேண்டி இருந்தது. எதை வைத்துக் கொண்டு நிர்ணயம் செய்தோம் என்பதையும் அவர் கீழே குறிப்பிடுகிறார் :—

'It cannot be denied that the caste system is the greatest hindrance in the way of our progress towards an egalitarian society and the recognition of a specific caste as backward may serve to maintain and even perpetuate the existing distinctions on the basis of caste.'

என்று சொல்கிறார்.

அத்தோடு நில்லாமல் மேலும் அவர் சொல்கிறார் 14-8-1961-ல் 'the Ministry of Home Affairs addressed all the State Governments stating while State Governments have the discretion to choose their own criteria for defining backwardness, in the view of the Government of India it would be better to apply eeconomic tests than to go by caste'

[1991 செப்டம்பர் 30

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மண்டல் அறிக்கையில் திரும்பக் கூறுகிறார்கள்.

'Identification of caste on the basis of the lists prepared by the Ministry of Education for the grant of scholarships, etc., in 1949.' என்று அதிலேதான் வைத்திருக்கிறது.

பிற்பகல் 1–45

ஒரு சர்வே கிடையாது என்று கூறிவிட்டு அவர்களுக்கு தேவையான கணக்குகள் எப்படி கிடைத்தன என்பதையும் சொல்லுகிறார்.

'Figures of caste-wise population beyond 1931 are not available. But assuming that the inter se rate of growth of population of various castes, communities and religious, groups over the last half of the century has remained the same. It is possible to work out the percentage that all these groups constitute the total population of the country. Page 56 volume 1—Working on the above basis, the Commission culled out caste, community-wise pcpulation figures from the census records of 1931 and graded them into broad clusters and religious groups' என்று சொல்லுகிறார். இங்கே பலரும் பேசியதைவிட எதிர் வரிசையிலே இருந்து பேசுகிற நேரத்தில், அவர்கள் பரிந்துரைகளின் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மற்றவர்கள் குறிப்பிட்டதைக் காட்டிலும் எனக்கு முன்னாலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு தம்புசாமி அவர்கள் தெளிவாகச் சொன்னார். ஜாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வதால் மட்டுமே நாட்டினுடைய பிரச்சினைகள் தீர்ந்து விடாது என்று தெளிவாகவே வலியுறுத்துகிறார். நாட்டிலே கொண்டு வரக்கூடிய சட்டங்கள் வேலை இல்லாமல் கிராமப்புறங்களிலே இருக்கிற மக்களுக்குத் தரவேண்டிய வேலை வாய்ப்புகள் தருவதற்கான சட்டங்கள் திட்டங்கள் பற்றியெல்லாம் அவர் தெளிவாகக் குறிப்பிட்டு பரிந்துரைகளும் செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை ஏற்று வறுமை ஒழிப்பு, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது, கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவது போன்ற பல்வேறு திட்டங்களுக்குப் மண்டல் குழுவின் பரிந்துரையை ஒட்டித்தான் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்—என்.ஆர்.இ.பி. (National Rural Employment Programme) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் I.R.D.P. (Integrated Rural Development Programme)



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஆர்.எல்.இ.ஜி.பி. (R. L. E. G. P.) போன்ற திட்டங்களெல்லாம் அன்னை இந்திரா காந்தி காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திரா காந்தி மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு என்ன செய்தார்கள்? இரண்டுமுறை எக்ஸ்டென்ஷன் கொடுத்ததைத் தவிர என்ன செய்திருக்கிறார்கள் என்று நண்பர்கள் கேட்டார்கள் அல்லவா, அதற்குப்பதில் இதிலே இருக்கிறது. அவர் எதிர்க்கட்சிக்காரர் என்ற காரணத்திற்காக முழுக்கச் சொல்லவில்லை. சொல்லாவிட்டாலும் கூட கிட்டத்தட்ட அதற்குப் பக்கத்திலே வந்தார். ஆக இவைகள் எல்லாம் மண்டல் கமிஷனின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு அளிப்பதில் பல்வேறு அம்சங்களையும் பரிசீலிக்கப்பட்ட நிலையில் ஒரு இணக்கமான முடிவை எடுத்து அமல் படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. அன்றைக்கு நாட்டிலே தனக்குள் பல்வேறு முரண்பாடுகளை கொண்ட தேசிய முன்னணி சார்பில் வி. பி. சிங் பிரதமர் ஆனார். அவர் தன்னுடைய பிரதமர் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகத் திடீரென மண்டல் கமிஷன் பரிந்துரைகள் என்னும் ஆயுதத்தை தன்னுடைய கையிலே எடுத்துக் கொண்டார். தேசிய முன்னணியினுடைய மற்ற தலைவர்களையோ, அமைச்சர்களையோ, பாராளுமன்றத்தையோ கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக அந்த முடிவை வி. பி. சிங் அவர்கள் அறிவித்தார்கள். இலட்சக் கணக்கான விவசாயிகளை திரட்டி தன்னுடைய தலைமைக்கு உலை வைக்க முயன்றிட்ட தேவிலாலை எதிர்கொள்வதற்காக வி.பி. சிங் இந்த மண்டல் கமிஷன் ஆயுதத்தை எடுத்தார். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏற்கெனவே அமைச்சரும் இதைச் சொன்னார். அப்பொழுதே நீங்கள் பதில் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது எதற்கு, சரி சொல்லுங்கள். டாக்டர் தே. குமாரதாஸ்.

[1991 செப்டம்பர் 30

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி. பி. சிங், அவர்கள் துணிந்து இந்த தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக முன்னாலே வந்தாரே அல்லாமல் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அல்ல. ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நிலை இருந்தால் இதையும் நாங்கள் கிடப்பிலே போட்டுவிட்டு தக்க வைத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அப்படி அவர் செய்யாமல் துணிந்து செய்தார். அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக அதற்கு நீங்கள் தவறான கருத்தைச் சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே குமார தாஸ்-க்கு சொன்னது. இதிலே மாறுபட்ட கருத்துக்கள் இங்கே பேசப்படுகிறது என்கிற அளவிற்கு வெளியே போகாத அளவுக்கு நாம் விவாதத்தை நடத்துவது நல்லது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** சில வாதங்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன். குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிசாமி யிலிருந்து தொடங்கி குமாரதாஸிலிருந்து அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் வரை குறிப் பாக இடித்துக் காட்டியது எங்களைத்தான்.

பிற்பகல் 1-50

எனவே, எங்களுடைய நிலை என்ன என்பதை நான் தெரிவித் தாக வேண்டும். நான் நிச்சயமாக யாருடைய உணர்வுகளையும் புண்படுத்துவதற்காகப் பேச மாட்டேன். அந்தப் பழக்கம் எனக்கு கிடையாது. என்னுடைய வாதத்திற்கு வலு சேர்க்க வேண்டும் என்பதற்காகச் செய்திகளை நிச்சயமாகத் திரித்தும் சொல்ல மாட்டேன். நீங்கள் உறுதியாக நம்பலாம். இப்பொழுது அவர் கேட்ட வாதத்திற்கு ஒரே ஒரு பதிலை நான் சொல்கிறேன்.



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

எல். கே. அத்வானி இதை குற்றச்சாட்டாக வைத்தார். ஆகஸ்ட்
மாதம் 7-ந் தேதி வி. பி. சிங் அறிவிப்பு கொடுத்தார்கள். எல்லோ
ருக்கும் நினைவு இருக்கும். 6-ந் தேதி மாலையில் ஒரு விருந்திலே
சந்தித்தபோது தன்னுடைய காதுக்குள்ளே கடைசி நேரத்திலே
இப்படி ஒரு அறிவிப்பை நான் செய்யப் போகிறேன் என்று வி.பி.
சிங் சொன்னதாகவும், திடீரென்று சொல்கிறீர்களே, இதிலே
என்ன நியாயம் இருக்கிறது, சரியாக இருக்காது, பலரையும்
கலந்து ஆலோசித்து விட்டுச் செய்ய வேண்டும். இங்கே அச்சம்
இருக்கிறது. நீங்கள் பதவி ஏற்றவுடனேகூட வட மாநிலங்களிலே
சில இடங்களிலே கிளர்ச்சிகள் வந்தன. அன்றையதினம், ரிசர்வே
ஷன் என்று நான் சொல்லவில்லை, காங்கிரஸ் கட்சி பதவியை விட்டு
வெளியே போகின்ற நேரத்தில் எதையோ ஒரு ரிசர்வேஷன்
இன்னும் 20 ஆண்டுகளுக்கும் இருக்கும் என்று அறிவித்தார்கள்
என்பதை தவறாகப் புரிந்துகொண்ட மக்கள் போராட்டத்தில் ஈடு
பட்டிருக்கிறார்கள் என்று சொன்ன நீங்கள் திடீரென்று நாளைக்கு
மண்டல் கமிஷன் என்று சொன்னால் பிரச்சினை வரும், எனவே
பேசுவோம் என்று நான் சொன்னேன், அவர் கேட்கவில்லை. பிறகு
தொலைபேசியிலும், அதற்கு அடுத்த நாள் இது முடிந்ததற்குப்
பின்னாலே கேட்டேன். வேறு வழியில்லை, 9-ந் தேதி டெல்லி
யிலே என்ன நடைபெறப்போகிறது என்பது உங்களுக்குத் தெரி
யாதா என்று கேட்டார். டெல்லியிலே என்ன நடைபெறப்
போகிறது 9-ந் தேதி? தேவிலாலுடைய பேரணி. தேவிலாலை
சந்திக்க வேண்டும். நம்பர் டூ இன் கமாண்ட். நம்பர் ஒன் அண்டு
நம்பர்டூ-க்கு சண்டை என்றால் அதற்குப் பரிகாரம் என்ன
என்றால் மண்டல் கமிஷன். அதோடுமட்டுமல்ல. வட நாட்டில்
என்ன நடைபெற்றது? செல்ஃப் இமொலேஷன். ஆன்ட்டி
மண்டல் எடுத்துக்கொண்டால் டெத் டோல் மட்டும் 65 பேர்.
அதுமட்டுமல்லாமல் செல்ஃப் இமொலேஷன்—தீக்குளிப்பு
முயற்சிகள் மட்டும் 230 பேர். 230 பேர்கள் தீக்குளிப்பு முயற்சி
களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரே நாளிலே வந்த செய்தியைப்
படிக்கிறேன்.

**"Rajiv Goswami, a Delhi University student set himself on fire. In Kurukshetra, Sushil Kumar, a high school student killed himself by consuming poison. In his suicide note he has said " For all this you are responsible V.P.—you and you alone ".**

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோல பல சின்னஞ்சிறார்கள் என்னவென்றே புரிந்துகொள்ள முடியாதவர்கள் எல்லாம் அன்றையதினம் பலியாவதற்குக் காரணமாக இருந்தது அவருடைய அறிவிப்பு. அவர் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நாட்டிலே என்ன நடைபெறப் போகிறது என்பதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் செய்த அறிவிப்பு. இங்கே யாரும் இட ஒதுக்கீடுகளுக்கு எதிராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா டுடே பத்திரிகையில்கூட விளையாட்டிற்காக மண்ணெண்ணையை என் தலையிலே ஊற்றி என் மேலே தீக்கொளுத்திவிட்டார்கள் என்கிறவிதத்தில் ஒரு ஆர்ட்டிகிள் வந்ததை நீங்கள் மறந்துவிடமாட்டீர்கள். இப்படித்தான் சிறுவர்களைப் பிடித்து பிடித்து இவர்கள் மண்ணெண்ணையை ஊற்றி தீக்கொளுத்தினார்களே அல்லாமல் செல்ஃப் இமொலேஷன் என்று சொல்லி அங்கே யாருமே செய்யவில்லை என்பதை நான் இந்தச் சபையினுடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி ரமணி நல்லதம்பி**: தலைவர் அவர்களே, இதை ஒத்துக்கொள்ள முடியாது. எதையும் பேசிவிடுவதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பதில் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இதே போக்கிலே பேசலாம். ஆனால் வட நாட்டிலே என்ன நடைபெற்றது? பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன நமக்கெல்லாம் சொந்தமான செய்திகள் அந்தச் செய்திகள். யாரும் இல்லாததைச் சொல்லவில்லை. ஒரு சாவு அல்ல; இரண்டு சாவுகள் அல்ல. தினசரி டெல்லியிலே துவங்கி, சண்டிகரிலே பரவி பிறகு பிற மாநிலங்களுக்குப் பரவி, உத்திரப் பிரதேசத்திற்குப் போய் பீஹாருக்குப் போய் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் மறந்துவிட முடியாத சம்பவங்கள். இங்கே நிச்சயமாக இட ஒதுக்கீட்டுக்கு எதிராக நாங்கள் இல்லை. இட ஒதுக்கீடு வேண்டும். சமுதாய நீதி கிடைக்க வேண்டும் என்பதிலே





[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நாங்கள் தெளிவாகவே இருக்கிறோம். என்றாலும், அதிலே இருக்கின்ற கசப்பு உணர்வுகளை, அதிலே இருக்கின்ற தவறான எண்ணங்களை எல்லாம் மாற்றியமைக்க வேண்டிய ஒரு கடமையும் இருக்கிறது என்பதை மறந்துபோய் வி. பி. சிங் எடுத்த நடவடிக்கையினாலே நாடே குழப்பத்திலே மூழ்கியது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. வன்முறைக் கலவரங்கள், சொத்துகள் நாசம், இளம்பிள்ளைகளின் பரிதாப மரணங்கள் போன்ற எண்ணற்ற இன்னல்களுக்கு நாட்டு மக்கள் ஆளாக்கப்பட்டார்கள். டெல்லியில் பயிலும் சின்னஞ்சிறு பள்ளி மாணவர்கள்கூட விஸ்வநாத் பிரதாப் சிங்கை என்னவென்று அழைத்தார்கள் தெரியுமா? விநாஸ பிரதாப் சிங். டெல்லியிலே கோஷம் போட்டார்களா இல்லையா? அவருடைய உத்திரவு உச்ச நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்பட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: தலைவர் அவர்களே, வி. பி. சிங் அந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்தியதனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதிலே தேவையில்லாத விவாதங்களை நீங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எதிர்க் கட்சித் தலைவருக்கும், உங்களுக்கும், நான் ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும் கேட்டுக்கொள்கிறேன், மொத்தமாகவும் கேட்டுக்கொள்கிறேன். இதிலே உங்களுடைய அரசியல் கருத்துக்களைக் கொண்டுவந்து திணிக்க வேண்டாம். திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்தின் மாபுக்குச் சொல்கிறேன். அகில இந்தியத் தலைவரை நாம் தனிப்பட்ட முறையிலே இந்த மாதிரி பேர் வைத்து—இன்றைக்கு வி. பி. சிங்கைச் சொன்னால் நாளைக்கு இன்னொரு தலைவரைச் சொல்வார்கள். அந்த மரபு வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். அது இருக்க வேண்டுமா? எதிர்க்கட்சித் தலைவரே அதை எடுத்துவிடுவதற்கு முன்மொழிவார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கோஷம் போட்டது, இவைகளைப் பற்றியெல்லாம் இன்னும் பேசிக்கொண்டே, போனால், விவாதம் வளர்ந்து கொண்டே போகும்.

[1991 செப்டம்பர் 30

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** தலைவர் அவர்களே, நான் சொல்லவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? நீங்கள் சொன்னீர்கள். ஒருவர் பாக்கியில்லாமல் சொன்னார்கள். இராஜீவ் காந்தி 3 மணி நேரம் பேசினார், 3½ மணி நேரம் பேசினார் என்று விஸ்வநாத் பிரதாப் சிங் வெளியிலே சொல்லிக்கொண்டிருக்கிற உண்மைக்குப் புறம்பான செய்தியை, உண்மையான செய்தியாக இங்கே சொன்னீர்கள். நான் வேண்டாம் என்று அப்போதே சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. 3 மணி நேரமும் பேசவில்லை; 3½ மணி நேரமும் பேசவில்லை. அவர் பேசியது எவ்வளவு நிமிடங்கள் என்று கணக்கு இருக்கிறது.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் இராஜீவ் பற்றி தனிப்பட்ட முறையில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அந்த வி.பி.சிங்-க்குக் கொடுத்த விளக்கம் இருக்கிறதே It is not in good taste நல்ல மரபு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஊர்வலத்தில் போட்ட கோஷத்தைப் பற்றி பேசுகிறார். அதன் மீது இவர் விளக்கம் சொல்லவில்லை. தயவுசெய்து. . . (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா தளம் வெளியே இராஜீவ் காந்தி பற்றி குறிப்பிட்ட கோஷங்களை படித்துச் சொன்னால் அனுமதிப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபைக் குறிப்பிலே இருப்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ் :** தனிப்பட்ட முறையில் இராஜீவ் காந்தியைப் பற்றி சொல்லவில்லை, அவரை எதிர்த்து கோஷம் போட்டிருக்கிறார்கள். . . .



1991 செப்டம்பர் 30]

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தங்கள் அனுமதியோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அளித்த பேட்டியினுடைய சிலபகுதிகளை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். உங்கள் அனுமதியோடு, ஒரு சில பகுதிகளை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன். இந்த நிலைமைகள் இருந்தன என்பதை நான் அப்போதே சொல்லியிருக்கிறேன்.

"....First of all the identification of B.Cs. must be complete. The reason why there is no opposition to this in Tamil Nadu is most of the Backward Communities have been included in the Backward List. But that is not the case in other parts of India. Now the matter is in court. So, as far as Tamil Nadu is concerned, it is not a problem. But when one sees the reaction in other parts of India, it shows that the Government has been hasty in taking such a decision. They must first educate the people...." என்று சொல்லி. அது நிறைய வருகிறது. அவைகளை விட்டு விடுகிறேன். பிறகு மீண்டும் கடைசிப் பகுதிக்கு நான் வருகிறேன்.

"....Even among the so-called back ward castes, there are many people who are well off, well placed in life society. It makes a mockery of reservation if they are going to be cornering the benefits...."

இதுதான் இப்போது வந்திருக்கிற பிரச்சினை. அதையும் நான் முன்னே படித்துக் காட்டினேன். கோர்ட்டில் சொல்லப்பட்டு இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் படித்துக் காட்டினேன். இறுதியாக சொல்கிறார்கள்.

"....So it should be made clear that it is the economically weaker sections in the Backward Castes who will be given these concessions. Only then can we call it social justice.

Q : Now, even I.A.S. Officer's son is eligible for reservation..........

A : That is what MGR had tried to point out earlier. That was misinterpreted by several others.

Q : The Rs. 9,000 economic ceiling ?

[1991 செப்டம்பர் 30

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

A : What MGR actually meant was the benefit of reservation should be availed of by economically weaker sections among the backward castes. We stand by that. That should be the policy. At the same time, when the Central Government has taken a decision to implement 27 per cent reservation for backward castes, we see nothing wrong in reserving five or ten per cent for the economically weaker sections among the forward castes. Then that would automatically defuse the situation...." என்று அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் வேறு விஷயங்களுக்குள் போக வேண்டும் என்று ரொமப விரும்பினார்கள். அதனால்தான அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவாகள் சொல்லியிருக்கிறார்கள். நாங்களும அதையேதான் சொல்லுகிறோம். வி.பி. சிங் கொண்டு வந்த இட ஒதுக்கீடு என்பது அவர் இட ஒதுக்கீடு தரவேண்டும் என்பதற்காக அல்ல ஏதோ ஒன்றை நிறைவேற்றி தன்னுடைய பதவியை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு வந்ததுதானே தவிர வேறு அல்ல. (குறுக்கீடு) வி.பி. சிங் அறிவித்த பரிந்துரைகளின்படி பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள் அதையேதான் நான் சொல்லுகிறேன். புதிதாக நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர் பேசியதைத்தான் நான் சொல்லுகிறேன். கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்படவில்லை.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவியை பாதுகாத்துக்கொள்வதற்காகத்தான் இதை அறிவித்தார்கள் என்று கூறுவது பொருத்தம் இல்லை. இப்போது அறிவித்து இருக்கிறீர்களே அதே மண்டல் கமிஷன் அறிக்கை 27 சதவீதத்தை, இப்போது எதைப் பாதுகாக்க என்பதை விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் ஒருவரை அனுமதித்தேன். இப்படி ஒவ்வொருவரும் விளக்கம் கேட்டால் எப்படி, உங்கள் சார்பில்தான் இப்போது அவர் கேட்டார். எதிர்க் கட்சித் தலைவர் முடியுங்கள். நீங்கள் பேசுங்கள்



1991 செப்டம்பர் 30]

**திரு. ஜி. பழனிசாமி :** தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பழனிசாமி கவனிக்க வேணடும. ஒருவருககு வாய்ப்புக் கொடுத்தேன். உங்கள் 3 பேர் சாாபலதான அவா கேட்டார்.

பிற்பகல் 2-00

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணடல் கமிஷனுடைய அறிக்கை மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். நான் சொல்ல விரும்பு வமதல்லாம் வி.பி.சிங் அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக வரவில்லை என்று சொன்னால், காங்கிரஸ் கட்சி 100 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தினாலும், மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை அமல் படுத்த மாட்டார்கள் என்பதை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். (ஓர் உறுப்பினர் மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலேதான், அதைத் தொடர்ந்து. ... (மணி யடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பதில் சொல்கின்றபோது, அதே கட்சியைச் சார்ந்த இன்னொருத்தர் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்கக்கூடாது. (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நால்வர் அணியிலிருந்து இந்த மண்டல் கமிஷனுடைய விவாதத்தைக் கொஞ்சம் காப்பாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நால்வர் அணியை மட்டும் அல்ல உங்களையும் சேர்த்து, எல்லோரிடமிருந்தும் அதைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது (சிரிப்பு). ஆகவே, அதிகமாக, இதிலே அரசியலுக்குப் போகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 30

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இட ஒதுக்கீட்டை அமல்படுத்தி யிருப்போம். இட ஒதுக்கீடு என்பதற்கே வேதம் இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள் அல்ல. சமுதாய நீதிக்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுதான் மண்டல் குழுவே தவிர, மண்டல் குழுவே வேதம் எழுதி விட்டதாக நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். காங்கிரஸ் கட்சியும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. பரிந்துரைகளினுடைய சில பகுதிகளை அன்றைக்கே ஏற்றுக்கொண்டோம். இப்போதும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும்; அமல்படுத்த வேண்டுமென்று சொன்னால், ஏதோ மண்டல் மட்டுமே இது போன்ற பரிந்துரைகளைச் செய்ததாகவும், காங்கிரஸ் கட்சி அதற்கு எதிராக இருப்பதைப் போலவும் தோற்றம் அளிப்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். காங்கிரஸ் கட்சியினுடைய நிர்மானத் திட்டங்கள், காங்கிரஸ் கட்சியினுடைய காந்தி காலத்திலே வந்த நிர்மானத் திட்டங்களெல்லாம் கிராமப்புறங் களிலே வாழ்கின்ற பின் தங்கிய மக்கள், ஏழை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு நிர்மானத் திட்டங்களை இவர்கள் கொண்டு வந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும்; வேலையிலே மட்டும் அல்ல, கல்வியிலேயும் வேண்டும், அனைத்து இலாக்காகளிலேயும் இட ஒதுக்கீடு வேண்டும் என்று கொண்டுவந்த கட்சி காங்கிரஸ் கட்சி, என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே காங்கிரஸ் கட்சி, இட ஒதுக்கீட்டுக்கு எதிராக நிச்சயமாக இருக்காது. இட ஒதுக் கீட்டிற்கு எதிரான நிலையில் நாங்கள் இல்லை என்பதை தெளிவு படுத்த விரும்புகிறேன். அவர் கொண்டுவந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை எப்படியெல்லாம் மண்டல் கமிஷனுடைய பரிந்துரை களுக்கு எதிராக இருந்தது; எப்படியெல்லாம் இட ஒதுக்கீடு என்பதே பயனற்று இருந்தது என்பதை அவை முன்னவர் அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். எனவே நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. இரண்டொரு வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். வி.பி.சிங் கொண்டு வந்ததில், கல்வி நிறுவனங்களிலே இட ஒதுக்கீடு கிடையாது. பாதுகாப்புத் துறையிலே கிடையாது; அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறை யிலே கிடையாது. அதேபோல அட்டாமிக் எனர்ஜியிலே



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கிடையாது. பல்வேறு புரமோஷனில் கிடையாது. பதவி உயர் வுக்கு ரிசர்வேஷன் கிடையாது. இது மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளுக்கே எதிரானது. போதும் பின்தங்கிய மக்களுக்கும் நலிந்த பிரிவு மக்களுக்கும் மத்தியிலே முன்னுரிமை தரவில்லை. பிறப்பால் முன்னேறிய சமுதாயத்தைச் சார்ந்திருந்தாலும் பொருளாதாரத்தில் வறிய நிலையில் வாடிக்கொண்டிருப்பவர் களுக்குக் கை கொடுத்து உதவும் வகையில் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இவையெல்லாம் மக்கள் நல அரசு "வெல்பேர் ஸ்டேட்" என்ற அந்தக் கோட்பாட்டிற்கே எதிரானது. அதே போன்று ஜாதிய அடிப்படையிலான ஒதுக்கீடுகள் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறுகிறது. இதைத்தான் உத்தரவாதப்படுத்தி யிருக்கிறது. அரசியல் சட்ட அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள ஜாதிகளுக்கு மட்டுமே ஜாதி அடிப்படை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதேபோன்று பழங்குடியின ருக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுதவிர சிறு பான்மை மக்களாகிய ஆங்கிலோ இந்திய சமூகத்தினரை ஒரே குழுவாக, 'கம்யூனிட்டி' என்று சொல்கிறார்கள். வெட்யூல்ட் காஸ்ட் என்கிறார்கள்; பேக்வார்ட் கிளாஸஸ் என்கிறார்கள்; ஆனால் ஆங்கிலோ இந்தியன் கம்யூனிட்டி என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரிவுகளைத் தவிர, ஏனைய அனைத்து மக்களிடையே பல்வேறு அம்சங்களைக் கொண்டு ஒதுக்கீடுகள் வழங்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஜாதியின் அடிப்படையிலேதான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆங்கிலத்தில் "அதர் பேக்வர்ட் கிளாஸஸ்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் பொருளாதாரம் உட்பட பல்வேறு வகையிலும் பின்தங்கிய மக்களை ஜாதி மற்றும் கல்வி அடிப்படையில் மட்டும் பிரித்து இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தார். இது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பதால், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுக்கப்பட்டு தடையுத்தரவு பெறப்பட்டிருக்கிறது. தற்போது உத்தரப்பிரதேச மாநில அரசு ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீட்டுக்கு வகை செய்து பிறப்பித்த அவசரச் சட்டமும் அலாகாபாத் உயர்நீதிமன் றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பின்னணியிலே தான் மத்திய அரசு தன்னுடைய நிலையினை உச்சநீதி மன்றத்

[1991 செப்டம்பர் 30

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

திருத்த எடுத்துக்கூறி இருக்கிறது. அனைத்துக் கட்சிகளையும் கலந்து ஆலோசித்து உருவான ஒருமித்த கருத்தை உச்சநீதி மத்திய அரசு தெரிவித்து இருக்கிறது. அரசியல் ஆதாயம் கருதி செயல்படும் தேசிய முன்னணி மாத்திரம் அதில் ஒரு தீர்மானத்தை உருவாக்கத் தவறிவிட்டது. தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள தெலுங்கு தேசம் மற்றும் பல தலைவர்களும் பிரதமர் நிலையை ஆதரித்து இருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், பாரதீய ஜனதாவும் பிரதமருடைய நிலைக்கு தங்களுடைய வலுவான ஆதரவைத் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றையதினம் காலையிலே பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. ஜனதா தளத்தினுடைய தலைவர் அஜித்சிங் பிரதமருடைய நிலைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

பிற்பகல் 2-05

ஜார்ஜ் பெர்னாண்டஸ், ரஷீத் மசூத், பிஜு பட்நாயக் ஆகியவர்களும் பிரதமருடைய நிலைக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாக வந்திருக்கிறது. மத்திய அரசு அறிவித்துள்ள ஒதுக்கீடு இன்றையதினம்—கிட்டத்தட்ட 62.5 சதவிகிதத்திற்கு வருகிறது; அது 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறது என்று விமர்சனம் வந்திருந்தாலும், பெரும்பாலான மக்கள் தொகையின் சமூகநலன் கருதி, மத்திய அரசு இதை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையினை உச்சநீதிமன்றம் உட்பட, அனைத்துப் பிரிவினரும் புதிய அணுகுமுறையோடு ஆதரிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இங்கே பலர் பேசுவார்கள் என்று எதிர் பார்த்தேன். பேசவில்லை. கர்ப்பூரி தாகூர் ஃபார்முலா—அதைப்பற்றி பல பேர் அன்றையதினம் அங்கு பேசினார்கள்; அதை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று. வி.பி. சிங் அவர்களோடும் பேசினார்கள்

''Both BJP and CPM have argued with V.P. Singh that something akin to the Karpoori Thakur formula, in which the late CM of Bihar had categorised backward classes as backward and extremely backward according to their economic status, should be evolved to ensure that the poor among the backward classes would benefit from the reservation policy'. ... என்று அன்றையதினம் மற்ற கட்சிகள் அவரோடு பேசினார்கள். அன்றைக்கு அத்தனை கட்சிகள்—அவரை



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

ஆதரித்துக் கொண்டிருந்த கட்சிகள் எல்லாம், கர்ப்பூரி தாகூர் ஃபார்முலா-வை ஏற்றுக் கொள்ள வேண்டும் அதைப் போன்ற, அதன் அடிப்படையிலேதான் நீங்கள் இட ஒதுக்கீடு கொண்டு வரவேண்டுமென்று அவரை ஆதரித்துக் கொண்டிருந்த பெரும்பாலான கட்சிகள் அன்றையதினம் கருத்து தெரிவித்தன. அதைப்போல, சுப்ரீம் கோர்ட்டிலே இட ஒதுக்கீடு எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பல வழக்குகள் வந்திருக்கின்றன. **Balaji vs. State of Mysore.** இப்படி, இன்னும் பல வழக்குகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த வழக்கிலே இருந்து ஒரு 'ஜிஸ்ட்'; சில பகுதிகளை படிக்க விரும்புகிறேன்.

**" It is essential that the privileged section of the under-privileged society should not be permitted to monopolise the preferential benefits for an indefinite period of time. There are two tests. One is that they should be comparable to the SCs and STs in the matterof their backwardness and that they should satisfy the means test such as the State Government may lay down in the context of the prevailing economic conditions The language of Article 15 (4) refers to class and not caste. The classes of citizens who are deplorably poor automatically become socially backward. Because that is not permissible under Article 15 (4), under no circumstances a class can be equated to a caste. Though the caste of an individual or a group of individuals may be a relevant factor in putting him into a particular class, "To treat sharply dissimilar persons equally is subtle injustice. Equal opportunity is a hope, not a menace" —Krishna Iyer J.**

இன்னும் ஒன்றை அவர் சொல்கிறார்.

**" A time has come to review the criticism for identifying socially and educationally backward classes ignoring the caste label. The only criticism which can be realistically devised is the one of economic backwardness. Chronic poverty is the bane of Indian society. The bank balance, the property holding and the money-power determine the social status of the individual and guarantee the opportunities to rise to the top echelon. How the wealth is acquired has lost its significance. Purity of means disappeared with Mahatma Gandhi and we have reached a stage where ends determine the means. If a survey is made with reference to the families in various castes considered to be socially and educationally backward, about the benefits of preferred treatment, it would unmistakably show that the benefits of reservations are snatched away by the top, creamy layer of the backward classes."**

[1991 செப்டம்பர் 30

[திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

கடைசியாக, மிகவும் சிலாகித்து பேசுகிற, நல்ல கமிஷன் ரிப்போர்ட் என்று சொல்லப்படுகிற சின்னப்பரெட்டி கமிஷன் என்று எல்லோரும் சொன்னார்கள். சின்னப்பரெட்டி—அவர் இதைப் பற்றித் தன்து தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்.

"Max Weber gives us a three-dimensional picture of social inequality. According to Weber the three dimensions are class, status and power. His definition of class is very near to that of the Marxist conception. The inequality of class depends primarily on inequality of income and, to some extent, an inequal opportunity for upward mobility. A person's class, according to this definition, is a shared situation in the economic hierarchy and status. According to the second definition, it is generally determined by the style of consumption, though not necessarily by the source of income. A desk-worker considers himself superior to a manual worker. As regards, relevance of both caste and poverty in determining the backwardness, of citizens, poverty by itself is not a determining factor of social backwardness. Poverty, is relevant in the context of social backwardness, the important factor to be noticed in Article 15 (4) is that it does not speak of castes but only speaks of classes. If the makers of the Constitution intended to take castes also as a unit of social and educational backwardness, they would have said so, as they have said in the case of SCs and STs."

பிற்பகல் 2-10

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எவ்வளவு சாதிகள் இருக்கின்றன என்பதற்கு அவை முன்னவர் அவர்கள் ஒரு கணக்கு கொடுத்தார்கள். Dr. Radhakrishnan, Fellow of the Madras Institute ef Development Studies— அவர் இதைப்பற்றி ஒரு கணக்கு எடுத்திருக்கிறார். 1883-ல் 11 தான் இருந்தது. 1893-ல் 39 ஆக உயருகிறது. அதுவோ 1903-ல் 46 ஆக உயருகிறது. பிறகு குறைகிறது. 1923 இல் 131 ஆகிறது. பிறகு 1933-ல் 182 ஆகவும், 1943-ல் 238 ஆகவும், 1953-ல் 270 ஆகிறது.

இப்பொழுது மண்டல் கமிஷன் லிஸ்ட்படி தமிழ்நாட்டிலே இருக்கிற பின்தங்கிய Communities கணக்கு 288. ஆக, இன்றையதினம், பாரதப் பிரதமர் நரசிம்மராவ் அறிவித்துள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இந்தியாவில் உள்ள பிரதான எதிர்கட்சிகள் அத்தனையும் வரவேற்கின்றன. அவருடைய இட



1991 செப்டம்பர் 30]

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

ஒதுக்கீட்டுக் கொள்கையின்படி, பின்தங்கிய சமூகத்தினருக்கு 27 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. பின்தங்கிய சமுதாயத்திலே இருக்கிற, பொருளாதார நிலையில் நலிந்து போயிருக்கிறவர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைக்க வேண்டும். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் இருக்கிறார்கள். He holds a B.E. Degree with distinction. So, first generation என்பது அவரோடு முடிந்து விடுகிறது. அதற்கடுத்து அவர் மகன் கான்வெண்டிலே படித்து இன்றைக்கு அமெரிக்காவிலே இருக்கிறார். அவருக்கும் அந்த ரிசர்வேஷன் வேண்டுமா? அல்லது பண்ருட்டியில் இருக்கிற அதற்குப் பக்கத்தில் இருக்கிற சின்ன கிராமத்தில் அவருடைய சமுதாயத்தைச் சேர்ந்த சாதாரண ஏழைத் தொழிலாளியினுடைய மகனுக்கு அந்த இடம் கிடைக்க வேண்டுமா என்பதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர் முடிக்கட்டும்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்** : அதேபோல் அவரோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். என்னைப்பற்றியும் சொல்கிறேன். கொஞ்சம் இருங்கள். முடித்து விடுகிறேன். எங்களுடைய தலைவர், மூப்பனார் இருக்கிறார் அல்லவா, அவருடைய மகனுக்கும் இந்த இட ஒதுக்கீட்டினுடைய அனுகூலம் செல்லக் கூடாது என்பதை நானே சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அந்தப் பிற்பட்ட வகுப்பினர் கோட்டாவிலே வரவில்லை. என் மகனும் வரவில்லை. அது வேறு விஷயம். ஆனால் இதில் என்ன பிரச்சினை என்றால், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டைத் தருகின்றபொழுது, பொருளாதார வரையறையை உண்டாக்கிவிட்டால், ஒரு ஆயிரம் இடம் இருக்கிறது என்று சொன்னால், 270 இடங்களுக்கு தேவை என்று சொன்னால், அதில் 250 பேர் தான் வருகிறார்கள் என்று சொன்னால், அந்த மீதம் உள்ள 20 இடங்கள் என்ன ஆயின. ஆயிரம் இடங்கள் இருக்கின்றன. கொஞ்சம் வசதிபடைத்தவர்களுக்கும் அதிலே சேர்ந்தால், ஒரு எம்.பி.பி.எஸ்ஸோ, ஒரு க்ரூப்-1 சர்வீஸோ, ஒரு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.பி.எஸ். வருவதற்கு கொண்டு வரமுடியும். . .

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** ஆணையிலே பதில் இருக்கிறது. ஆணையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் 27 சதவிகிதம் பின்தங்கிய சமுதாயத்திற்குப் பொருளாதார நிலையிலே நலிந்த பகுதியினர் வரவில்லை என்று சொன்னால் அதே பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்த வசதி படைத்தவர்களானாலும் அவருக்குத்தான் போய் சேருமே தவிர முன்னேறிய ஜாதியினருக்குப் போகாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். அவசரப்படாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடியுங்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** நான் சொல்லுகிறேன் இருங்கள். பேப்பரிலே வரவில்லையா? படிக்கவில்லை என்றால் நான் என்ன பண்ணட்டும். ஏழு நாள் பேப்பரிலே அதுதான் வந்திருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்லுகிறேன். கொஞ்சம் இருங்கள் அப்புறம் பேசலாம். வி. பி. சிங் தன்னுடைய கட்சிப் பதவிகளுக்கு என்ன சொல்லியிருக்கிறார். பொருளாதார அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்கு மேலே உள்ளவர்களுக்குக் கட்சிப் பதவிகளைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். அதுவும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தான். உள்ளபடியே அதை நம்பிச் சொல்லி இருப்பாரேயானால் இப்பொழுது வரவேற்றிருக்க வேண்டும். கட்சிக்காரர்கள் வரவேற்பது வேறு விஷயம். இங்கே நம்முடைய குமாரதாஸ் அவர்கள் வரவேற்காவிட்டாலும், அவர் கட்சியிலே பெரும்பாலானவர்கள் வரவேற்றார்கள். அது வேறு விஷயம். அவர் தன்னுடைய கட்சியினுடைய தலைமைப் பதவி அஜித்சிங் இடம் போய்விடக் கூடாது என்பதற்காகச் சொன்னார்கள். குறிப்பாக, குறிப்பிட்ட அளவுக்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்குக் கட்சிப் பதவி கிடையாது, கொடுக்கக் கூடாது என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார். எனவே, எதை நம்புகிறோமோ அதையே வெளியிலும் சொல்ல வேண்டும். அவர் அப்படி சொல்வது கிடையாது. நம்பாத ஒன்றைத் சொல்வதால் வருகிற கோளாறுதான் இது. பின்தங்கிய சமுதாயத்திற்கு என ஒதுக்கப்பட்டிருக்கிற 27 சதவிகிதம் அதில் உள்ள பணக்கார வர்க்கம் முழுவதுமாக அதை அபகரித்துக் கொள்வதைத் தடுப்பதற்கே இன்று வந்துள்ள







நரசிம்மராவ் அவர்கள் இட ஒதுக்கீட்டுக் கொள்கைதான் இராஜீவ் காந்தி ஃபார்முலா என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறது. அதையே தான் இராஜீவ் காந்தி அவர்கள் சொன்னாகள். அது தேர்தல் அறிக்கையிலே இருக்கிறது. அதில் ஒரு பகுதியாக நம்முடைய சட்டமன்றப் பேரவையும் தன்னுடைய முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழுவின் பரிந்துரைகள் அமல் படுத்தப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் கோரிக்கைகள் எழுந்த போதும், பிறகு அப்பரிந்துரைகளின் அடிப்படையின் மீது 27 சத விகித இட ஒதுக்கீட்டு ஆணையை மைய அரசு வெளியிட்ட போதும், வட இந்தியாவில் எழுந்த போராட்டத்தின் வேகத் தினையும், வன்முறைகளின் ஆழத்தினையும் நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இப்படி வடக்கு மாநிலங்களில் கொதிப்புக் கிளம்பியபோதும், எதிர்ப்புகள் கிளம்பியபோதும், பெரும்பாலான தென்மாநிலங்கள் நிதானமாக, அமைதியாக, தங்களது பெருந் தன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன. நசுக்கப்பட்ட இந்த மக்கள் தங்கள் சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் முன்னேற வேண்டும் என்று தாகம் கொண்டி ருப்பது அவர்களது அடிப்படை உரிமையாகும். எந்தச் சக்தி அந்த உரிமையைப் பறிக்க நினைத்தாலும் அது கண்டிக்கக்கூடிய செயல்மட்டுமல்ல, காட்டுமிராண்டித்தனமான செயலும் ஆகும். சுதந்திரம் பெற்ற எந்த நாட்டிலும் மக்களுக்கான சமூக நீதி முன்னுரிமையோடு காக்கப்பட வேண்டும் என்பதுதான் சத்தியம் தழுவிய தத்துவமாகும்.

பிற்பகல் 2-15

நமது மாநிலத்தில் தற்போது முற்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் களுக்கு—முற்பட்டோர் அல்ல, பிற்பட்டோர்—வழங்கப்படுகிற இட ஒதுக்கீடுகள் பல்வேறு அனுபவங்களின் விளைவால் நமக்குக்

கிடைத்துள்ள நன்மைகள் ஆகும். ஒரு நியாயமான சலுகை வழங்குவதற்கு, முன்பு அரசியல் காரணங்களுக்காக, அவை வழங்கப்படுகிற வேகம் பலமுறை தடுக்கப்பட்டுள்ளது. நிர்வாக காரணங்களுக்காகத் தேவையான நன்மைகளை விரும்பிய வண்ணம் உடன் நீடிக்க முடியாத நிலைமையும் இருந்து வந்திருக்கிறது.

சில கட்டங்களில் நீதிமன்றங்களின் உத்தரவினால் இப்படிப் பட்ட பொது நன்மைகள் தள்ளிப் போடப்பட்டும் இருக்கின்றன. எது எப்படி நடந்தாலும் இறுதி வெற்றி நியாயத்தின் பக்கமே எந்த நேரத்திலும் இருந்திருக்கிறது என்பது நமது அனு பவத்தின் பாடமாகும். ஒரு இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை அமல்படுத்துகிறபோது அதனால் பயனடைகிற மக்களின் நியா யத்தையும், அதன்மூலம் பயனடையாத சில இன மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படுவதே அறிவாண்மை யாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்த அடிப்படையில் தான் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக் கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தி னார்கள். நல்லது எது நடந்தாலும் அது தங்களுடைய முயற்சி யால்தான் வந்தது என்று கூறிக்கொள்ளும் ஒருசில தலைவர்கள் தமிழ்நாட்டில் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைக்கூட நாம் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு மேல் பயனுள்ள ஒரு திட்டத்தை வேறு யாராவது அறிவித்துவிட்டால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத மனப்புழுக்கம் அவர் களுக்கு அதிகமாகவே உண்டு என்பதையும் நான் அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவர்களுக்கும் நல்லதல்ல; அவர்களை நம்பி இருப்பவர்களுக்கும் நல்லதல்ல என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டு வரலாறு 1854-வது ஆண்டிலேயே தொடங்கியது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். ஆக, 100 ஆண்டுகளுக்கு மேலாக, 1854 முதலே தமிழ்நாடு இந்தியாவுக்கே ஒரு முன்னோடி மாநிலமாக இருந்துவருகிறது என்ற உண்மையை







எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே புரிய வைத்திருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நூற்றாண்டிலும் தமிழகம் இந்தியாவுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்திருக் கிறது. இப்போதும் அந்த வரலாற்றைத் தமிழகம் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மத்திய அரசு இப்பொழுது புதிதாக ஒரு முடிவை அறிவித்து இருக்கிறது. இதைப்பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மத்திய அரசாங்கம் ஒரு 'நோட்டிஃபிக்கேஷன்' இஷ்யு செய்திருக்கிறதே தவிர அது இன்னும் அமல்படுத்தப்படவில்லை. அது சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் நாளைதான் தன்னுடைய தீர்ப்பை அறிவிக்கப் போகின்றது. எனவே சுப்ரீம் கோர்ட்டின் இறுதியான தீர்ப்பு வரும் வரை இதைப்பற்றி நாம் எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வரும் கூறிய கருத்துக்களிலிருந்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு சமுதாய நீதி வழங்கப்பட வேண்டும்; அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான எல்லாவிதமான வாய்ப்புக் களையும் வசதிகளையும் பெறவேண்டும் என்பதில் எவருக்கும் இரண்டாவது கருத்து இல்லை என்பது இன்று தெள்ளத் தெளி வாக்கப்பட்டுவிட்டது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இப்போது வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர் மானத்தை நிறைவேற்றித் தருமாறு மீண்டும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மறுப்போரே இல்லை. எனவே தீர்மானம் ஒருமன தாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

158380



[பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை (1—10—1991) முற்பகல் 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-20 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

122. அரசு போக்குவரத்து நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய வரியினை மாதாந்திர அடிப்படையில் மாற்றியமைப்பது குறித்து உள் (போ.அ) துறையின் 23—4—1991 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

123. ஒப்பந்தத்தின் பேரில் மட்டும் இயங்குவதற்காக அனுமதி யளிக்கப்பட்ட மோட்டார் வண்டிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து உள் (போ.அ) துறை யின் 30—7—1991 ஆம் நாளிட்ட 1203 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.**

137. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1991-92.

138. பொதுக் கணக்குகள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1991-92.

139. பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1991-92.

140. பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை, 1991-92.

141. பொதுக் கணக்குக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை, 1991-92.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.